# மேல்நிலை நிதிக் கணக்கியல்









முனைவர் கோ. கணேசன்

TAMILNADU STATE COUNCIL FOR HIGHER EDUCATION
RELEVANCE AND EXCELLENCE

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
காமராசர் சாலை, சென்னை - 600 005.

# மேல்நிலை நிதிக் கணக்கியல்

## முனைவர் கோ. கணேசன்

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
சென்னை – 600 005.

முதற் பதிப்பு : 2011

பதிப்புரிமை : தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
சென்னை – 600 005

நூலின் பெயர் : மேல்நிலை நிதிக் கணக்கியல்



நூலாசிரியர் : முனைவர் கோ. கணேசன்,
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,
வணிகவியல் துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் 641 046.

மறு ஆய்வு செய்தவர் : முனைவர் எஸ். பாலகிருஷ்ணன்,
வணிகவியல் பேராசிரியர் (ஓய்வு),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் 608 002.

தமிழ் திருத்தம் செய்தவர் : முனைவர் மு.கோவிந்தராசன்,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
உலகநாத நாராயணசாமி கல்லூரி,
பொன்னேரி 601 204.



விலை : ரூ.58.00

அச்சிட்டோர் : மீரா ஆப்செட் பிரிண்டர்ஸ்,
104, வெங்கட்ரங்கம் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை 600 005, போன் : 9444243031



DR. T.P.M. LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY
299153

# மேல்நிலை நிதிக் கணக்கியல்

(தாள் - I)

## பொருளடக்கம்


| அலகு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| I. | கூட்டாளிகளின் சேர்ப்பு மற்றும் விலகல் - சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறு மதிப்பீடு – பதிவு செய்ய வேண்டிய மற்றும் பதிவு தேவையற்ற சொத்துகளும் பொறுப்புகளும். | 1 – 42 |
| II. | கூட்டாளி இறப்பு, கூட்டாண்மை கலைப்பு - கார்னர் எ முர்ரே வழக்கு முடிவு - சிறுசிறு ரொக்க பகிர்வு முறை – அதிகபட்ச நட்ட முறை - கூட்டாண்மை நிறுவனங்கள் இணைப்பு - கூட்டாண்மை நிறுவன விற்பனை. | 43 – 98 |
| III. | கிளை நிறுவன கணக்குகள் - பொருள் - வகைகள் - சார்புக் கிளை நிறுவனங்களின் கணக்கியல் - கடனாளிகள் முறை - இடாப்பு விலை மற்றும் விற்பனை முறை கணக்குகள் - சரக்கிருப்பு மற்றும் கடனாளிகள் முறை. | 99 – 151 |
| IV. | துறை வாரிக்கணக்குகள் - பொருள் - துறைக்கும் கிளைக்கும் உள்ள வேறுபாடுகள் - துறை வாரிக்கணக்கியல் வகைகள் மற்றும் பதிவு நுணுக்கங்கள். | 152 – 178 |
| V. | வாடகைக் கொள்முதல் - பொருள் - கணக்குப் பதிவு முறை – தவணைத் தவறல் மற்றும் பொருள் மீட்டல் - வாடகைக் கொள்முதல் வியாபாரக் கணக்கு – சரக்கு இருப்பு மற்றும் கடனாளிகள் முறை. | 179 – 225 |

## அலகு I

கூட்டாளிகளின் சேர்ப்பு மற்றும் விலகல் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு.

### கூட்டாளிகளின் சேர்ப்பு

புதிய கூட்டாளியை ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு முக்கியமாகக் கருதப்படுவது கூடுதல் மூலதனம் அல்லது திறமை அல்லது இவை இரண்டும். புதிய கூட்டாளி பணம் ஈட்டுவதற்கு இரண்டு உரிமைகள் உள்ளன. ஆவை முறையே,

அ. வியாபாரத்தின் இலாபத்தைப் பகிர்வதற்கான உரிமை.

ஆ. கூட்டாண்மையின் சொத்தைப் பகிர்வதற்கான உரிமை என்பவாகும்.

கூட்டாளிகளின் சேர்க்கையின் போது கீழக்காணும் முக்கியக் குறிப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

1. புதிய விகிதம் மற்றும் தியாக விகிதத்தின் கணக்கிடல்.
2. நற்பெயரைக் கணக்கிடல்
3. சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மறுமதிப்பீடு.
4. வழங்கப்படாத ஒதுக்கீடு, இலாபம் அல்லது நஷ்டத்தைச் சரிக்கட்டல்.
5. கூட்டாளிகளுக்கிடையே மூலதனத்தைச் சரிக்கட்டல்

### விகிதத்தினை கணக்கிடல்

புதிய கூட்டாளி, நிறுவனத்தில் சேர்க்கப்பட்ட தேதியிலிருந்து வியாபாரத்தின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள உரிமை அளிக்கப்படுகிறது. இவ்வாறு புதிய கூட்டாளியைச் சேர்க்கும்பொழுது பழைய கூட்டாளிகளின் இலாபம் குறைக்கப்படும். இந்த இலாபம் அனைத்துக் கூட்டாளிகளுக்கிடையே, புதிய கூட்டாளிகளையும் சேர்த்து பகிரப்படும். இதனால் புதிய கூட்டாளி இலாபம் அடைவார். மற்றும் பழைய கூட்டாளி இலாபத்தை இழப்பார். புதிய கூட்டாளிகளுக்காக பழைய கூட்டாளி தன் இலாப விகிதத்தை

இழக்கப்படுவதால் அவ்விகிதம் 'தியாக விகிதம்' என்று அழைக்கப்படும்.

இவ்விகிதம் புதிய கூட்டாளியை சேர்க்கப்படும்போது புதிய விகிதம் மற்றும் பழைய கூட்டாளிகளுக்கிடையே இருக்கும் பழைய விகிதம், ஆகிய இரண்டு விகிதத்தில் உள்ள வேறுபாட்டிற்குச் சமமாகக் கருதப்படுகிறது. இலாபம் வழங்குதலுக்கும் நற்பெயர் கணக்கிடலுக்கும் புதிய விகிதம் மற்றும் தியாக விகிதம் முக்கியக் காரணிகளாக இருக்கின்றன.

பழைய கூட்டாளி மற்றும் புதிய கூட்டாளிகளுக்கிடையுள்ள ஒப்பந்தத்தைச் சார்ந்து புதிய விகிதம் கணக்கிடப்படுகிறது. அவற்றின் பல்வேறு வகைகள் பின்வருமாறு:

**வழக்கு அ:**

புதிய கூட்டாளிக்கு பங்கு கொடுக்கப்படுகிறது மற்றும் மீதமுள்ள இலாபத்தைப் பழைய கூட்டாளிகளுக்கிடையே பழையவிகிதத்தில் பகிர்ந்து கொள்ள ஊகிக்கப்படுகிறது.

**எடுத்துக்காட்டு – 1**

A மற்றும் B கூட்டாளிகள் 3:2 என்ற விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர். C என்பவர் 1/3 என்ற முனைம விகிதத்தில் சேர்க்கப்படுகிறார். புதிய விகிதம் மற்றும் தியாக விகிதத்தைக் காண்க.

**தீர்வு:**

C'யின் பங்கு = 1/3

இருப்பு = 2/3( இதில் A க்கு 3/5, B க்கு 2/5 கிடைக்கும்)

Aஇன் பங்கு = 2/3 X 3/5 = 6/15

Bஇன் பங்கு = 2/3 X 2/5 = 4/15

Cஇன் பங்கு = 1/3 = 5/15

இதனால் புதிய விகிதம் 6:4:5

தியாக விகிதம் = பழைய விகிதம் — புதிய விகிதம்

A = 3/5 – 6/15 = 45-30/75 = 15/75

B = 2/5 – 4/15 = 30-20/75 = 16/75

இதனால் A மற்றும் Bக்கு இடையே தியாக விகிதம் 15:10 அல்லது 3:2.

**குறிப்பு:**

புதிய கூட்டாளிக்கு எதிர்கால இலாபத்திலிருந்து 1/3 பங்கு கொடுக்கப்படுகிறது மற்றும் மீதமுள்ள 2/3 பங்கை A மற்றும் B 3:2 என்ற பழைய விகிதத்தில் பகிர்ந்துக் கொள்ள வேண்டும், A மற்றும் B ஆகியோருக்கு இடையே உள்ள விகிதம் புதிய கூட்டாளியை சேர்ப்பதற்கு முன்பும், பின்பும் அதே விகிதமாகும். அப்படியானால், தியாக விகிதம் ஒரே விகிதமாக இருக்கும். அதாவது 3:2 என்ற அதே விகிதமாகும். எனவே இவ்வழக்கில், தியாக விகிதம் என்பது ஒன்றுமில்லை அது பழைய விகிதமாகும்.

**வழக்கு ஆ:**

இன்னும் சில வழக்குகளில் புதிய கூட்டாளி தன் பங்கினை மற்ற கூட்டாளிகளிடமிருந்து குறிப்பிட்ட விகிதத்தில் வாங்குவார்.

**எடுத்துக்காட்டு – 2**

A மற்றும் B 5:3 என்ற இலாப விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். ‘C’ 5/8 என்ற விகிதத்தில் சேர்க்கப்பட்டார். A’யிடமிருந்து 2/8 பங்கு மற்றும் B’யிடமிருந்து 1/8 பங்குகளை C வாங்கினார். புதிய விகிதத்தை காண்க.

தீர்வு:

A : B = 5 : 3

A-யிடமிருந்து 2/8 மற்றும் B – யிடமிருந்து 1/8 பங்குகளை C வாங்கினார்.

Aஇன் புதிய பங்கு = 5/8 - 2/8 = 3/8

Bஇன் புதிய பங்கு = 3/8 - 1/8 = 2/8

Cஇன் புதிய பங்கு = 3/8

புதிய விகிதம் 3 : 2 : 3

தியாக விகிதம் 2 : 1

**வழக்கு இ:**

சில சமயங்களில், பழைய கூட்டாளிகள் புதிய கூட்டாளிகளுக்காக அவர்கள் பங்கிலிருந்து ஒரு பகுதியைச் சமர்ப்பிக்க வேண்டும். (புதிய கூட்டாளிக்காகப் பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தை ஒன்று சேர்த்து கூட்டும் போது அதைத் தியாகம் செய்கிறார்கள்.)

**எடுத்துக்காட்டு – 3**

A மற்றும் B 7 : 3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொண்டனர். C என்பவர் கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார். A என்பவர் 1/7 பங்கையும் B என்பவர் 1/3 பங்கையும் C என்பவருக்கு கொடுத்தனர். புதிய விகிதம் மற்றும் தியாக விகிதத்தை காண்க.

தீர்வு:

Aஇன் பழைய பங்கு = 7/10

Aஇன் கொடுக்கப்பட்ட பங்கு = 7/10 X 1/7 = 7/70 அல்லது 1/10

∴ Aஇன் புதிய பங்கு = 7/10 – 1/10 = 6/10

Bஇன் பழைய பங்கு = 3/10

Bஇன் கொடுக்கப்பட்ட பங்கு = 3/10 X 1/3 = 3/30 அல்லது 1/10

∴ Bஇன் புதிய பங்கு = 3/10 – 1/10 = 2/10

தியாக விகிதம் 1/10 : 1/10 அல்லது 1 : 1

Cஇன் பங்கு = 1/10 + 1/10 = 2/10

நிகர லாபம் = 6/10 : 2/10 : 2/10 or 3 : 1 : 1.

**நற்பெயர் கணக்கிடல்**

வழக்கமான இலாபத்திற்கு மேலாக வியாபாரத்தின் தகுதியைச் சம்பாதிப்பதைக் குறிக்கும் பதம் "நற்பெயர்". வியாபாரத்தில் நற்பெயரை மதிப்பிடுவதற்கு அவை பல்வேறு காரணிகள் மற்றும் பல்வேறு முறைகளையம் சார்ந்துள்ளது.

புதிய கூட்டாளியைச் சேர்க்கும் போது நற்பெயரைக் கணக்கிடுவதற்கு பல்வேறு முறைகளை ஒரு நிறுவனத்தின் புத்தகத்தில் கணக்கிடப்படுகிறது. அவை மூன்று வகைகள்.

1. முனைம முறை
2. மறுமதிப்பீடு முறை
3. நினைவுக் குறிப்பு மறுமதிப்பீடு முறை

**1. முனைம முறை:**

புதிய கூட்டாளி என்பவர் நற்பெயரின் பங்கை ரொக்கமாக கொண்டு வரும்போது இம்முறை பின்பற்றப்படுகிறது.

அ. புதிய கூட்டாளி மேலே கூறிய ரொக்கத்தைத் தனியாகச் செலுத்தும்போது நிறுவனத்தின் புத்தகத்தில் பதிவுகள் ஏதும் தேவையில்லை.

ஆ. நிறுவனம் மூலமாகப் புதிய கூட்டாளியால் செலுத்தப்படும்போது, கீழ்வரும் பதிவுகள் தேவைப்படும்.

ரொக்கக் க/கு ப

நற்பெயர் க/கு

(புதிய கூட்டாளியால் நற்பெயருக்கு ரொக்கம் கொண்டு வரப்பட்டது)

நற்பெயர் க/கு ப

பழைய கூட்டாளியின் முதல் க/கு

(புதிய கூட்டாளியால் நற்பெயருக்கு ரொக்கம் கொண்டு வரப்பட்டதைப் பழையக் கூட்டாளிகளுக்கு நட்ட விகித்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது)

2. மறுமதிப்பீடு முறை:

நிறுவனத்தின் புத்தகத்தில் நற்பெயரை, ஆரம்பிப்பதற்கோ, அல்லது உருவாக்குவதற்கோ, கூட்டுவதற்கோ அல்லது உயர்த்துவதற்கோ முடிவு செய்யும் பொழுது இம்முறை பின்பற்றப்படுகிறது. இம்முறையில் நற்பெயர் இருப்பு நிலையில் தோன்றும். நற்பெயரை உயர்த்துவதற்கான பதிவு கீழக்காணும் வகையில் இருக்கும்.

நற்பெயர் க/கு ப

பழையக் கூட்டாளிகளின் முதல் க/கு

(பழைய விகித்தின் படி நற்பெயர் உயர்த்தப்பட்டது)

3. நினைவுக் குறிப்பு மறுமதிப்பீடு முறை

நற்பெயரின் கணக்கை நீக்குவதற்கும், உருவாக்குவதற்கும் முடிவு செய்யப்பட்டால் இம்முறை பின்பற்றப்படும். நற்பெயரை உருவாக்குவதற்கு மறுமதிப்பீடு முறையில் கூறப்பட்ட பதிவு இங்குப் பதிவு செய்யப்படும். நற்பெயரை நீக்குவதற்கான பதிவு கீழக்காணும் வகையில் இருக்கும்.

அனைத்து கூட்டாளிகளின் முதல் க/கு ப

(புதிய கூட்டாளியையும் சேர்த்து)

நற்பெயர் க/கு

(புதிய விகிதத்தில் நற்பெயர் நீக்கப்பட்டது)

எடுத்துக்காட்டு – 4

A மற்றும் B என்ற கூட்டாளிகள் இலாப & நட்டத்தை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்தனர். C என்பவர் 1/5 என்ற பங்கில் சேர்க்கப்பட்டு, ரூ.2500 பங்கிலிருந்து முனைமத்திற்காக ரூ.1000

செலுத்துகிறார். புத்தகத்தில் நற்பெயர் கணக்கு ரூ.5000க்கு தோன்றப்பட்டது. கீழே கூறப்பட்ட விவரங்கள் இருந்தால் என்னென்ன பதிவுகள் செய்யப்படும்.

அ. புத்தகத்தில் எந்த நற்பெயரும் தோன்றப்படக்கூடாது.

ஆ. புத்தகத்தில் ரூ.12,500க்கு நற்பெயர் தோன்றப்பட வேண்டும்

இ. புத்தகத்தில் ரூ.5000க்கு நற்பெயர் தோன்றப்பட வேண்டும்.

தீர்வு:

அ. புத்தகத்தில் எந்த நற்பெயரும் தோன்றப்படக்கூடாது.

முனைம முறை

| | விவரங்கள் | | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| | ரொக்க க/கு | ப | 1000 | |
| | Cஇன் நடப்பு க/கு | ப | 1500 | |
| | Cஇன் முதல் க/கு | | | 2500 |
| | (C முதல் கணக்கிலிருந்த நற்பெயருக்கு தொகை கொடுக்கப்பட வேண்டியது.) | | | |
| | Cஇன் முதல் க/கு | ப | 2500 | |
| | Aஇன் முதல் க/கு | | | 1500 |
| | Bஇன் முதல் க/கு | | | 1000 |
| | (நற்பெயர் தியாக விகிதத்தில் பங்கிடப்பட்டது) | | | |
| | Aஇன் முதல் க/கு | ப | 3000 | |
| | Bஇன் முதல் க/கு | ப | 2000 | |
| | நற்பெயர் க/கு | | | 5000 |
| | (புத்தகத்தில் நற்பெயர் தோன்றியதை நீக்கப்பட்டது) | | | |

## மறுமதிப்பீட்டு முறை:

| | விவரங்கள் | | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| | ரோக்க க/கு | ப | 1000 | |
| | Cஇன் முதல் க/கு | | | 1000 |
| | (C என்பவரால் ரொக்கம் கொண்டுவரப்பட்டது) | | | |
| | நற்பெயர் க/கு | ப | 7500 | |
| | Aஇன் முதல் க/கு | | | 4500 |
| | Bஇன் முதல் க/கு | | | 3000 |
| | (நற்பெயர் அதன் முழு மதிப்பிற்கு உயர்த்தப்பட்டது) | | | |
| | Aஇன் முதல் க/கு | பு | 6000 | |
| | Bஇன் முதல் க/கு | பு | 4000 | |
| | Cஇன் முதல் க/கு | ப | 2500 | |
| | நற்பெயர் க/கு | | | 12500 |
| | (நற்பெயர் புதிய விகிதத்தில் நீக்கப்பட்டது) | | | |

ஆ. புத்தகத்தில் நற்பெயர் ரூ.12500க்கு தோன்றப்பட வேண்டும்.

முனைம முறை

| | விவரங்கள் | | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| | ரொக்க க/கு | ப | 1000 | |
| | Cஇன் நடப்பு க/கு | ப | 1500 | |
| | Cஇன் முதல் க/கு | | | 2500 |
| | (C என்பவர் கொடுக்கப்பட வேண்டிய நற்பெயர்) | | | |
| | Cஇன் முதல் க/கு | ப | 2500 | |
| | Aஇன் முதல் க/கு | | | 1500 |
| | Bஇன் முதல் க/கு | | | 1000 |
| | (நற்பெயர் பங்கிடப்பட்டது) | | | |
| | Aஇன் முதல் க/கு | ப | 3000 | |
| | Bஇன் முதல் க/கு | ப | 2000 | |
| | நற்பெயர் க/கு | | | 5000 |
| | (இப்போதைய நற்பெயர் நீக்கப்பட்டது) | | | |
| | நற்பெயர் க/கு | ப | 12500 | |
| | Aஇன் முதல் க/கு | | | 6000 |
| | Bஇன் முதல் க/கு | | | 4000 |
| | Cஇன் முதல் க/கு | | | 2500 |
| | (முழு மதிப்பில் நற்பெயர் உயர்த்தப்பட்டது) | | | |

## மறுமதிப்பீடு முறை

| | விவரங்கள் | | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| | ரொக்க க/கு | ப | 1000 | |
| | C ன் முதல் க/கு | | | 1000 |
| | (C என்பவரால் ரொக்கம் கொண்டுவரப்பட்டது) | | | |
| | நற்பெயர் க/கு | ப | 7500 | |
| | A ன் முதல் க/கு | | | 4500 |
| | B ன் முதல் க/கு | | | 3000 |
| | (முழு மதிப்பில் நற்பெயர் உயர்த்தப்பட்டது) | | | |

இ. புத்தகத்தில் நற்பெயர் ரூ.5000க்கு தோன்றப்பட வேண்டும்?

## முனைம முறை

| | விவரங்கள் | | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| | ரொக்க க/கு | ப | 1000 | |
| | Cஇன் நடப்பு க/கு | ப | 1500 | |
| | Cஇன் முதல் க/கு | | | 2500 |
| | (C என்பவர் கொடுக்கப்பட வேண்டிய நற்பெயர்) | | | |
| | Cஇன் முதல் க/கு | ப | 2500 | |
| | Aஇன் முதல் க/கு | | | 1500 |
| | Bஇன் முதல் க/கு | | | 1000 |
| | (நற்பெயர் பங்கிடப்பட்டது) | | | |
| | Aஇன் முதல் க/கு | ப | 3000 | |
| | Bஇன் முதல் க/கு | ப | 2000 | |
| | நற்பெயர் க/கு | | | 5000 |
| | (நற்பெயர் பழைய விகிதத்தில் நீக்கப்பட்டது) | | | |
| | நற்பெயர் க/கு | ப | 5000 | |

| | | | |
|---|---|---|---|
| | Aஇன் முதல் க/கு | | 2400 |
| | Bஇன் முதல் க/கு | | 1600 |
| | Cஇன் முதல் க/கு | | 1000 |
| | (நற்பெயர் புதிய விகிதத்தில் நீக்கப்பட்டது) | | |

## மறுமதிப்பீடு முறை

| | விவரங்கள் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|
| | ரொக்க க/கு ப | 1000 | |
| | Cஇன் முதல் க/கு | | 1000 |
| | நற்பெயர் க/கு ப | 7500 | |
| | Aஇன் முதல் க/கு | | 4500 |
| | Bஇன் முதல் க/கு | | 3000 |
| | (முழு மதிப்பிற்கு நற்பெயர் உயர்த்தப்பட்டது) | | |
| | Aஇன் முதல் க/கு ப | 3600 | |
| | Bஇன் முதல் க/கு ப | 2400 | |
| | Cஇன் முதல் க/கு ப | 1500 | |
| | நற்பெயர் க/கு | | 7500 |
| | (ரூ.5000க்கு நற்பெயர் கொண்டுவரப்பட்டது) | | |

### எடுத்துக்காட்டு—5

A மற்றும் B ஆகிய கூட்டாளிகளுக்கிடையே இலாப நட்டத்தை 3:2 என்ற விகிதத்தில் பங்கிடுகின்றனர். அவர்களின் இருப்பு நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 1, ஆம் நாளுக்கான A மற்றும் Bஇன் இருப்பு நிலை

| பொறுப்புகள் | ரூ | சொத்துகள் | ரூ |
|---|---|---|---|
| முதல் க/கு: | | நற்பெயர் | 800 |
| A | 10000 | சொத்துகள் நிலையானது மற்றும் நடப்பு | 17200 |
| B | 6000 | | |
| ஒதுக்கீடு க/கு | 2000 | | |
| | 18000 | | 18000 |

ஜனவரி 1 அன்று C என்பவர் 1/3 இலாபப் பங்கில் நிறுவனத்தில் சேர்க்கப்பட்டார். Cஇன் நற்பெயர் பங்கை ரூ.600க்கு கணக்கிடப்பட்டு அதிலிருந்து ரூ.400க்கு மட்டுமே கொண்டுவரப்பட்டது. ஆனபோதிலும், அவர் முதலில் பங்கை ரொக்கமாக ரூ.8000க்கு கொண்டு வந்தார். நற்பெயர் ரூ.1200 புதிய இருப்பு நிலையில் தோன்றப்படவேண்டும்.

குறிப்பேடு பதிவுகள் காட்டுக. முதல் க/கு மாறுபடும். சேர்ப்புக்குப்பின் முதல் க/கு மற்றும் இருப்பு நிலையையும் தயாரிக்கவும்.

**தீர்வு:**

பதிவுகள் இலாப (Premium) முறையில் அல்லது மறுமதிப்பீடு முறையில் செய்யப்பட வேண்டும். எனவே கூட்டாளியின் இலாபம் மற்றும் நற்பெயர் இருப்பு நிலையில் தோன்றப்படுகிறது.

**முனைம முறை**

| | விவரங்கள் | | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| ஜன.1 | ரொக்க க/கு | ப | 8400 | |
| | Cஇன் நடப்பு க/கு | ப | 200 | |
| | Cஇன் முதல் க/கு | | | 8600 |
| | (C என்பவர் ரொக்கம் கொண்டு | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வந்தார். மற்றும் கொடுக்கப்பட வேண்டிய இருப்பை நடப்பு கணக்கிற்கு பற்றாக்கப்படும்) | | | |
| | Cஇன் முதல் க/கு | ப | 600 | |
| | Aஇன் முதல் க/கு | | | 360 |
| | Bஇன் முதல் க/கு | | | 240 |
| | (நற்பெயர் A மற்றும் Bஇடையே தியாக விகிதத்தில் பங்கிடப்பட்டது) | | | |
| | Aஇன் முதல் க/கு | ப | 480 | |
| | Bஇன் முதல் க/கு | ப | 320 | |
| | நற்பெயர் க/கு | | | 800 |
| | (இப்போதைய நற்பெயர் நீக்கப்பட்டது) | | | |
| | நற்பெயர் க/கு | ப | 1200 | |
| | Aஇன் முதல் க/கு | | | 480 |
| | Bஇன் முதல் க/கு | | | 320 |
| | Cஇன் முதல் க/கு | | | 400 |
| | (நற்பெயர் உயர்த்தப்பட்டது) | | | |
| | ஒதுக்கீடு க/கு | ப | 2000 | |
| | Aஇன் முதல் க/கு | | | 1200 |
| | Bஇன் முதல் க/கு | | | 800 |
| | (ஒதுக்கீடு பங்கிடப்பட்டது) | | | |

## முதல் க/கு

| | விவரங்கள் | A ரூ. | B ரூ. | C ரூ. | | விவரங்கள் | A ரூ. | B ரூ. | C ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Aஇன்முதல் க/கு | - | - | 360 | ஜன.1 | இருப்பு | 10000 | 6000 | - |
| | Bஇன்முதல் க/கு | - | - | 240 | | ரொக்கம் | - | - | 8400 |
| | நற்பெயர் | 480 | 320 | - | | Cஇன்நடப்பு க/கு | - | - | 200 |
| | இருப்பு கீ/இ | 11560 | 7040 | 8400 | | நற்பெயர் | 480 | 320 | 400 |
| | | | | | | Cஇன்முதல் க/கு | 360 | 240 | - |
| | | | | | | ஒதுக்கீடு க/கு | 1200 | 800 | - |
| | | 12040 | 7360 | 9000 | | | 12040 | 7360 | 9000 |

## Cஇன் நடப்பு க/கு

| | | | |
|---|---|---|---|
| | Cஇன் முதல் க/கு | 200 | |

## ஜனவரி 1 அன்றைய இருப்பு நிலை

| பொறுப்புகள் | ரூ | சொத்துக்கள் | ரூ |
|---|---|---|---|
| முதல் க/கு: | | நற்பெயர் | 1200 |
| | | சொத்து—நிலையான மற்றும் | |
| A | 11560 | நடப்பு 17200 | |
| B | 7040 | ரொக்கம் 8400 | 25600 |
| C 8400 | | | |
| (—)நடப்பு க/கு 200 | 8200 | | |
| | 26800 | | 26800 |

## மறுமதிப்பீடு முறை

## குறிப்பேடு பதிவுகள்

| | விவரங்கள் | | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| ஜன.1 | ரொக்க க/கு | ப | 8400 | |
| | Cஇன் முதல் க/கு | | | 8400 |
| | (C என்பவரால் ரொக்கம் கொண்டு வரப்பட்டது) | | | |
| | நற்பெயர் க/கு | ப | 1000 | |
| | Aஇன் முதல் க/கு | | | 600 |
| | Bஇன் முதல் க/கு | | | 400 |
| | (முழு மதிப்பில் நற்பெயர் உயர்த்தப்பட்டது 1800 – 800 = 1000) | | | |
| | Aஇன் முதல் க/கு | ப | 240 | |
| | Bஇன் முதல் க/கு | ப | 160 | |
| | Cஇன் முதல் க/கு | ப | 200 | |
| | நற்பெயர் க/கு | | | 600 |
| | (அனைத்து கூட்டாளிகளுக்கிடையே நற்பெயர் ரூ.600 நீக்கப்பட்டது) | | | |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடு க/கு ப | 2000 | |
| | Aஇன் முதல் க/கு | | 1200 |
| | Bஇன் முதல் க/கு | | 800 |
| | (ஒதுக்கீடு பங்கிடப்பட்டது) | | |

## முதல் கணக்கு

| | விவரங்கள் | A ரூ. | B ரூ. | C ரூ. | | விவரங்கள் | A ரூ. | B ரூ. | C ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜன1 | நற்பெயர் | 240 | 160 | 200 | ஜன.1 | இருப்பு | 10000 | 6000 | - |
| | இருப்பு கீ/இ | 11560 | 7040 | 8200 | | ரொக்கம் | - | - | 8400 |
| | | | | | | நற்பெயர் | 600 | 400 | - |
| | | | | | | ஒதுக்கீடு | 1200 | 800 | - |
| | | **11800** | **7200** | **8400** | | | **11800** | **7200** | **8400** |

### சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மறுமதிப்பீடு

இவை இரண்டு வழிகளில் செய்யப்படும்.

1. புத்தகத்தில் சொத்துகளுக்கும் பொறுப்புகளுக்கும் செய்ய வேண்டிய பதிவுகள்.
2. புத்தகத்தில் சொத்துகளுக்கும் பொறுப்புகளுக்கும் பதிவுகள் தேவையற்றது.

### 1. புத்தகத்தில் சொத்துகளுக்கும் பொறுப்புகளுக்கும் செய்ய வேண்டிய பதிவுகள்:

புதிய கூட்டாளி நிறுவனத்தில் சேர்க்கப்படும்போது, சம்மந்தப்பட்டவர்களின் விருப்பப்படி நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்யப்படும். பழைய கூட்டாளிகளுக்கு மட்டுமே பழைய விகிதத்தின் மறுமதிப்பீட்டில் இலாப & நட்டம் செய்யப்படுகிறது மற்றும் அதில் புதிய கூட்டாளிகளுக்கு எந்தப் பங்கும் இல்லை, அது முந்தைய இலாப & நட்டமாகும். இந்த மறுமதிப்பீட்டைச் செய்வதற்கு மறுமதிப்பீடு க/கு மூலம்

செய்யப்படுகிறது.(இதை இலாப & நட்ட சரிக்கட்டல் க/கு என்றும் அழைக்கப்படுகிறது). அதன் பதிவுகள் பின்வருமாறு:

1. சொத்தின் மதிப்பு உயர்ந்திருந்தால்

   சொத்து க/கு ப

   மறுமதிப்பீடு க/கு

2. சொத்தின் மதிப்பு குறைந்திருந்தால்

   மறுமதிப்பீடு க/கு ப

   சொத்து க/கு

3. பொறுப்புகளின் மதிப்பு உயர்ந்திருந்தால்

   மறுமதிப்பீடு க/கு ப

   பொறுப்பு க/கு

4. பொறுப்புகளின் மதிப்பு குறைந்திருந்தால்

   பொறுப்பு க/கு ப

   மறுமதிப்பீடு க/கு

5. மறுமதிப்பீட்டில் இலாபத்திற்கு

   மறுமதிப்பீடு க/கு ப

   பழைய கூட்டாளிகள் முதல் க/கு

6. மறுமதிப்பீட்டில் நட்டத்திற்கு

   பழைய கூட்டாளிகள் முதல் க/கு ப

   மறுமதிப்பீடு க/கு

2. புத்தகத்தில் சொத்துகளுக்கும் பொறுப்புகளுக்கும் பதிவுகள் தேவையற்றது.

கூட்டாளிகள் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்ய ஒப்புக்கொண்டால், மறுமதிப்பீட்டில் உள்ள இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் புத்தக மதிப்பில் உள்ள சொத்துகள் (அ) பொறுப்புகளில் மாற்றம் ஏற்படாமல் அவற்றைக் கணக்கில் காட்ட வேண்டும்.

இம்மாதிரி வழக்குகளில், சொத்து மற்றும் பொறுப்புகளின் மதிப்பு உயர்ந்தோ அல்லது குறைந்தோ இருந்தால் நினைவுக்குறிப்பு மறுமதிப்பீட்டுக் கணக்கில் காண்பிக்கப்படும். ஆனால் அவற்றின் ஒத்தியிருக்கும் பதிவை சொத்துகள் அல்லது பொறுப்புகளில் செய்யப்படாது, இருப்பைப் பழைய விகிதத்தில் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் மாற்றப்படும்.

**எடுத்துக்காட்டு – 6**

கீழ்க்காண்பவை A, B மற்றும் C என்ற சமமான கூட்டாளிகளின் இருப்பு நிலையாகும்.

**2008, ஜூன் 1, ஆம் ஆண்டுக்கான A,B &C யின் இருப்பு நிலை:**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் க/கு: | | கட்டிடம் | 19500 |
| A | 16800 | மனைத்துணை | 2400 |
| B | 12600 | சரக்கு | 11400 |
| C | 6000 | கடனாளிகள் | 10800 |
| கடனீந்தோர்கள் | 6000 | ரொக்கம் | 600 |
| மாற்றுச்சீட்டு செலுத்தியது | 3300 | | |
| | 44700 | | 44700 |

D என்பவரைக் கூட்டாண்மையில் சேர்க்க ஒப்புக்கொள்ளப்பட்டு அவருக்கு இலாபத்தில் ¼ பங்கு கொடுக்கப்பட்டது.

1. D என்பவர் ரூ.9000 நற்பெயருக்கு மற்றும் ரூ.15000 முதலுக்கும் கொண்டு வரவேண்டும்.
2. ½ நற்பெயரைப் பழைய கூட்டாளிகளால் எடுக்கப்பட்டது.
3. சரக்கு மற்றும் மனைத்துணையின் தேய்மானம் 10%
4. கடனாளியின் மேல் 5% முன்ஏற்படாத ஐயக்கடன் ஒதுக்கியது.
5. மாற்றுச்சீட்டு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக ரூ.1080க்கு பொறுப்புகள் உருவாக்கப்பட்டது.
6. கட்டிடத்தின் மதிப்பு ரூ.27000க்கு உயர்த்தப்பட்டது.

குறிப்பேடு பதிவுகள் மற்றும் இருப்பு நிலையைத் தயாரிக்கவும்.

**தீர்வு:**

## குறிப்பேடு

| | விவரங்கள் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|
| | ரொக்க க/கு ப | 24000 | |
| | D இன் முதல் க/கு | | 24000 |
| | (D என்பவரால் முதல் மற்றும் நற்பெயருக்கு ரொக்கம் கொண்டு வரப்பட்டது) | | |
| | D இன் முதல் க/கு ப | 9000 | |
| | A இன் முதல் க/கு | | 3000 |
| | B இன் முதல் க/கு | | 3000 |
| | C இன் முதல் க/கு | | 3000 |
| | (நற்பெயர் பங்கிடப்பட்டது) | | |
| | A இன் முதல் க/கு ப | 1500 | |
| | B இன் முதல் க/கு ப | 1500 | |
| | C இன் முதல் க/கு ப | 1500 | |
| | ரொக்கம் க/கு | | 4500 |
| | (ரொக்கம் எடுக்கப்பட்டது) | | |
| | மறுமதிப்பீடு க/கு ப | 3000 | |
| | சரக்கு க/கு | | 1140 |
| | மணைத்துணை க/கு | | 240 |
| | வராக்கடனிற்கு ஒதுக்கீடு க/கு | | 540 |
| | மாற்றுச் சீட்டு தள்ளுபடி செய்ததற்கு ஒதுக்கீடு | | 1080 |
| | (சொத்துகள் மற்றும் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டது) | | |
| | கட்டடம் க/கு ப | 7500 | |
| | மறுமதிப்பீடு க/கு | | 7500 |
| | (கட்டிடத்தின் மதிப்பு உயர்த்தப்பட்டது) | | |
| | மறுமதிப்பீடு க/கு ப | 4500 | |
| | A இன் முதல் க/கு | | 1500 |
| | B இன் முதல் க/கு | | 1500 |
| | C இன் முதல் க/கு | | 1500 |
| | (மறுமதிப்பீட்டில் உள்ள இலாபம் பழைய | | |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டாளிகளிடையே பங்கிடப்பட்டது) | | |

## மறுமதிப்பீடு க/கு

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| சரக்கு | 1140 | கட்டிடம் | 7500 |
| மணைத்துணை | 240 | | |
| வராக்கடனிற்கு ஒதுக்கீடு | 540 | | |
| மாற்றுச்சீட்டு தள்ளுபடி செய்ததற்கு ஒதுக்கீடு | 1080 | | |
| இலாபம்: | | | |
| A 1500 | | | |
| B 1500 | | | |
| C 1500 | 4500 | | |
| | 7500 | | 7500 |

## முதல் க/கு

| விவரங்கள் | A ரூ | B ரூ | C ரூ | D ரூ | | விவரங்கள் | A ரூ | B ரூ | C ரூ | D ரூ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Aஇன் முதல் க/கு | - | - | - | 3000 | 2008 ஜன.1 | இருப்பு | 16800 | 12600 | 6000 | - |
| Bஇன் முதல் க/கு | - | - | - | 3000 | | ரொக்கம் | - | - | - | 24000 |
| Cஇன் முதல் க/கு | - | - | - | 3000 | | Dஇன் முதல் க/கு | 3000 | 3000 | 3000 | - |
| ரொக்க க/கு | 1500 | 1500 | 1500 | - | | மறுமதிப்பீடு க/கு | 1500 | 1500 | 1500 | - |
| இருப்பு கீ/இ | 19800 | 15600 | 9000 | 15000 | | | | | | |
| | 21300 | 17100 | 10500 | 24000 | | | 21300 | 17100 | 10500 | 24000 |

## 2008, ஜுன்1 ஆம் ஆண்டுக்கான A,B,C & D இன் இருப்புநிலை

| பொறுப்புகள் | ரூ | சொத்துகள் | | ரூ |
|---|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | 6000 | ரொக்கம் | | 20100 |
| மாற்றுச்சீட்டு செலுத்தியது | 3300 | சரக்கு(11400-1140) | | 10260 |
| மாற்றுச்சீட்டு தள்ளுபடி செய்ததற்கு ஒதுக்கீடு | 1080 | கடனாளிகள்<br>(–) ஒதுக்கீடு | 10800<br>540 | 10260 |

| | | | |
|---|---|---|---|
| முதல் க/கு: | | மனைத்துணை(2400-240) | 2160 |
| A | 19800 | கட்டிடம் | 27000 |
| B | 15600 | | |
| C | 9000 | | |
| D | 15000 | | |
| | 69780 | | 69780 |

**எடுத்துக்காட்டு – 7**

முந்தைய வழக்கில் (எடுத்துக்காட்டு—6) கணக்கில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மதிப்புகள் கூறப்பட்டுள்ளது. ரொக்கத்தைத் தவிர மற்ற ஏதும் மாற்றப்படவில்லை. அவ்வாறு இருந்தால் அவற்றின் தீர்வு பின்வருமாறு

**தீர்வு:**

**குறிப்பேடு**

| | விவரங்கள் | | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| | ரொக்க க/கு | ப | 24000 | |
| | D இன் முதல் க/கு | | | 24000 |
| | (D என்பவரால் ரொக்கம் கொண்டு வரப்பட்டது) | | | |
| | D இ முதல் க/கு | ப | 9000 | |
| | A இன் முதல் க/கு | | | 3000 |
| | B இன் முதல் க/கு | | | 3000 |
| | C இன் முதல் க/கு | | | 3000 |
| | (நற்பெயர் பங்கிடப்பட்டது) | | | |
| | A இன் முதல் க/கு | ப | 1500 | |
| | B இன் முதல் க/கு | ப | 1500 | |
| | C இன் முதல் க/கு | ப | 1500 | |
| | ரொக்கக் க/கு | | | 4500 |
| | (ரொக்கம் எடுக்கப்பட்டது) | | | |
| | குறிப்பு மறுமதிப்பீடு க/கு | ப | 4500 | |

| | | | |
|---|---|---|---|
| | Aஇன் முதல் க/கு | | 1500 |
| | Bஇன் முதல் க/கு | | 1500 |
| | Cஇன் முதல் க/கு | | 1500 |
| | (மறுமதிப்பீட்டின் இலாபம் பங்கிடப்பட்டது) | | |
| | Aஇ முதல் க/கு பு | 1125 | |
| | Bஇன் முதல் க/கு பு | 1125 | |
| | Cஇன் முதல் க/கு ப | 1125 | |
| | Dஇன் முதல் க/கு ப | 1125 | |
| | குறிப்பு மறுமதிப்பீடு க/கு | | 4500 |
| | (மறுமதிப்பீட்டில் உள்ள இலாபம் அனைத்து கூட்டாளிகளுக்கும் திரும்பக் கிடைத்தது) | | |

## நினைவுக் குறிப்பு மறுமதிப்பேடு க/கு

| சொத்துகளின் மதிப்பு குறைந்தது மற்றும் பொறுப்புகள் உயர்ந்தது | ரூ. | சொத்துகளின் மதிப்பு உயர்ந்தது மற்றும் பொறுப்புகள் குறைந்தது | ரூ. |
|---|---|---|---|
| சரக்கு | 1140 | கட்டிடம் | 7500 |
| மனைத்துணை | 240 | | |
| வராக் கடனின் ஒதுக்கீடு | 540 | | |
| மாற்றுசீட்டு தள்ளுபடி செய்ததற்கு ஒதுக்கீடு | 1080 | | |
| இலாபம் A 1500 | | | |
| B 1500 | | | |
| C 1500 | 4500 | | |
| | 7500 | | 7500 |
| தலைகீழாக மாற்றியப் பதிவு | 7500 | தலைகீழாக மாற்றியப் பதிவு | 3000 |
| | | Aஇன் முதல் க/கு | 1125 |
| | | Bஇன் முதல் க/கு | 1125 |
| | | Cஇன் முதல் க/கு | 1125 |
| | | Dஇன் முதல் க/கு | 1125 |
| | 7500 | | 7500 |

## முதல் கணக்கு

| | விவரங்கள் | A ரூ | B ரூ | C ரூ | D ரூ | | விவரங்கள் | A ரூ | B ரூ | C ரூ | D ரூ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜன. 1 | Aஇன் முதல் க/கு | - | - | - | 3000 | 2008 ஜன. 1 | இருப்பு | 16800 | 12600 | 6000 | - |
| | Bஇன் முதல் க/கு | - | - | - | 3000 | | ரொக்கம் | - | - | - | 24000 |
| | Cஇன் முதல் க/கு | - | - | - | 3000 | | Dஇன் முதல்க/கு | 3000 | 3000 | 3000 | - |
| | ரொக்க க/கு | 1500 | 1500 | 1500 | - | | குறிப்பு மறுமதிப்பீடு க/கு – (இலாபம்) | 1500 | 1500 | 1500 | - |
| | குறிப்பு மறுமதிப்பீடு க/கு –(இலாபம்) | 1125 | 1125 | 1125 | 1125 | | | | | | |
| | இருப்பு கீ/இ | 18675 | 14475 | 7875 | 13875 | | | | | | |
| | | 21300 | 17100 | 10500 | 24000 | | | 21300 | 17100 | 10500 | 24000 |

## ஜனவரி 1, 2008 ஆம் ஆண்டுக்கான இருப்புநிலை

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | 6000 | ரொக்கம் | 20100 |
| மாற்றுச்சீட்டு செலுத்தியது | 3300 | சரக்கு | 11400 |
| | | கடனாளிகள் | 10800 |
| முதல் க/கு: | | மணைத்துணை | 2400 |
| A | 18675 | கட்டிடம் | 19500 |
| B | 14475 | | |
| C | 7875 | | |
| D | 13875 | | |
| | 64200 | | 64200 |

**கூட்டாளியின் விலகல்**

ஒரு கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலக பல காரணங்கள் இருக்கலாம் மற்றும் மீதமிருக்கும் கூட்டாளிகள் புதிய ஒப்பந்தத்தில் சேர்ந்து வியாபாரத்தை நீடிக்கச்செய்யலாம். கீழ் வருபவை முக்கியக் குறிப்புகளாகும்.

1. நற்பெயர் கணக்கிடல்.
2. சொத்து மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு.
3. விலகிய கூட்டாளிக்கு கொடுக்கவேண்டியத் தொகை மற்றும் அதன் கணக்கைத் தீர்த்தல்.

**1. நற்பெயர் கணக்கிடல்**

கூட்டாளி விலகும் வழக்கில் நீடிக்கும் கூட்டாளிகள் இலாபத்தை உருவாக்குவார்கள். ஏனெனில், எதிர்காலப் பங்கை நீடிக்கும் கூட்டாளிகளிடையே மட்டும் பகிரப்படும். உதாரணத்திற்கு, A,B,C என்ற கூட்டாளிகள் 4:3:2 என்ற விகிதத்தில் இலாப நஷ்டத்தைப் பகிர்ந்து வந்தனர். இதில் B விலகினால், பிறகு A மற்றும் C மொத்த எதிர்கால இலாபத்தைப் பழைய விகிதத்திலோ அல்லது புதிய விகிதத்திலோ பகிர்கிறார்கள். B'யினால் எதை விட்டுவிடப்படுகிறதோ அவை A மற்றும் C 'யினால் அனுபவிக்கப்படுகிறது. எனவே விலகிய கூட்டாளியின் விகிதத்தில் நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு இவை மட்டுமே நியாயமானதாகும். இலாபமடைந்த விகிதம் என்பது புதிய விகிதம் மற்றும் பழைய விகிதம் இடையேயுள்ள வேறுபாடு ஆகும். இந்த நஷ்டத்தை "நற்பெயர்" என்று அழைக்கின்றோம்.

புத்தகத்தில் பல்வேறு வழிகளில் இவைகள் பதிவு செய்யப்படுகிறது.

1. புத்தகத்தில் நற்பெயர் சொத்தாக உயர்த்தப்படும் மற்றும் அனைத்து கூட்டாளிகளையும், விலகிய கூட்டாளிகளையும் சேர்த்து வரவாக்கப்படும்.
2. புதிய விகிதத்தில் நீடிக்கும் கூட்டாளிகளிடையே நற்பெயர் முழு மதிப்பில் உயர்த்தப்பட்டு மற்றும் நீக்கப்படுகிறது.
3. விலகிய கூட்டாளியின் பங்கைக் குறிப்பிட்ட வரை மட்டுமே நற்பெயரில் உயர்த்தப்பட்டு மற்றும் நீக்கப்படுகிறது.
4. நற்பெயர் கணக்கை ஆரம்பிக்காமலேயே, நீடிக்கும் கூட்டாளியின் முதல் கணக்கில் விலகிய கூட்டாளியின் நற்பெயர் பங்கு சரிகட்டப்படும்.

**எடுத்துக்காட்டு — 8**

A, B, C என்ற கூட்டாளிகள் 4:3:2 என்ற விகிதத்தில் இலாப & நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர் Bவிலகியதில் நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு ரூ.21600 புத்தகத்தில் நற்பெயர் தோன்றவில்லை. A மற்றும் C எதிர்கால இலாபத்தை 5:3 என்ற விகிதத்தில் பகிர ஒப்புக் கொண்டனர்.

இலாபமடைந்த விகிதத்தை கணக்கிடுக மற்றும் மேல் கூறிய வழக்கில், ஒவ்வொரு நற்பெயரையும் பதிவாக்கவும்.

**தீர்வு:**

பழைய விகிதம் A,B & C'க்கு இடையே = 4 : 3 : 2

புதிய விகிதம் A,B & C'க்கு இடையே = 3 : 2

இலாபமடைந்த விகிதம் = புதிய விகிதம் — பழைய விகிதம்

A = 5/8 – 4/9 = 45-32 / 72 = 13/72

B = 3/8 – 2/9 = 27-16 / 72 = 11/72

எனவே, A மற்றும் C 13:11 என்ற விகிதத்தில் Bஇன் இழப்பைச் சரிக்கட்ட வேண்டும்.

அ) புத்தகத்தில் நற்பெயர் முழு மதிப்பில் உயர்த்தப்பட்டிருந்தால்

| விவரங்கள் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| நற்பெயர் க/கு ப | 21600 | |
| Aஇன் முதல் க/கு | | 9600 |
| Bஇன் முதல் க/கு | | 720 |
| Cஇன் முதல் க/கு | | 4800 |
| (நற்பெயர் உயர்த்தப்பட்டது) | | |

குறிப்பு:

நற்பெயர் சொத்தாக இருப்பு நிலையில் நீக்கப்படும் வரை தோன்றும்.

ஆ) புத்தகத்தில் நற்பெயர் முழு மதிப்பில் உயர்த்தப்பட்டு மற்றும் நீக்கப்பட்டிருந்தால்

| விவரங்கள் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| நற்பெயர் க/கு ப | 21600 | |
| Aஇன் முதல் க/கு | | 9600 |
| Bஇன் முதல் க/கு | | 7200 |
| Cஇன் முதல் க/கு | | 4800 |
| (அனைத்துக்கூட்டாளிகளுக்கும் நற்பெயரைப் பழைய விகிதத்தில் வரவாக்கப்பட்டது) | | |
| Aஇன் முதல் க/கு ப | 13500 | |
| Cஇன் முதல் க/கு ப | 8100 | |
| நற்பெயர் க/கு | | 21600 |
| (நற்பெயர் புதிய விகிதத்தில் நீக்கப்பட்டது) | | |

இ. விலகிய கூட்டாளியின் நற்பெயரின் பங்கை உயர்த்தப்பட்டு மற்றும் நீக்கப்பட்டிருந்தால்

| விவரங்கள் | | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|
| நற்பெயர் க/கு | ப | 7200 | |
| Bஇன் முதல் க/கு | | | 7200 |
| (Bஇன் நற்பெயரின் பங்கு) | | | |
| Aஇன் முதல் க/கு | ப | 3900 | |
| Cஇன் முதல் க/கு | ப | 3300 | |
| நற்பெயர் க/கு | | | 7200 |
| (நற்பெயர் 13:11 இலாபமடைந்த விகிதத்தில் நீக்கப்பட்டது) | | | |

ஈ. நற்பெயர் கணக்கை ஆரம்பிக்கப்படாமலே, முதல் கணக்கில் நற்பெயர் சரிக்கட்டப்பட்டால்

| விவரங்கள் | | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|
| Aஇன் முதல் க/கு | ப | 3900 | |
| Cஇன் முதல் க/கு | ப | 3300 | |
| B'ன் முதல் க/கு | | | 7200 |
| (B க்கு கொடுக்கப்பட வேண்டிய நற்பெயரை A மற்றும் C அவர்களுக்கு இடையே உள்ள லாபமடைந்த விகிதத்தில் சரிக்கட்டப்பட்டது) | | | |

**குறிப்பு:**

மேலே கூறப்பட்ட வழக்குகளில், B என்கிறவர் விலகிய கூட்டாளி நிறுவனத்தில் நற்பெயர் பங்கு வரவாக ரூ.7200 பெற்றார். இது A மற்றும் C ஆகிய கூட்டாளிகளிடமிருந்து 13:11 என்ற இலாபமடைந்த விகிதத்தில் வந்ததாகும்.

**சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மறுமதிப்பீடு**

கூட்டாளியின் சேர்ப்பு வழக்கைப்போல, நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்யப்படுகிறது மற்றும் அந்த மறுமதிப்பீட்டில் ஏற்பட்ட இலாப & நட்டத்தை பழைய இலாப பங்கு விகிதத்தில் விலகிய கூட்டாளியையும் சேர்ந்து கூட்டாளியின் முதல் கணக்கில் மாற்றப்படுகிறது. அது மறுமதிப்பீடு கணக்கின் மூலமாக செய்யப்படுகிறது. மற்றும் இங்குள்ள கணக்கியல் முறைகள் கூட்டாளியின் சேர்ப்பு வழக்கில் உள்ளது போல் இருக்கும்.

கூட்டாளிகள் பழைய மதிப்பில் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை நிறுத்தி வைக்க ஒப்புக்கொண்டனர். விலகுதலுக்குப் பின்பும் இவை நினைவுக்குறிப்பு மறுமதிப்பீடு கணக்கின் மூலம் செய்யப்படுகிறது.

**விலகிய கூட்டாளிக்கு கொடுக்கப்பட வேண்டியத் தொகை மற்றும் அதன் கணக்கு தீர்த்தல்**

கூட்டிய இலாப நட்டத்தை முந்தைய ஒதுக்கீடு முதலியவை கூட்டாளிகளுக்கு பழைய விகிதத்தில் மாற்றப்படுகிறது. மாறாக, விலகிய கூட்டாளியின் ஒதுக்கீடு பங்கு மட்டுமே கணக்கில் வரவாக்கப்படும். மற்றும் மீத ஒதுக்கீடு புத்தகத்தில் பராமரிக்கப்டும்.

**எடுத்துக்காட்டு – 9**

அனில், பீமல் மற்றும் சாரு ஆகிய கூட்டாளிகள் அவர்களின் இலாப நஷ்டத்தை 3:2:1 என்ற விகிதத்தில் பங்கிடுகின்றனர்

டிசம்பர் 31, 2005 அன்று அனில், பீமல் மற்றும் சாருவின்

இருப்புநிலை

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் க/கு: | | | நற்பெயர் | 10000 |
| அனில் | 65000 | | பற்பல கடனாளிகள் | 61400 |
| பீமல் | 38000 | | பற்பல சொத்துகள் | 148000 |
| சாரு | 28000 | 131000 | | |
| பொது ஒதுக்கீடு | | 38400 | | |
| பற்பல கடனீந்தோர்கள் | | 50000 | | |
| | | 219400 | | 219400 |

2005, ஜனவரி 1 அன்று சாரு என்பவர் நிறுவனத்தில் இருந்து விலகத் தீர்மானித்தார். ஒப்பந்தத்தின்படி நற்பெயர் ரூ.50,000. பற்பல கடனாளிகள் ரூ.41,400 மற்றும் பற்பல சொத்துக்கள் ரூ.1,50,000க்கு மறுமதிப்பீடு செய்யப்பட்டது. விலகிய கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையை 5% வட்டியுடன் கடனாக இங்கே கருதப்படுகிறது. அதே நாளில் அதாவது 2005 ஜனவரி 1, அன்று டினின் என்பவரைக் கூட்டாளியாக ரூ.32,000 தொகையில் சேர்க்கப்பட்டார். இனிமேல் இலாப & நட்டத்தை 4:3:2 என்ற விகித்தில் அனில், பீமல் மற்றும் டினின் இவர்களிடையே பகிரப்படும் சொத்தின் புத்தக மதிப்பில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. (டினினின் ரொக்கம் கொண்டுவரப்பட்டது மற்றும் பொது ஒதுக்கீடு தவிர)

2005, ஜனவரி 1, ஆம் ஆண்டில் டினின் சேமிப்புக்குப்பின் உள்ள இருப்புநிலை மற்றும் குறிப்பேடு பதிவுகளைப் புத்தகத்தில் தயாரிக்கவும்.

**தீர்வு:**

**குறிப்பேடு**

| விவரங்கள் | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| குறிப்பு மறுமதிப்பீடு க/கு | ப | 22200 | |
| அனிலின் முதல் க/கு | | | 1100 |
| பீமலின் முதல் க/கு | | | 7333 |
| சாருவின் முதல் க/கு | | | 3667 |
| (மறு மதிப்பீட்டின் இலாபத்தை பழைய விகிதத்தில் பங்கிடப்பட்து) | | | |
| அனிலின் முதல் க/கு | ப | 9778 | |
| பீமலின் முதல் க/கு | ப | 7333 | |
| டினின் முதல் க/கு | ப | 4889 | |
| குறிப்பு மறுமதிப்பீடு க/கு | | | 22000 |
| (இலாபம் நீக்கப்பட்டது) | | | |
| பொது ஒதுக்கீடு க/கு | ப | 38400 | |
| அனிலின் முதல் க/கு | | | 19200 |
| பீமலின் முதல் க/கு | | | 12800 |
| சாருவின் முதல் க/கு | | | 6400 |
| (ஒதுக்கீடு பங்கிடப்பட்டது) | | | |

## முதல் க/கு

| விவரங்கள் | அனில் | பீமல் | சாரு | டினின் | விவரங்கள் | அனில் | பீமல் | சாரு | டினின் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| குறிப்பு மறுமதிப்பீடு க/கு | 9778 | 7333 | - | 4889 | இருப்பு | 65000 | 38000 | 28000 | - |
| சாருவின் கடன் க/கு | - | - | 38067 | - | குறிப்பு மறுமதிப்பீடுக/கு | 11000 | 7333 | 3667 | - |
| இருப்பு கீ/இ | 85422 | 50800 | - | 27111 | பொது ஒதுக்கீடு | 19200 | 12800 | 6400 | - |
| | | | | | ரொக்கம் | - | - | - | 32000 |
| | 95200 | 58133 | 38067 | 32000 | | 95200 | 58133 | 38067 | 32000 |

## 2008 ஜனவரி 1 ,ஆம் ஆண்டுக்கான அனில் பீமல் மற்றும் டினினின் இருப்பு நிலை

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் க/கு: | | நற்பெயர் | 10000 |
| அனில் | 85422 | பற்பல கடனாளிகள் | 61400 |
| பீமல் | 50800 | பற்பல சொத்துகள் | 148000 |
| டினின் | 27111 | ரொக்கம் | 32000 |
| சாருவின் கடன் | 38067 | | |
| பற்பல கடனீந்தோர்கள் | 50000 | | |
| | 251400 | | 251400 |

### பயிற்சிகள்
### கூட்டாளியின் சேர்ப்பு

1. ராம் மற்றும் ரஹீம் வியாபாரத்தில் கூட்டாளியாக இருந்து இலாபம் மற்றும் நட்டத்தை 60 : 40 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்கள் நானக் சிங்கை கூட்டாளியாகச் சேர்க்க

நினைத்தபோது நிறுவனத்தின் புத்தகத்தில் ரூ.6,000—க்கு நற்பெயர் ஏற்படுத்தப்பட்டது மற்றும் இலாப நட்டத்தில் அவரின் பங்கு 20% என்று நிர்ணயித்தனர். அவரை நற்பெயருக்கு ரூ.2,000 முனைமமாக செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். மற்றும் புதிய நிறுவனத்தில் இருக்கும் ராம், ரஹீம் ஆகிய இவர்களின் இலாபப் பங்கு விகிதம் முன் இருந்ததுபோல் மாறாமல் இருக்கும். புத்தகத்தில் இருக்கும் நற்பெயர் கணக்கில், பகிரப்படாத ரூ.6,000—த்தைத் தொடர அவர்கள் முடிவு செய்தனர். ரூ.2,000—த்திற்கான முனைமத்தை குறிப்பேட்டில் எவ்வாறு காண்பிக்கப்பட வேண்டும்?

**விடை**

1. பழைய கூட்டாளிகளிடையே இருக்கும் பழைய விகிதத்தில், இருப்பு நிலையில் முன்பே தோன்றிய நற்பெயர் ரூ.6,000 நீக்கப்பட வேண்டும்.
2. தியாக விகிதத்தில் பழைய கூட்டாளிகளிடையே புதிய கூட்டாளி கொண்டு வந்த ரூ.2,000—த்தைப் பகிரப்படும். இந்த வழக்கு பழைய விகிதத்தில் இருந்தது போன்றதாகும்.
3. புதிய விகிதத்தில், புதிய கூட்டாளிகளிடையே. நற்பெயர் ரூ.6,000—க்கு இருப்பு நிலையில் உயர்த்தப்பட வேண்டும்.

2. நிறுவனத்தில் டாம் மற்றும் பிரவுன் சமமான கூட்டாளியாக இருந்தனர். 31, மார்ச் 2007, ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் இருப்புநிலை பின்வருமாறு :

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| **முதல் கணக்கு** | | பொறியும், இயந்திரமும் | 50,000 |
| டாம் | 50,000 | மனையும் பொருத்துகையும் | 25,000 |
| பிரவுன் | 50,000 | வியாபாரச் சரக்கு | 20,000 |
| பற்பல கடனீந்தோர்கள் | 20,000 | பற்பல கடனாளிகள் | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| செலுத்தியதற்கு மாற்றுச்சீட்டு | 5,000 | கையிருப்பு வங்கி | 25,000 |
| | **1,25,000** | | **1,25,000** |

ஏப்ரல் 1இல் முதலை ரூ.1,50,000—க்கு உயர்த்துவதற்கு கேர்மல் என்பவரை 1/3 என்ற விகிதத்தில் சேர்க்க ஒப்புக்கொண்டனர். கேர்மல் ரூ.75,000—த்தைச் செலுத்த ஒப்புக்கொண்டார்.

கேர்மலை சேர்த்த பின் நிறுவனத்தின் குறிப்பேடு பதிவுகள், முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலையை காட்டவும்.

விடை

கேர்மலினால் முனைமம் ரூ.25,000—க்கு கொண்டு வரப்பட்டது. இருப்பு நிலை ரூ.1,75,000.

3. A, B மற்று C ஆகியவர்கள் நிறுவனத்தின் அக்கவுண்டண்ட் கூட்டாளிகள். அவர்கள் தங்களின் கணக்குகளை ரொக்கத்தின் அடிப்படையில் 2:3:1 என்ற விகிதத்தில் இலாப மற்றும் நட்டத்தை பகிர்ந்தனர். D என்பவர் சேர்க்கப்பட்டபோது, 31 மார்ச் 2006 அன்று அவர்களின் இருப்புநிலை பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| Bஇன் முதல் | 35,000 | மனைத்துணை | 10,000 |
| Cஇன் முதல் | 22,000 | மோட்டார் கார் | 20,000 |
| | | வங்கியில் ரொக்கம் | 18,000 |
| | | Aஇன் முதல் | 9,000 |
| | **57,000** | | **57,000** |

D'க்கு நிறுவனத்தின் இலாப நட்டத்தில் ¼ பங்கு கொடுக்கப்பட்டது. மற்றும் மற்ற கூட்டாளிகளிடையே இருக்கும் இலாப நட்ட விகிதம் முன்புபோல் இருக்கும். Dஇன் சேர்ப்புக்கு முன்பே கீழ்காணும் சரிக்கட்டல்கள் செய்யப்படவேண்டும்.

1. மோட்டார் கார் B என்பவரால் ரூ.25,000 மதிப்பில் எடுக்கப்பட்டது.
2. மனைத்துணை ரூ.18,000க்கு மதிப்பிடப்பட்டது.
3. புத்தகத்தில் நற்பெயர் கணக்கு ரூ.50,000—க்கு உயர்த்தப்பட்டது.

   A, B மற்றும் C என்ற கூட்டாளிகளில் C என்பவர் நற்பெயர் ரூ.30,000 வரை மட்டுமே மதிப்பீடு செய்ய ஆர்வமாக இருந்தார்.
4. பீஸ் சீட்டாக்கப்பட்டது (Fees Billed) ஆனால் பணமாக்கப்படாத ரூ.11,000—த்தை கணக்கில் கொண்டுவரப்பட்டது.
5. செலுத்தப்படாத செலவுகள் ரூ.3,000-க்கு வழங்கப்பட வேண்டும்.

D என்பவர், அவரின் முதல் கணக்கிற்கு, ரூ.20,000 ரொக்கமாகக் கொண்டு வந்தார். நிறுவனத்துடன் அவரது தனிப்பட்ட பயிற்சியான ஷார்டர்ட் அக்கவுண்டன்டை ஒன்று சேர்ப்பதற்கு ரூ.20,000த்துடன் வரவாக்கப்பட்டார்.

Dஇன் சேர்ப்புக்கு பின் நிறுவனத்தின் இருப்பு நிலை மற்றும் குறிப்பேடு பதிவுகளை காண்பிக்கவும்.

**விடை**

இருப்பு நிலை ரூ.1,37,000; முதல் கணக்கு A-Rs.16,000, B-Rs.47,500, C-Rs.30,500, D-Rs.40,000.

4. மூர்த்தி மற்றும் கணேஷ் நிறுவனத்தில் 3 : 2 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொள்ளும் கூட்டாளிகள். 1 ஏப்ரல் 2002-ல் ரவி என்பவர் 1/3 பங்கில் நிறுவனத்தில் நுழைந்தார்.

ரூ.5,000 முனைமத்திற்கும் விகித மாக முதலுக்கும் அவர் செலுத்தினார். மூர்த்தி மற்றும் கணேஷ் ஆகியவர்களின் முதல்களும் இலாப விகிதத்தில் சரிக்கட்டப்பட வேண்டும். ரவி என்பவர் நிறுவனத்தில் நுழையும் முன்பு, மூர்த்தி மற்றும் கணேஷின் இருப்புநிலை பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்கு : | | | இயந்திரம் | 32,000 |
| மூர்த்தி | 29,000 | | மனைத்துணை | 2,000 |
| கணேஷ் | 39,000 | 68,000 | சரக்கு | 15,000 |
| ஒதுக்கீடு | | 10,000 | குடனாளிகள் | 40,000 |
| கடனீந்தோர்கள் | | 12,000 | ரொக்கம் | 6,000 |
| கொடுக்கப்பட வேண்டிய செலவுகள் | | 5,000 | | |
| | | 95,000 | | 95,000 |

இயந்திர மதிப்பு ரூ.30,000 சரக்கு ரூ.20,000 கடனாளிகள் மதிப்பு ரூ.38,000 புத்தகத்தில் காப்பீடு கொள்கை ரூ.10,000 காண்பிக்கப்படவில்லை. முனைமம் செலுத்தியது நீக்கப்பட்டது. ரவியை சேர்க்கப்பட்ட சமயத்தில் விடுமதிப்பு ரூ.3,000 பல வருடங்களாக ஒரு வியாபாரி கடன் ரூ.1,000-தை கொடுக்காமல் இருந்தார். அவரைக் கண்டுபிடிக்கவில்லை. யதேச்சை பொறுப்பின் செலவுகள் ரூ.500—க்கு வளர்ந்தது மற்றும் அது புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை. ஒதுக்கீடு கணக்கு, கணக்கில் காண்பிக்கப்படக்கூடாது.

ரவியின் சேர்ப்புக்கு பின் இலாப நட்ட சரிக்கட்டல் கணக்கு மற்றும் இருப்பு நிலையை தயாரிக்கவும்.

விடை

இலாபம் மற்றும் நட்டம் சரிக்கட்டல் கணக்கு – முதல் க/கு — மூர்த்தி ரூ.900 கணேஷ் ரூ.600 இருப்பு நிலை ரூ.1,47,750.

5. ஆச்சார்யா மற்றும் அகர்வாலின் 31.12.2003–ல் இருப்புநிலை கீழ்வருமாறு :

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர்கள் | | 6,000 | சரக்கு | 25,200 |
| வங்கி மேல்வரைப் பற்று | | 3,000 | பற்பல கடனாளிகள் | 16,000 |
| முதல் கணக்கு : | | | அமீனின் கடன் | |
| ஆச்சார்யா | 12,000 | | க/கு | 12,200 |
| அகர்வால் | 24,000 | 36,000 | மனைத்துணை | 1,200 |
| நடப்பு கணக்கு : | | | நிலம் மற்றும் கட்டிடம் | 14,400 |
| ஆச்சார்யா | 14,400 | | | |
| அகர்வால் | 9,600 | 24,000 | | |
| | | **69,000** | | **69,000** |

கூட்டாளிகள் 1 : 2 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொண்டனர். கீழ்க் கூறப்படும் நிபந்தனையுடன் அமீன் என்பவர் ஜனவரி 1, 2004ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டார்.

1. சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மறுமதிப்பீடு கீழ்வருமாறு :

   அ. நிலம் மற்றும் கட்டிடம் ரூ. 32,500

   ஆ. மனைத்துணை ரூ.6,000

   இ. சரக்கு ரூ.2,200க்கு குறைக்கப்பட்டது.

   ஈ. பற்பல கடனாளிகளின் மீது ஐயக்கடன் ஒதுக்கீடு 5% உருவாக்கப்பட்டது.

   உ. கடனீந்தோர்கள் மேற்கொண்டு பொறுப்புகள் இல்லாமல் ரூ.500யைச் சேர்த்துக்கொண்டனர்.

2. அமீன் அவரது வியாபாரத்தைச் செய்கிறார். பின்வரும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளைக் கூட்டாண்மைக்கு கொண்டுவந்தார்.

i)மனைத்துணை ரூ.1,800; ii)வியாபாரச் சரக்கு ரூ.20,800; iii)முதலீடு ரூ.4,500; iv)பற்பல கடனீந்தோர்கள் ரூ.5,500.

3. புதிய நிறுவனத்தின் இலாப & நட்டத்தைக் கூட்டாளிகள் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.
4. அமீன் நற்பெயரின் பங்காக ரூ.6,000 ரொக்கமாக கொண்டுவர வேண்டும்.
5. அமீனின் கடன் கணக்கை, நடப்பு கணக்காக மாற்ற வேண்டும்.
6. வங்கி மேல்வரைப்பற்று மீண்டும் செலுத்தப்பட வேண்டும்.
7. அமீனைப் போலவே, ஆச்சார்யா மற்றும் அகர்வால் தங்களின் முறையான முதல்களை சமமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஏதேனும் உபரி அல்லது பற்றாக்குறையை அவரின் முறையான நடப்பு கணக்குகளின் மூலமாகச் சரிபார்க்கப்பட வேண்டும்.

**நீங்கள் தயாரிக்க வேண்டியவை**

1. முதல் மற்றும் நடப்பு கணக்குகள்
2. இலாப நட்ட சரிக்கட்டல் க/கு
3. 01.04.2004ம் ஆண்டுக்கான புதிய நிறுவனத்தின் இருப்பு நிலை.

**விடை**

| | ஆச்சார்யா | அகர்வால் | அமீன் |
|---|---|---|---|
| முதல் க/கு | 21,600 | 21,600 | 21,600 |
| நடப்பு க/கு | 11,600 (வ) | 31,600 (வ) | 12,200 (ப) |

மொத்த இருப்பு நிலை = ரூ.1,19,000

**கூட்டாளியின் விலகல்:**

1. நிறுவனத்தில் A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 1/3, 1/2 மற்றும் 1/6 என்ற விகிதத்தில் இலாப & நட்டத்தைப் பகிர்ந்து

கொண்டனர். 2009, 31 டிசம்பர் அன்று நிறுவனத்தின் இருப்பு நிலைப் பின்வருமாறு :

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| புற்பல கடனீந்தோர்கள் | | 25,000 | தொழிற்சாலை கட்டிடம் | | 50,000 |
| செலுத்த வேண்டிய கடன் | | 15,000 | பொறி மற்றும் இயந்திரம் | | 40,000 |
| ஒதுக்கீடு நிதி | | 16,000 | மனைத்துணை | | 10,000 |
| முதல் க/கு : | | | சரக்கு | | 25,000 |
| A | 30,000 | | கடனாளிகள் | 18,000 | |
| B | 40,000 | | (−) ஒதுக்கீடு | 500 | 17,500 |
| C | 25,000 | 95,000 | கையிருப்பு ரொக்கம் | | 8,500 |
| | | **1,51,000** | | | **1,51,000** |

பின்வரும் சரிக்கட்டலின்படி 2009 டிசம்பர் 31 ஆம் ஆண்டு C என்பவர் விலகினார்.

1. நிறுவனத்தின் புத்தகத்தில் நற்பெயர் கணக்கில் ரூ.24,000க்கு உயர்த்தப்பட்டது.
2. பொறி மற்றும் இயந்திரத்தின் தேய்மானம் 10% மற்றும் மனைத்துணையின் தேய்மானம் 5%.
3. சரக்கு 15%—க்கு உயர்த்தப்பட வேண்டும். மற்றும் தொழிற்சாலைக் கட்டிடம் 10%
4. ஐயக்கடன் ஒதுக்கீடு ரூ.2,000—க்கு உயர்த்தப்பட வேண்டும்.

நிறுவனப் புத்தகத்தில் குறிப்பேடு பதிவுகள், மறுமதிப்பீடு க/கு, Cஇன் முதல் கணக்கு மற்றும் C விலகியபின் புதிய நிறுவனத்தின் இருப்பு நிலையைத் தயாரிக்கவும்.

**விடை:**

மறுமதிப்பீட்டின் இலாபம் ரூ.2,750; முதல் க/கு A=44,250 B=61,375 C=32,125 மொத்த இருப்பு நிலை ரூ.1,77,750

2. பாசு மற்றும் தாஸ் என்ற கூட்டாளிகள் இலாப & நட்டத்தைச் சமமாக பகிர்ந்தனர். ஜுன் 30, 2000 அன்றைய இருப்பு நிலை பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர்கள் | 39,800 | கட்டிட ஸ்தலம் | 26,000 |
| | | இயந்திரம் | 42,000 |
| **முதல்கள் :** | | சரக்கு | 12,000 |
| பாசு | 45,000 | வங்கி இருப்பு | 2,800 |
| தாஸ் | 36,000 | பற்பல கடனாளிகள் | 38,000 |
| | **1,20,800** | | **1,20,800** |

2000 ஜுன் 30 அன்று பாசு என்பவர் விலக ஒப்புக்கொண்டார். மற்றும் பின்வரும் நிபந்தனைகளில் தாஸ் என்பவர் வியாபாரத்தை எடுத்துக்கொண்டார்.

1. நிறுவனத்தின் நற்பெயர் ரூ.11,000க்கு மதிப்பீடு செய்யப்பட்டது.
2. ஒப்புக்கொள்ளப்பட்ட சரக்கின் மதிப்பு ரூ.10,000
3. ஐயக்கடன் ஒதுக்கீடு 2%—க்கு உருவாக்கப்பட்டது.
4. 9%க்கு பாசுவினால் கடன் எடுக்கப்பட்டதில் அவருக்கு ரூ.20,000 செலுத்தப்பட வேண்டும் மற்றும் மீதமுள்ளதை

மாற்றியதற்குரிய சீட்டின் மூலமாக 12 மாதத்திற்கு பின் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டு நிறுவன புத்தகத்தில் குறிப்பேடு பதிவுகள் சரிக்கட்டியபின் தாஸின் இருப்பு நிலை.

**விடை:**

மறுமதிப்பீடு சொத்தின் இலாபம் ரூ.2,760 மொத்த இருப்பு நிலை ரூ.1,26,240.

3. A மற்றும் B இலாப நட்டத்தைச் சமமாகப் பகிரும் கூட்டாளிகளாக இருந்தனர். டிசம்பர் 31, 2001 அன்றைய இருப்பு நிலை பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் க/கு : | | | நிலம், கட்டிடம் | | 10,000 |
| A | 10,000 | | பொறி மற்றும் இயந்திரம் | | 12,000 |
| B | 18,000 | 28,000 | | | |
| பற்பல கடனீந்தோர்கள் | | 5,000 | சரக்கு | | 5,000 |
| விபத்து நஷ்ட ஈடு நிதி | | 6,000 | பற்பல கடனாளிகள் | 6,000 | |
| PF | | 1,000 | (—)ஐயக்கடன் ஒதுக்கீடு | 600 | 5,400 |
| | | | உரிமை பத்திரம் | | 4,000 |
| | | | கையிலிருக்கும் ரொக்கம் | | 3,600 |
| | | **40,000** | | | **40,000** |

மேலே கூறிய நாளில் A என்பவர் பின்வரும் நிபந்தனையுடன் விலகினார்:

1. A-க்கு கொடுக்கப்படவேண்டிய மொத்தக் கடனில் உள்ள சில பாகத்தை அவருடைய 5% ஆண்டு வட்டியில் உள்ள கடன் கணக்கில் மாற்றப்படுகிறது.
2. நிறுவனத்தின் நற்பெயர் ரூ.12,000—க்கு மதிப்பீடு செய்யப்பட்டது. Aஇன் நற்பெயர் பங்குக்கு எதிராக Bஇன் முதல் கணக்கில் சரிக்கட்டப்பட வேண்டும்.
3. சரக்கு 20%க்கு உயர்த்தப்பட்டது.
4. கடனாளிகளின் ஐயக்கடன் ஒதுக்கீடு 5%-க்கு பராமரிக்கப்பட வேண்டும்.
5. உரிமைப் பத்திரம் ரூ.1,500க்கு மதிப்பீடு செய்யப்பட்டது.
6. புத்தகத்தில் கொடுக்கப்பட வேண்டிய செலவு ரூ.800-க்கு பதிவு செய்யப்பட வேண்டும்.
7. A என்பவர் நிலம் மற்றும் கட்டிடத்தை அவரின் கடன் கணக்கில் விட்டுவிடப்பட்ட இருப்பின் விலைக்கே எடுத்துக்கொள்ள ஒப்புக்கொண்டார். அவை ஆண்டு வட்டி ரூ.500 ஈட்டுவதற்குப் பயன்படும்.

பேரேடு கணக்கு மற்றும் Bஇன் இருப்பு நிலையைத் தயாரிக்கவும்.

விடை:

பணமாக்கப்பட்ட கணக்கின் நட்டம் ரூ.6,000 மொத்த இருப்பு நிலை ரூ.28,800

8. P, Q மற்றும் R என்ற கூட்டாளிகள் 2/5, 3/10 மற்றும் 3/10 என்ற விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். டிசம்பர் 2008, 31 அன்று அவர்களின் இருப்பு நிலை பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் | | | கட்டிடம் | | 18,000 |
| P | 16,000 | | பொறி | | 14,000 |
| Q | 12,000 | | மோட்டார் கார் | | 4,000 |
| R | 10,000 | 38,000 | சரக்கு | | 10,000 |
| ஒதுக்கீடு | | 5,000 | கடனாளிகள் | 7,000 | |
| செலுத்தியதற்குரிய மாற்றுச் சீட்டு | | 2,000 | (–) ஒதுக்கீடு | 1,000 | 6,000 |
| கடனீந்தோர்கள் | | 8,000 | வங்கியில் ரொக்கம் | | 1,000 |
| | | 53,000 | | | 53,000 |

அந்தத் தேதியில் பின்வரும் நிபந்தனைகளில் Q விலகினார்.

1. நிறுவனத்தின் நற்பெயர் ரூ.7,000க்கு மதிப்பீடு செய்யப்பட்டது.
2. சரக்கு மற்றும் கட்டிடம் 10%க்கு உயர்த்தப்பட்டது.
3. பொறி மற்றும் மோட்டார் காரின் தேய்மானம் 10%
4. தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய உபகாரமாக (Gratuity) ரூ:2,000 புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் அதையே வழங்கப்பட வேண்டும்.
5. ஐயக்கடன் ஒதுக்கீடு செய்ய தேவையில்லை.
6. புத்தகத்தில் நற்பெயர் கணக்கு பராமரிக்கத் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது.
7. ஆண்டு ஒன்றுக்கு 10% வட்டியுடன் ஜனவரி 2009, 1 தொடக்கத்திலிருந்து Q'விற்கு செலுத்த வேண்டிய தொகையை மூன்று சமமான தவணையில் செலுத்த வேண்டும்.

நீங்கள் தயாரிக்க வேண்டியவை

1. மறுமதிப்பீடு கணக்கு,
2. கூட்டாளிகளின் முதல் கணக்கு,
3. P மற்றும் Rஇன் புதிய இருப்பு நிலை, மற்றும்
4. 2000ல் Qவின் கடன் கணக்கு.

10. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 3 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்தனர். டிசம்பர் 31, 2001ஆம் ஆண்டுக்கான இருப்புநிலைப் பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | | 1,250 | கையிருப்பு ரொக்கம் மற்றும வங்கி | 2,565 |
| செலுத்துவதற்குரியச் சீட்டு | | 640 | பெறுவதற்குரிய சீட்டு | 540 |
| முதல் : | | | கடனாளிகள் | 1,780 |
| A | 4,000 | | சரக்கு | 2,230 |
| B | 2,500 | | மனைத்துணை | 350 |
| C | 2,000 | 8,500 | பொறி மற்றும் இயந்திரம் | 975 |
| இலாப நட்ட | | 450 | கட்டிடம் | 2,400 |
| | | **10,840** | | **10,840** |

2002 ஜனவரி 1, அன்று A என்பவர் வியாபாரத்திலிருந்து விலகினார் மற்றும் வியாபாரத்தில் அவர் பங்கைப் பின்வரும் சொத்துகளின் மறு மதிப்பில் தெரிந்துக்கொள்ள வேண்டும். சரக்கு ரூ.2,000; மனைத்துணை ரூ.300; பொறி மற்றும் இயந்திரம் ரூ.900; கட்டிடம் ரூ.2,000; ஐயக்கடன் ஒதுக்கீடு ரூ.85-க்கு செய்யப்பட்டது. நிறுவனத்தின் நற்பெயர் ரூ.600க்கு நிலையானது. A என்பவர் விலகியபோது ரூ.1105 செலுத்தப்பட வேண்டும். மற்றும் இருப்பை மூன்று சமமான ஆண்டு தவணையில் (வட்டியை சேர்த்த பின்) 5% ஆண்டு வட்டியில் செலுத்த வேண்டும்.

B மற்றும் Cஇன் இருப்பு நிலை மற்றும் Aஇன் கடன் கணக்கை தயாரிக்கவும்.

**விடை:**

மறுமதிப்பீடு நட்டம் ரூ.840; Aஇன் கடன், க/கு ரூ.3,000; முதல் இருப்பு B ரூ.2,570; C ரூ.2,035; மொத்த இருப்பு நிலை ரூ.9,495; நிறைவேற்றிய ஆண்டு தவணைக் கடன் ரூ.1,101.63.

கூட்டாளிகளின் இறப்பு

கூட்டாளி இறப்பு (அ) விலகிய அன்று வரை ஏற்பட்ட இலாபத்தைக் கூட்டாளிகளுக்குப் பழைய விகிதத்தில் பகிரப்படுகிறது. அத்தகைய இலாபத்தை முந்தைய வருடங்களிலுள்ள இலாபத்தின் அடிப்படையில் ஆராயப்படும். விலகிய கூட்டாளி பங்கில் இலாபம் மட்டுமே அவரின் கணக்கில் வரவாக்கப்பட்டு மற்ற கூட்டாளிகளின் முதல் கணக்கில் இலாப விகிதத்தில் பற்றாக்கப்படும். இதைச் செய்வதினால், மீதமிருக்கும் கூட்டாளிகளின் பழைய புதிய விகிதத்தில் எந்த மாற்றமும் ஏற்படக்கூடாது.

முதல் கணக்கில் இருக்கும் இருப்பை ரொக்கமாகச் செலுத்தியோ அல்லது கருப்பை விலகிய கூட்டாளிகளின் கடன் கணக்கில் மாற்றப்பட்டோ, விலகிய கூட்டாளியின் முதல் கணக்கை முடிக்கப்பட வேண்டும். ஆனால், இறந்த கூட்டாளியின் வழக்கில் இறந்த கூட்டாளியின் முதல் கணக்கில் இருக்கும் இருப்பை அவரின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவரின் கடன் கணக்கில் மாற்றி மூடப்படுகிறது. இந்தத் தொகை கடன் கணக்கில் மாற்றப்படுகிறது. பிறகு அவர் இருப்பை செலுத்தும்வரை, ஆண்டு ஒன்று 6% வட்டியில் செலுத்துவதற்கு உரிமையளிக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு –1

A, B மற்றும் C கூட்டாளிகள் 5:3:2 என்ற விகிதத்தில் இலாப &நட்டத்தைப் பகிர்ந்து கொண்டனர். A மரணமடைந்தார்.

A வின் மரணத்திற்கு முன்னாள் இருந்த A, B, Cஇ ன் இருப்பு நிலை :

| பொறுப்புகள் | | சொத்துகள் | |
|---|---|---|---|
| முதல் க/கு | | நற்பெயர் | 1,00,000 |
| A | 2,00,000 | இயந்திரம் | 1,00,000 |
| B | 1,50,000 | கடனாளிகள் | 3,00,000 |
| C | 1,00,000 | சரக்கு | 2,00,000 |
| ஒதுக்கீடு | 50,000 | வங்கியில் ரொக்கம் | 50,000 |
| கடனீந்தோர்கள் | 2,50,00 | | |
| | 7,50,000 | | 7,50,000 |

இறந்த தேதியில் இருந்த இலாபம் ரூ. 90,000/-யை எந்தத் தேய்மானத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் மதிப்பீடு செய்யப்பட்டது. ஒரு கூட்டு ஆயுள் பாலிசி ரூ.1,50,000/-ஐ (இலாபம் இல்லாமல்) கடந்த வருடம் எடுத்துக்கொள்ளப்பட்டது. முனைமம் ரூ.10,000 இலாப நட்ட கணக்கில்

எழுதப்பட்டது. ஒவ்வொரு நடப்புச் சொத்துகளும் (ரொக்கம் மற்றும் வங்கியை தவிர) மதிப்பீட்டில் 20% சென்றது. கடனீந்தோர்கள் ரூ.20,000-க்கு உயர்த்தப்பட்டார்கள். நற்பெயர் 2 வருட கொள்முதலில் சராசரி இலாபத்திலிருந்து 3 வருடத்திற்கு கணக்கிடப்படவேண்டும். கடந்த 3 வருடங்களின் இலாபம் ரூ.1,80,000, ரூ.2,00,000 மற்றும் ரூ.2,20,000 இருந்தது.

இறந்த கூட்டாளியின் பிரதிநிதிக்கு கொடுக்க வேண்டியதைக் காப்பீடு கிடைத்ததிலிருந்து முடிக்கப்பட்டது. இறந்த தேதியிலிருந்து சுமத்தப்படும் 10% வட்டிய்ய ஒரு வருடத்திற்கு பிறகு செலுத்தப்படவேண்டும் இயந்திரத்தின் மதிப்பு ரூ.80,000.

தேவையான கணக்கைத் தயாரிக்கவும் மற்றும் A மரணத்திற்குபின் உள்ள இருப்பு நிலையையும் தயாரிக்கவும்.

தீர்வு :

மறுமதிப்பீடு க/கு :

| விபரங்கள் | ரு | விபரங்கள் | ரு |
|---|---|---|---|
| இயந்திரம் | 20,000 | கடனாளிகள் | 60,000 |
| கடனீந்தோர்கள் | 20,000 | சரக்கு | 40,000 |
| முதல் க/கு : | | | |
| A 30,000 | | | |
| B 18,000 | | | |
| C 12,000 | 60,000 | | |
| | 1,00,000 | | 1,00,000 |

முதல் கணக்கு

| விபரங்கள் | A ரூ. | B ரூ. | C ரூ. | விபரங்கள் | A ரூ. | B ரூ. | C ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| Aஇன் நிறைவேற்றும் பொறுப்பு க/கு | 5,25,000 | | | இருப்பு கீ/கொ. | 2,00,000 | 1,50,000 | 1,00,000 |
| | | | | ஒதுக்கீடு | 25,000 | 15,000 | 10,000 |
| இருப்பு கீ/இ | - | 3,18,000 | 212000 | நற்பெயர் | 1,50,000 | 90,000 | 60,000 |
| | | | | மதிப்பீடு க/கு | 30,000 | 18,000 | 12,000 |
| | | | | கூட்டு ஆயுள் பாலிசி | 75,000 | 45,000 | 30,000 |
| | | | | இ&ந. அனாமத்து க/கு | 45,000 | - | - |
| | 5,25,000 | 3,18,000 | 2,12,000 | | 5,25,000 | 3,18,000 | 2,12,000 |

A என்பவர் இறந்தபின் நிறுவனத்தில் இருப்பு நிலை

|---|---|---|---|---|---|
| முதல் க/கு : | | | ரொக்கம் | | 500 |
| A | 15,000 | | இயந்திரம் | | 10,000 |
| B | 10,000 | 25,000 | கடனாளிகள் | 16,000 | |
| ஒதுக்கீடு | | 6,000 | (—)வராக்கடன் ஒதுக்கீடு | 1,000 | 15,000 |
| Aஇன் கடன் | | 5,000 | சரக்கு | | 12,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | | 10,000 | Cஇன் முதல் (பற்று) | | 8,500 |
| | | **46,000** | | | **46,000** |

நிறுவனம் கலைக்கப்பட்டது. சொத்துகள் தவிர மற்ற ரொக்கம் பணமாக்கப்பட்டது ரூ.26,000 கலைக்கப்பட்ட செலவுகள் ரூ.1000. C திவாலானார். ஆனால் அவர் பண்ணையிலிருந்து ரூ.2000 பணமாக்கப்பட்டது. நிறுவனத்தின் புத்தகத்தை முடிப்பதற்கு பேரேடு கணக்குகளைத் தயாரிக்கவும். (கார்னர் (எ) முர்ரே முடிவை காண்பிக்கவும்).

**விடை:**

பணமாக்கப்பட்ட நஷ்டம் ரூ.12,000, Cஇன் முதல் பற்றாக்குறை ரூ.7500/—யை A மற்றும் B—க்கு 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்தனர். இறுதியில் செலுத்தியது A ரூ.13500, B ரூ.9000.

11. மார்ச் 31, 2008ஆம் ஆண்டிற்கான P, Q மற்றும் Rஇன் இருப்புநிலை கீழ்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| Pஇன் முதல் | 25,000 | ஃபிரிஹோல்டு சொத்து | 10,000 |
| Rஇன் முதல் | 15,000 | மனைத்துணை | 5,000 |
| Pஇன் நடப்பு க/கு | 1,000 | வியாபாரச் சரக்கு | 23,100 |
| Rஇன் நடப்பு க/கு | 500 | கடனாளிகள் | 30,000 |
| பற்பல கடனீந்தோர்கள் | 30,000 | ரொக்கம் | 2,500 |
| கடனிற்கு ஃபிரிஹோல்டு சொத்து அடமானம் | 4,000 | Qஇன் நடப்பு கணக்கு | 4,900 |

| | | 75,500 | | | 75,500 |
|---|---|---|---|---|---|

கூட்டாளிகள் 6:3:5 என்ற பாக விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்தனர். இருப்பு நிலையிலுள்ள தேதியில் கூட்டாண்மையைக் கலைக்க முடிவு செய்தனர்.

சொத்துகள் பணமாக்கப்பட்டது கீழ்வருமாறு:

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| ஃபிரிஹோல்டு சொத்து | 6,000 | வியாபாரச் சரக்கு | 15,000 |
| மனைத்துணை | 2,000 | கடனாளிகள் | 20,000 |

பணமாக்கப்பட்டபோது ஏற்பட்ட செலவுகள் ரூ.2000. பற்பல கடனீந்தோர்கள் 75 பைசாவில் ரூபாயாக எடுக்க முழு மனதுடன் ஒப்புக்கொண்டனர். Q திவாலானார் என்று கூறப்பட்டது. ஒரு பங்கு 50 பைசாவில் ரூபாயாக கோர்ட்டிடமிருந்து பெற்றனர்.

பணமாக்கப்பட்ட க/கு, வங்கி க/கு, கூட்டாளியின் முதல் மற்றும் நடப்பு க/கு தயாரிக்கவும். முதல் கணக்கில் பற்றாக்குறையை பகிரும் அடிப்படையைக் காண்பிக்கவும்.

விடை:

பணமாக்கப்பட்ட நட்டம் ரூ.19,600, P—க்கு இறுதியில் செலுத்தியது ரூ.24,156 மற்றும் R ரூ.13,794.

12. L, S மற்றும் B கூட்டாண்மையில் 1/5:3/10:1/2 என்ற விகிதத்தில் இலாப & நட்டத்தை கூட்டாளிகள் பகரிந்து வந்தனர். 30.06.2008ஆம் தேதியில் நிறுவனத்தை அவர்கள் கலைக்க முடிவு செய்தனர்.

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் க/கு : | | | ரொக்கம் | 1,000 |
| L | 3,000 | | பொறி மற்றும் இயந்திரம் | 5,000 |
| S | 4,000 | | பற்பல கடனாளிகள் | 20,000 |
| B | 3,000 | 10,000 | நட்டம் | 8,000 |
| வியாபாரக் கடனீந்தோர்கள் | | 12,000 | L—க்கு கடன் | 2,000 |
| B—யிடமிருந்து கடன் | | 2,000 | | |
| புத்தகக் கடன் மற்றும் பொறி முதலியவற்றில் வங்கிக் கடன் | | 12,000 | | |
| | | **36,000** | | **36,000** |

பொறி, இயந்திரம் மற்றும் பற்பல கடனாளிகள் ரூ.20,000/—க்கு பணமாக்கப்பட்டது. Lஇன் பண்ணை மதிப்பு ரூ.7,000இல் பொறுப்பாக ரூ.3000 இருக்கிறது. பண்ணையில் ரூ.4200/—க்கு பணமாக்கப்பட்டது. S என்பவர் திவாலானார். B என்பவர் 50 பைசா ரூபாயில் அவருடைய சொந்தக் கணக்கில் கூட்டாண்மைக்குக் கொடுக்க வேண்டும்.

பணமாக்கப்பட்ட க/கு, ரொக்க க/கு, கலைப்பு சம்பந்தமான அனைத்து பதிவுகளும் கூட்டாளிகளின் கணக்குகள் பணமாக்கப்பட்ட கணக்கின் மூலமாக பதிவு செய்யப்பட வேண்டும். மற்றும் இறுதி தொகையைக் கடனீந்தோருக்கு செலுத்தியதைக் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு பணமாக்கப்பட்ட நட்டம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

**விடை:**

பணமாக்கப்பட்ட நட்டம் ரூ.3,600.

## சிறு சிறு ரொக்கப் பகிர்வு முறை

13. சுந்தர், சந்தர் மற்றும் பாலன் என்ற கூட்டாளிகள் 1/2:1/4:1/4 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர்.

கூட்டாண்மை கலைக்கப்பட்ட தேதியின் இருப்பு நிலை.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | 35,000 | பற்பல சொத்துகள் | 1,00,000 |
| சுந்தரின் முதல் க/கு | 25,000 | | |
| சந்தரின் முதல் க/கு | 25,000 | | |
| பாலனின் முதல் க/கு | 15,000 | | |
| | **1,00,000** | | **1,00,000** |

சொத்துகள் ரூ.85,000/-க்கு பணமாக்கப்பட்டது. தொகையைத் தவணையாக ரூ.35,000, ரூ.25,000 மற்றும் ரூ.25,000/—க்கு பெறப்பட்டது.

தொகையை எப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதைக் காண்பிக்கவும் மற்றும் எப்போது பெற வேண்டும்.

**விடை:**

| | சுந்தர் பெற்றது | சந்தர் பெற்றது | பாலன் பெற்றது |
|---|---|---|---|
| 2ஆம் தவணை | - | 10,000 | - |
| | - | 2,500 | 2,500 |
| 3ஆம் தவணை | 5,000 | 2,500 | 2,500 |
| | 12,500 | 6,250 | 6,250 |

14. X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர்.

2008 டிசம்பர் 31ஆம் ஆண்டிற்கான இருப்பு நிலை

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | | 4,000 | கையில் ரொக்கம் | 2,500 |
| முதல் க/கு | | | பற்பல சொத்துக்கள் | 15,500 |
| X | 5,000 | | | |
| Y | 6,000 | | | |
| Z | 3,000 | 14,000 | | |
| | | **18,000** | | **18,000** |

வியாபாரத்தை மூடுவதற்கு கூட்டாளிகள் முடிவு செய்தனர். சிறு சிறு ரொக்கத்தில் சொத்துகள் பணமாக்கப்பட்டது மற்றும் தொகை பணமாக்கப்பட்டபோது கணக்கில் பகிர்வு செய்யப்பட்டது. பணமாக்கப்பட்டது பின்வருமாறு

| எண் | சொத்தின் புத்தக மதிப்பு ரூ. | பணமாக்கப்பட்டது ரூ. |
|---|---|---|
| 1. | 3,500 | 3,000 |
| 2. | 2,500 | 2,500 |
| 3. | 4,000 | 3,000 |
| 4. | 5,000 | 6,000 |
| 5. | 500 | 500 |
| | **15,500** | **15,000** |

பகிர்வு எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதைக் காண்பிக்கவும். பணமாக்கப்பட்டபோது ஏற்பட்ட செலவுகளைக் கவனியாதிரு.

விடை

| பணமாக்கப்பட்டது | X பெற்றது | Y பெற்றது | Z பெற்றது |
|---|---|---|---|
| 1 | - | 1000 | 500 |
| 2 | 1000 | 1000 | 500 |
| 3 | 1200 | 1200 | 600 |
| 4 | 2400 | 2400 | 1200 |
| 5 | 200 | 200 | 100 |

15. ஆல்பா, பீட்டா மற்றும் காம்மா என்ற கூட்டாளிகள் 3:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். டிசம்பர் 31, 2008ஆம் ஆண்டில் வியாபாரம் கலைக்கப்பட்டபோது உள்ள இருப்பு நிலை:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் க/கு : | | | நிலம் & கட்டிடம் | 30,810 |
| ஆல்பா | 38,700 | | மோட்டார் கார் | 5,160 |
| பீட்டா | 10,680 | | முதலீடு | 1,080 |
| காம்மா | 11,100 | 60,480 | வியாபாரச் சரக்கு | 19,530 |
| கடன் க/கு | | 3,000 | கடனாளிகள் | 11,280 |
| கடனீந்தோர்கள் | | 10,320 | ரொக்கம் | 5,940 |
| | | **73,800** | | **73,800** |

சொத்துக்கள் பணமாக்கப்பட்டது கீழ்வருமாறு மற்றும் பணமாக்கப்படும்போது ரொக்கத்தைப் பகிர ஒப்புக்கொண்டனர்.

| 2008 | ரூ. |
|---|---|
| ஜனவரி 15 | 10,380 |
| பிப்ரவரி 26 | 27,900 |
| மார்ச் 20 | 3,600 |

2008 ஏப்ரல், 14ஆம் ஆண்டு காம்மா முதலீடு ரூ.1260-யை ஒப்புக்கொண்ட மதிப்பில் எடுத்துக்கொண்டார். 2008 ஏப்ரல் 29ஆம் ஆண்டு ரூ.19200 பணமாக்கப்பட்டது. கலைக்கப்பட்ட செலவுகள் உண்மையாகவே மதிப்பிடப்பட்ட தொகை ரூ.2700இல் வழங்கப்பட்டது. ஆனால் உண்மையான தொகை 2008 மார்ச் 25 அன்று ரூ.1920க்கு மட்டுமே செலவிடப்பட்டது. கடனீந்தோர்களின் கணக்கு ரூ.10080க்கு தீர்க்கப்பட்டது.

கூட்டாளிகளிடையே ரொக்கப் பகிர்வு முறையே காண்பிக்கவும்.

விடை:

| தேதி 2008 | ஆல்பா பெற்றது | பீட்டா பெற்றது | காம்மா பெற்றது |
|---|---|---|---|
| ஜனவரி 15 | 540 | - | - |
| பிப்ரவரி 26 | 4860 | - | - |
| | 17280 | - | 5760 |
| மார்ச் 20 | 1800 | 1200 | 600 |
| மார்ச் 25 | 390 | 260 | 130 |
| ஏப்ரல் 14 | - | - | 1260 (முதலீடு) |

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் 29 | 3780 | 2520 | - |
| | 6450 | 4300 | 2150 |

16. X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் கூட்டாண்மை நிறுவனத்தில் உள்ளனர். அவர்களுடைய முதல்கள்: X ரூ.20000; Y ரூ.10000; Z ரூ.10000. கடனீந்தோர்கள் ரூ.20000 மற்றும் பற்பல சொத்துகள் ரூ.60000. கலைப்பின்போது சொத்துகள் கீழ்வருமாறு பணமாக்கப்பட்டது:

| | |
|---|---|
| முதல் தவணை | ரூ. 20,000 |
| இரண்டாம் தவணை | ரூ. 20,000 |
| இறுதியில் பணமாக்கப்பட்டது | ரூ. 10,000 |

கூட்டாளிகள் 3:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர்.

கீழே கூறப்படும் முறையில் பணமாக்கப்பட்டபோது ஏற்பட்ட சிறு சிறு ரொக்கப் பகிர்வைக் காண்பிக்கவும்.

1. விகித முதல் முறை
2. அதிகபட்ச நட்ட முறை

விடை

| | கடனீந்தோர்கள் | X | Y | Z |
|---|---|---|---|---|
| 1. **விகித முதல் முறை :** | | | | |
| முதல் தவணை (20,000) | 20,000 | - | - | - |
| இரண்டாம் தவணை (20,000) | | 10,000 | 3,334 | 6,666 |
| மூன்றாம் தவணை (10,000) | | 5,000 | 3,334 | 1,666 |
| கூட்டாளி நட்டத்தை ஏற்றது | | 5,000 | 3,332 | 1,668 |
| 2. **அதிகபட்ச நட்ட முறை :** | | | | |
| முதல் தவணை (20,000) | 20,000 | - | - | - |
| இரண்டாம் தவணை (20,000) | | 10,000 | 3,334 | 6,666 |

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் தவணை (10,000) | 5,000 | 3,334 | 1,666 |
| கூட்டாளி நட்டத்தை ஏற்றது | 5,000 | 3,332 | 1,668 |

17. மயில், மான் மற்றும் கிளி என்ற கூட்டாளிகள் 3:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் கூட்டாண்மையைக் கலைக்க முடிவு செய்தனர் மற்றும் பணமாக்கப்படும்போது விற்பனை தொகை பகிரப்பட வேண்டும்.

கூட்டாளிகளின் முதல் கீழ்வருமாறு: மயில் ரூ.10,000, மான் ரூ.9,000 மற்றும் கிளி ரூ.5,000, மானின் கடன் தொகை (வ) ரூ.3,000.

பற்பல கடனீந்தோர்கள் ரூ.6,000

சொத்துகள் பணமாக்கப்பட்டது பின்வருமாறு

| மாதம் | சரக்கு ரூ. | மனைத்துணை ரூ. | கடனாளிகள் ரூ. | செலவுகள் ரூ. |
|---|---|---|---|---|
| ஜூலை | 3,000 | 300 | 2,000 | 500 |
| ஆகஸ்ட் | 2,000 | 100 | 1,500 | 200 |
| செப்டம்பர் | 2,500 | - | 2,000 | 300 |
| அக்டோபர் | 3,000 | - | 1,500 | 200 |

ரொக்க பகிர்வைக் காண்பிக்கவும் மற்றும் கூட்டாளியின் முதல் கணக்கை முடிப்பதற்கு குறிப்பேடு பதிவுகளையும் காண்பிக்கவும்.

விடை:

| மாதம் | மயில் பெற்றது ரூ. | மான் பெற்றது ரூ. | கிளி பெற்றது ரூ. |
|---|---|---|---|
| செப்டம்பர் | - | - | 500 |
| | - | 1933 | 967 |

| | | | |
|---|---|---|---|
| அக்டோபர் | - | 400 | 200 |
| | 1850 | 1233 | 617 |

**கூட்டாண்மை நிறுவனங்கள் இணைப்பு**

18. இரண்டு நிறுவனங்கள் 'P & Q' மற்றும் 'R & S' அவர்களின் வியாபாரத்தை இணைக்க முடிவு செய்தனர்.

**டிசம்பர் 31இல் 'P & Qஇன் இருப்புநிலை:**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | 1,04,000 | வங்கியில் ரொக்கம் | 1,56,000 |
| முதல் : | | கடனாளிகள் | 1,30,000 |
| P | 1,82,000 | வியாபார சரக்கு | 42,000 |
| Q | 1,30,000 | அலுவலகக் கட்டிடம் | 78,000 |
| | | மனைத்துணை | 10,000 |
| | **4,16,000** | | **4,16,000** |

**டிசம்பர் 31இல் 'R & S'ன் இருப்பு நிலை:**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | 52,000 | வங்கியில் ரொக்கம் | 65,000 |
| முதல் : | | கடனாளிகள் | 1,04,000 |
| R | 91,000 | வியாபாரச் சரக்கு | 26,000 |
| S | 65,000 | மனைத்துணை | 13,000 |
| | **2,08,000** | | **2,08,000** |

கடனீந்தோர்கள் மற்றும் கடனாளிகளைப் புதிய நிறுவனமான 'PQRS' எடுக்கவில்லை. அலுவலகக் கட்டிடத்தை P மற்றும் Q நிறுத்தி வைத்ததைப் புதிய நிறுவனம் மாத வாடகையாக ரூ.400

செலுத்த ஒப்புக்கொண்டனர். புதிய நிறுவனத்தில் பணத் தேவைக்காக ரூ.1,30,000 மதிப்பீடு செய்யப்பட்டதைக் கூட்டாளிகளுக்கு அவர்களின் புதிய இலாபப் பங்கு விகிதத்தில் பகிர வேண்டும். P 3/10; Q 3/10; R 2/10; S 2/10

1. PQ மற்றும் RSஇன் புத்தகத்தை எழுதவும்.
2. PQRSஇன் ஆரம்ப இருப்பு நிலையைக் காண்பிக்கவும்.

**விடை:**

PQRS நிறுவனத்தின் மொத்த இருப்பு நிலை ரூ.2,21,000.

19. S & Co—யிடம் B மற்றும் S கூட்டாளியாக 3:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். T&Co-யிடம் S மற்றும் T கூட்டாளியாக 2 : 1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர்.

அக்டோபர் 2000, 31 அன்று இணைக்க முடிவு செய்து புதிய நிறுவனமாக M/S BST & Co என உருவானது. B, S மற்றும் T என்ற கூட்டாளிகள் 3:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்தனர்.

**அந்தத் தேதியின் இருப்பு நிலை பின்வருமாறு:**

| பொறுப்புகள் | S&Co ரூ. | T&Co ரூ. | சொத்துகள் | S&Co ரூ. | T&Co ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் : | | | கையில் ரொக்கம் | 10,000 | 5,000 |
| B | 1,20,000 | - | வங்கியில் ரொக்கம் | 15,000 | 20,000 |
| S | 80,000 | 1,00,000 | இதரக் கடனாளிகள் | 80,000 | 1,00,000 |
| T | - | 50,000 | சரக்கு | 60,000 | 70,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒதுக்கீடுகள் | 25,000 | 50,000 | மனைத்துணை | 10,000 | 3,000 |
| இதரக் கடனீந்தோர்கள் | 60,000 | 58,000 | இயந்திரம் | 75,000 | - |
| X&Co—க்கு கொடுக்க வேண்டியது | 40,000 | - | கட்டிடம் | 25,000 | - |
| S&Co—க்கு கொடுக்க வேண்டியது | - | 50,000 | வாகனம் | - | 80,000 |
| | | | T&Co—யிடமிருந்து வரவேண்டியது | 50,000 | - |
| | | | X&Co—யிடமிருந்து வரவேண்டியது | - | 30,000 |
| | 3,25,000 | 3,08,000 | | 3,25,000 | 3,08,000 |

இணைக்கப்பட்ட நிறுவனம் பின்வரும் நிபந்தனைகளில் வியாபாரத்தை எடுத்துக்கொண்டது:

1. S&Co—வின் நற்பெயர் மதிப்பு ரூ.60,000 மற்றும் T&Co ரூ.50,000 புதிய நிறுவன புத்தகத்தில் நற்பெயர் கணக்கு ஆரம்பிக்கப்படக்கூடாது. அந்தச் சரிக்கட்டல் கூட்டாளிகளின் முதல் கணக்கின் மூலமாகப் பதிவு செய்யப்படும்.
2. கட்டிடம், இயந்திரம், வாகனம் ஆகியவற்றை ரூ.50,000, ரூ.90,000, ரூ.1,00,000—க்கு எடுத்துக்கொண்டனர்.
3. S&Co—வின் கடனாளிகளுக்காக ஐயக்கடன் ஒதுக்கீடு ரூ.4,000 எடுத்துச் செல்லப்பட வேண்டும். மற்றும் T&Co—வின் கடனாளிகளுக்காக ரூ.5,000.

**நீங்கள் தயாரிக்க வேண்டியவை**

1. நற்பெயருக்குத் தேவையான சரிக்கட்டலைக் கணக்கிடவும்.

2. BST&Co புத்தகத்தில் குறிப்பேடு பதிவுகளைத் தயாரிக்கவும். முதல்களின் மிகுதி அல்லது பற்றாக்குறையை ஏற்றுக்கொண்டு (Tஇன் முதலை அடிப்படையாக எடுத்துக்கொண்டு) இலாபத்தின் பங்கை நடப்புக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

விடை:

நற்பெயருக்கு B மற்றும் T-ரூ.10,000 மற்றும் ரூ.1,667க்கு பற்றாக்கப்படும். S-ரூ.11,667க்கு வரவாக்கப்படும், நடப்பு கணக்கில் தொகை மாற்றப்பட்டது B ரூ.54,250(ப) S ரூ.1,10,250(வ).

நிறுவன விற்பனை:

20. கறுப்பு, வெள்ளை மற்றும் பச்சை கூட்டாண்மையில் இருந்தனர். 1/2, 1/3 மற்றும் 1/6 என்ற இலாப பங்கு விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் நிறுவனத்தை B.W.G என்ற தனியார் லிமிடெட் கம்பெனியாக மாற்ற அவர்கள் முடிவு செய்தனர்.

2008 மார்ச் 31ம் ஆண்டிற்கான இருப்புநிலை:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | 8,000 | நிலம் மற்றும் கட்டிடம் | | 11,400 |
| முதல் : | | சரக்கு | | 10,000 |
| கறுப்பு | 17,400 | கடனாளிகள் | 10,000 | |
| பச்சை | 8,000 | (–) ஒதுக்கீடு | 1,000 | 9,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| வெள்ளை | 6,000 | ரொக்கம் | | 6,000 |
| | | இலாப & நட்டம் | | 3,000 |
| | 39,400 | | | 39,400 |

B.W.G என்ற தனியார் லிமிடெட், 2008 மார்ச் 31 அன்று ஒன்றாக்கப்பட்டது. கறுப்பு, பச்சை, வெள்ளை வியாபார கூட்டாண்மை நீடிப்பதற்கும் கொள்முதல் செய்வதற்கும் அதிகாரப்பத்திர முதலாக ரூ.50,000/—க்கு (500 பங்குகள் தலா ரூ.100) இருந்தது. ரூ.32,900 கொள்முதல் விலையாக இருந்தது. அவை 180 பங்குகளாகப் பிரித்து B.W.G தனியார் லிமிடெட்டில் செலுத்தப்பட்டது (முழுமையாக செலுத்தப்பட்டது) மீதம் ரொக்கமாக செலுத்தப்பட்டது. நிறுவனப் பங்குகளை முழுமையாக செலுத்தியதற்கு அந்த நிறுவனம் மீதமுள்ள பங்குகளை பிரவுன் மற்றும் புளுவிற்கு சம விகிதத்தில் வழங்கியது. புத்தகத்தை மூடுவதற்கு தேவையான குறிப்பேடு பதிவுகளை தயாரிக்கவும்.

**விடை:**

பணமாக்கப்பட்ட இலாபம் ரூ.4500; பங்குகளாக செலுத்தியது: கறுப்பு ரூ.9000, பச்சை ரூ.3000, வெள்ளை ரூ.6000, ரொக்கமாக செலுத்தியது: கறுப்பு ரூ.9150, பச்சை ரூ.5250, வெள்ளை ரூ.500.

21. S மற்றும் V இலாப நட்டத்தை சமமாக பகிர்ந்தனர். அவர்கள் வியாபாரத்தை லிமிடெட் கம்பெனியாக மாற்ற முடிவெடுத்தனர். டிசம்பர் 31, 2000ம் ஆண்டின் இருப்புநிலை பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர்கள் | | 48,000 | பற்பல கடனாளிகள் | 60,000 |
| கடனீந்தோர்களின் கடன் | | 40,000 | பெறுதலுக்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | | 16,000 | வியாபாரச் சரக்கு | 36,000 |
| ஒதுக்கீடு நிதி | | 6,000 | உரிமைப் பத்திரம் | 8,000 |
| முதல் கணக்கு : | | | பொறி மற்றும் இயந்திரம் | 16,000 |
| S | 40,000 | | நிலம் மற்றும் கட்டிடம் | 60,000 |
| V | 40,000 | 80,000 | | |
| | | 1,90,000 | | 1,90,000 |

1. கடந்த மூன்று வருடங்களுக்கு நிறுவனத்தின் நற்பெயர் இரண்டு வருட கொள்முதலின் இலாபத்தில் மதிப்பிட பட வேண்டும்.
2. நிலம் மற்றும் கட்டிடம், பொறி மற்றும் இயந்திரத்தின் மதிப்பு ரூ.1,00,000 மற்றும் ரூ.24,000.
3. மீட்டுக்கொள்ளப்பட்ட முன்னுரிமை பங்கு 7½%ல் அவர் வாங்கிய பங்கின் கணக்கை தீர்த்து, கடனீந்தோர்கள் கடன் (Loan Creditors) ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டது.
4. விற்பவர்கள் ரூ.2,10,000 மதிப்புள்ள நேர்மை பங்குகளை பங்கிட்டனர்.
5. நிறுவனத்தின் முந்தைய பலன்களின் இலாபம் 2008—ல் ரூ.30,000, 2009—ல் ரூ.42,000, பிறகு ஒவ்வொரு வருடமும் ரூ.20,000 ஒதுக்கீடு நிதி செய்யப்பட்டது.

பணமாக்கப்பட்ட க/கு, நிறுவன புத்தகத்தில் முதல் க/கு-யை காண்பிக்கவும்.

விடை:

பணமாக்கப்பட்ட இலாபம் ரூ.1,24,000

22. ராவ், ரஹ்மான் மற்றும் ராபர்ட் என்ற கூட்டாளிகள், ஒன்று—பாதி, மூன்று—எட்டு மற்றும் ஒன்று—எட்டு என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். டிசம்பர் 31, 2000 அன்று புதியதாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டு பங்கு கம்பெனியிடம் தங்களுடைய நிறுவனத்தை விற்க முடிவு செய்தனர். அவர்களுடைய இருப்பு நிலை பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| ராவ்வின் முதல் | 20,000 | ஃபிரிஹோல்டு சொத்து | 18,000 |
| ரஹ்மானின் முதல் | 15,000 | இயந்திரம் | 12,000 |
| ராபர்ட்டின் முதல் | 13,000 | புத்தக கடன் | 15,000 |
| பற்பல கடனீந்தோர்கள் | 12,000 | சரக்கு | 13,000 |
| | | ரொக்கம் | 2,000 |
| | **60,000** | | **60,000** |

கம்பெனி பின்வரும் சொத்துக்களை பின்வரும் மதிப்பில் எடுத்துக்கொண்டது.

| | ரூ. |
|---|---|
| ஃபிரிஹோல்டு சொத்து | 26,000 |
| இயந்திரம் | 10,000 |
| புத்தக கடன் | 14,000 |
| சரக்கு | 12,000 |
| நற்பெயர் | 5,000 |

ஃபிரிஹோல்டு சொத்து மற்றும் இயந்திரம் கொள்முதல் விலையில் கம்பெனி அதனுடைய சாதாரண பங்குகள் ரூ.36,000—ல் செலுத்த வேண்டும். மற்றும் புத்தக கடன், சரக்கு மற்றும் நற்பெயர் ரொக்கத்தில் செலுத்த வேண்டும். நிறுவனம் பற்பல கடனீந்தோர்களை 3% தள்ளுபடியில் நீக்கப்பட்டது மற்றும் பணமாக்கப்பட்டபோது ஏற்பட்ட செலவுகள் ரூ.1000.

நிறுவன புத்தகத்தை மூடுவதற்கு குறிப்பேடு பதிவுகளை காண்பிக்கவும். கூட்டாளிகளிடையே இறுதி கணக்குத் தீர்த்தல் மற்றும் கலைக்கப்பட்ட பலன்களை பேரேடு கணக்கில் காண்பிக்கவும்.

23. F, G மற்றும் H என்ற கூட்டாளிகள் 4:3:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். அவர்கள் நிறுவனத்தை கலைக்க முடிவு செய்தனர். அந்த தேதியில் உள்ள இருப்பு நிலை பின்வருமாறு :

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | | 6,000 | கையில் ரொக்கம் | 1,000 |
| முதல் கணக்கு : | | | கடனாளிகள் | 7,500 |
| F | 10,000 | | சரக்கு | 6,500 |
| G | 7,500 | | பொறி | 6,000 |
| H | 6,500 | 24,000 | நிலம் மற்றும் கட்டிடம் | 9,000 |
| | | 30,000 | | 30,000 |

S&Co லிமிடெட், நிறுவனத்தின் அனைத்து சொத்துக்களையும் எடுத்துக் கொண்டனர். சொத்துக்கள் பின்வருமாறு:

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| கடனாளிகள் | 7,000 | சரக்கு | 6,000 |
| பொறி | 5,500 | நிலம் மற்றும் கட்டிடம் | 11,000 |

நிறுவனம் நற்பெயரை ரூ.2000—க்கு கூடுதலாக செலுத்த ஒப்புக்கொண்டது.

வழங்கப்பட்ட 1650 பங்குகள் ஒவ்வொன்றும் ரூ.10 முழுமையாக செலுத்தப்பட்ட பங்கின் மூலமாக S&Co லிமிடெட்டிற்கு விற்பனை விலையில் செலுத்தப்பட்டு மீதம் ரொக்கமாக செலுத்தப்பட்டது. பற்பல கடனீந்தோருக்கு தள்ளுபடியாக ரூ.150 அளிக்கப்பட்டது. பணமாக்கப்பட்ட செலவுகள் ரூ.250.

நிறுவனத்தின் புத்தகத்தை மூடுவதற்கு தேவையான பேரேடு கணக்குகள் மற்றும் S&Co லிமிடெட் புத்தகத்தில் ஆரம்ப பதிவுகளை காண்பிக்கவும்.

## அலகு – III

## கிளை நிறுவன கணக்குகள்

**பொருள்**

வியாபாரத்தை விரிவுப்படுத்துவதற்கு தலைமை அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் புதியக் கிளைகள் பல்வேறு மையங்களில் தொடங்கப்படுகிறது, அல்லது ஒரே மேலாண்மையில் பல்வேறுத் துறைகள் தொடங்கப்படுகிறது. இவை முன் கூறிய முறையில் கிளை நிறுவனம் என்றும், பின் கூறிய முறையில் துறைவாரி நிறுவனம் என்றும் அழைக்கப்படுகிறது. பல்வேறுக் கடைகள் அல்லது பிணைக் கடைகள் சில்லறை வியாபாரத்தின் எடுத்துக்காட்டாகும். கிளை நிறுவனங்களில், விற்பனை மட்டுமல்லாமல் தயாரிப்பும் மற்ற நடவடிக்கைகளும் ஒருங்கிணைந்தது கிளை நிறுவனமாகும். ஒரு நிறுவனத்தில் பல்வேறு இடங்களில் உற்பத்தி மையங்கள் அமைக்கப்படும். நாடு முழுவதும் வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனங்களில் வலைப் பின்னலாக கிளைகள் உள்ளன.

ஷார்டர்ட் அக்கவுண்டன்ட் போன்ற உத்தியோகத்தில் இருப்பவர்கள் தனக்கென பல்வேறு மையங்களில் கிளைகளை வைத்துள்ளனர். ஒவ்வொரு கிளை நிறுவனங்களில் அல்லது துறை நிறுவனங்களில் அதற்கான இலாப நட்டத்தை ஈட்டுவதற்கு முடியவில்லை என்றால் அந்த நிறுவனத்தை மூடுவதற்கோ அல்லது அதை உயர்த்துவதற்கோ தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**கிளை வகைகள்**

கணக்கியல் பார்வையில் கிளைகள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை பின்வருமாறு:

1. சார்புக் கிளைகள்

இந்தச் சார்புக் கிளைகள் தனக்கென எந்த ஒரு தனிக் கணக்குப் புத்தகத்தையும் தயாரிப்பதில்லை. அவற்றின் முழுக் கணக்கையும் அதன் தலைமை அலுவலகத்தில் மட்டுமே வைக்கப்படுகின்றது.

2. சார்பில்லாக் கிளைகள்

இந்தக் கிளைகள் தனக்கென முழு முறையானக் கணக்கை அக்கிளைகளின் புத்தகத்திலே தயாரிக்கின்றது.

3. வெளிநாட்டுக் கிளைகள்

வெளிநாட்டுக் கிளைகள் என்பது சார்பில்லாக் கிளைகள் நாட்டின் வெளியில் வைக்கப்படுகின்றது.

சார்புக் கிளைகள்

சார்புக் கிளைகள் என்பது அக்கிளைகள் தனக்கென எந்த ஒரு தனிக் கணக்கை தனிப் புத்தகத்தில் தயாரிப்பதில்லை. அக்கிளைகளின் எல்லா நடவடிக்கைகளும் தலைமை அலுவலகத்தில் மட்டுமே பதிவு செய்யப்படுகிறது. சார்புக் கிளைகள் இருப்பு அட்டவணையையும், கடனாளியின் அட்டவணையையும் கிளை நிறுவனத்தின் குறிப்பில் பதிவு செய்கிறது. இப்பதிவுகள் கணக்குப் புத்தகத்தில் உள்ளடங்காது.

பொதுவாகச் சார்புக் கிளைகள் பொருள் விற்பனைக்கும் அன்றாடச் செலவுகளை சந்திப்பதற்கும், பொதுக் கட்டுப்பாட்டிற்கும் மற்றும் வழிகாட்டலுக்கும் தலைமை அலுவலகத்தைச் சார்ந்திருக்கிறது. வசூலித்தத் தொகையை உடனடியாகத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பியோ அல்லது தலைமை அலுவலகத்தின் பெயரில் வங்கிக் கணக்கில் செலுத்தவோ வேண்டும்.

கணக்கியல் முறையில் சார்புக் கிளைகள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை:

1. ரொக்கத்திற்கு மட்டும் கிளையின் விற்பனை

இந்தக் கிளைகள் தேவையானப் பொருட்களைத் தலைமை அலுவலகத்திடமிருந்து பெறுகிறது. அவை ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனைச் செய்யப்படுகிறது. பணம் பெறப்பட்டதைத் தலைமை அலுவலகத்திற்கு உடனடியாக அனுப்பியோ அல்லது தலைமை அலுவலகப் பெயரில் வங்கிக் கணக்கில் செலுத்தவோ வேண்டும்; பணம் அனுப்பப்பட்டதை வைத்து செலவுகளைத் தலைமை அலுவலகம் ஏற்கிறது.

**2. ரொக்கம் மற்றும் கடனிற்கு கிளை விற்பனை செய்யும்**

மேலே கூறப்பட்டதைப்போல்தான், ஆனால் ரொக்கத்திற்கும் கடனிற்கும் கிளை விற்பனைச் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**3. பொருளின் இடாப்பு விலையில் கிளைக் கொடுத்தது**

மேலே கூறப்பட்ட இரண்டு வகைகளைப் போன்றதுதான். ஆனால் இதில் உள்ள வேறுபாடு என்னவென்றால், பொருளின் இடாப்பு விற்பனை விலைக்கே தலைமை அலுவலகத்திலிருந்துக் கிளைகளுக்குச் செலுத்தப்படுகிறது.

**சார்புக் கிளை நிறுவனங்களின் பல்வேறு கணக்கியல் முறைகள்**

கீழ்க்கண்ட வகைகளில் எவையேனும் ஒன்றின் மூலம் தலைமை அலுவலகம் சார்புக் கிளைக் கணக்குகளைப் பராமரிக்கிறது.

1. கடனாளிகள் முறை
2. இறுதிக் கணக்கு முறை
3. சரக்கிருப்பு மற்றும் கடனாளிகள் முறை
4. மொத்த வியாபாரம் கிளை முறை

**1. கடனாளிகள் முறை**

இந்த முறையில், தலைமை அலுவலகம் ஒரு கிளைக்காக ஒரு கணக்கைத் தொடங்குவது "கிளைக் கணக்கு" எனப்படும். கிளைக் கணக்கு பெயர்பட்டியல் கொண்டத் தன்மை உடையது மற்றும் அதைத் தலைமை அலுவலகப் புத்தகத்தில்

தயாரிக்கப்படுகிறது. இந்த முறையைத் தலைமை அலுவலகம் கீழ்க்காணும் முறையில் பதிவுச் செய்கிறது.

1. கிளைக்குப் பொருட்களைக் கொள்முதல் விலைக்கு அனுப்பப்படும்போது:

| | | |
|---|---|---|
| கிளைக் க/கு ப | xxx | |
| கிளைகளுக்குப் பொருட்களை அனுப்பியதுக/கு | | xxx |

2. கிளைகளால் பொருட்களைத் திரும்ப அனுப்பப்படும்போது

| | | |
|---|---|---|
| கிளைகளுக்குப் பொருட்களை அனுப்பியக் க/கு ப | xxx | |
| கிளை க/கு | | xxx |

3. கிளையின் சிறுச் செலவுகளைச் சந்திப்பதற்குக் கிளைக்கு ரொக்கம் அனுப்பப்படும்போது:

| | | |
|---|---|---|
| கிளை க/கு ப | xxx | |
| வங்கி/ரொக்கக் க/கு | | xxx |

4. கிளையிடமிருந்து ரொக்கம் பெறும்போது:

| | | |
|---|---|---|
| வங்கி/ரொக்க க/கு ப | xxx | |
| கிளைக் க/கு | | xxx |

5. கிளைகளிடம் வழக்கமாக விற்கப்படாதச் சரக்கிருப்பு, செலவிடப்படாத சிறுச் செலவு இருப்பு, வசூலிக்கப்படாதக் கடனாளிகள், சொத்துகள் மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள் இவை அனைத்தும் வருட இறுதியில் இருக்கும். மேலே கூறப்பட்ட விவரங்களிலிருந்து அவை தலைமை அலுவலகத்தில் கீழ்வருமாறு ஒன்றிணைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கிளைச் சரக்கிருப்பு | க/கு ப | xxx |
| கிளைச் சிறுச்செலவு | க/கு ப | xxx |

| | | | |
|---|---|---|---|
| கிளைக் கடனாளிகள் | க/கு | ப | XXX |
| கிளைச் சொத்து | க/கு | ப | XXX |
| கிளை முன்கூட்டி செலுத்தியச் செலவு | க/கு | ப | XXX |
| கிளைக் க/கு | | | XXX |

அதேபோல், பொறுப்புகள் இருந்தால், கிளைக் கணக்கில் பற்றாக்கப்படும்.

6. முந்தைய வருடத்தின் இறுதியில் உள்ளச் சரக்கிருப்பு, கடனாளிகள், சிறுச் செலவுகள் ஆகியவை நடப்பு ஆண்டுகளின் தொடக்கச் சொத்துக்களாக வரும் மற்றும் அவை கீழக்காணும் பதிவின்படி கிளைக் கணக்கிற்கு பற்றாக மாற்றப்படும்.

| | | | |
|---|---|---|---|
| கிளை க/கு | | ப | XXX |
| கிளையின் (தொடக்க) சரக்கிருப்பு | க/கு | | XXX |
| கிளையின் (தொடக்க) கடனாளிகள் | க/கு | | XXX |
| கிளையின் (தொடக்க) சிறு செலவுகள் | க/கு | | XXX |

தொடக்கப் பொறுப்புகள் இருந்தால் அவை கிளைக் கணக்கில் கடனாக மாற்றப்படும்.

தலைமை அலுவலகப் புத்தகத்தில்

கிளைக் கணக்கு

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | xxx | இருப்பு கீ/கொ | xxx |
| (ஆரம்பத்தில் சொத்துக்கள்) | | (ஆரம்பத்தில் பொறுப்புகள்) | |
| அ) கையிருப்பு ரொக்கம் | | அனுப்பப்பட்ட தொகைப் பெறப்பட்டது | |
| ஆ) சரக்கிருப்பு | | ரொக்க விற்பனை | |
| இ) கடனாளிகள் | | கடனாளிகளிடம் பணம் வசூலித்தது | |
| ஈ) மனைத்துணை | | கிளைகளுக்குப் பொருட்களை | |
| உ) மற்றச் சொத்துகள் | | அனுப்பியது (திருப்பியது) | |
| கிளைகளுக்குப் பொருட்களை அனுப்பியது | | இருப்பு கீ/இ | |
| வங்கி (தலைமை அலுவலகத்தில் | | (இறுதி சொத்துகள்) | |
| செலுத்தியச் செலவுகள்) | | அ) கையிருப்பு ரொக்கம் | |
| | | ஆ) சரக்கிருப்பு | |
| இருப்பு கீ/இ (இறுதிப் பொறுப்புகள் | | இ) கடனாளிகள் | |
| இருந்தால்) | | ஈ) மனைத்துணை | |
| இலாபம் | | உ) மற்றச் சொத்துகள் | |
| | xxx | நஷ்டம் | xxx |
| | xxx | | xxx |

கிளைக் கணக்கைத் தயாரிக்கும்போது கீழக்காணும் தகவல்களை மனதில்கொள்ள வேண்டும்.

1. அவ்வருடத்தில் ரொக்கம் வசூலிக்கப்பட்டதிலிருந்துக் கிளை வாங்கிய நிலையானச் சொத்துகள், இந்த நடவடிக்கை ஒரு பக்கம் புத்தக மதிப்பீட்டை அதிகரிக்கும் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு பணம் அனுப்பப்பட்டது குறையும். அதேபோல், கிளை, ரொக்கத்திற்கு நிலையானச் சொத்தை விற்றால் நிலையானச் சொத்தின் புத்தக மதிப்பு குறையும் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு பணம் அனுப்பப்பட்டது உயரும்.
2. கிளைக் கணக்கில் நிலையானச் சொத்தின் ஆரம்ப மதிப்பு பற்றுப் பக்கத்திலும் இறுதி மதிப்பு வரவுப் பக்கத்திலும் காண்பிக்கப்படும். நஷ்டம் அல்லது நிலையானச் சொத்தின்

விற்பனை, இலாபம் அல்லது தேய்மானம் இவைக் கிளைக் கணக்கில் எங்கும் காண்பிக்கப்படமாட்டாது.

3. தலைமை அலுவலகத்தில் இருந்து கிளையின் சிறுச் செலவுகளுக்காகப் பெறப்பட்ட சிறு செலவு ரொக்கம் கணக்கில் எங்கும் காண்பிக்கப்படவில்லை. அத்தகைய செலவுகள் வருட இறுதியில் சிறு செலவு ரொக்கத்தை குறைக்கும். மற்றும் இறுதி சிறு செலவு ரொக்க இருப்பைக் கிளைக் கணக்கில் வரவுப் பக்கத்தில் காண்பிக்க வேண்டும்.

4. இம்ப்ரஸ்ட் முறையில் சிறு செலவு ரொக்கக் கணக்குத் தயாரிக்கப்பட்டால், தலைமை அலுவலகம் அக்காலங்களில் ஏற்படும் சிறு செலவுகளைத் திருப்பி வாங்கிக்கொள்ளும். அதனால் வருட இறுதியில் உள்ள சிறுச் செலவு ரொக்க இருப்பு தொடக்கத் தொகையில் தோன்றும்.

5. ரொக்க விற்பனைக்கோ அல்லது கடன் விற்பனைக்கோ பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லை. கடனாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட ரொக்கத்தையும் அதனுடன் ரொக்க விற்பனையிலிருந்துப் பணமாக்கப்பட்டதையும் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படும். மற்றும் மொத்தத் தொகையும் கிளைக் கணக்கில் வரவாக்கப்படும்.

6. நீக்கப்பட்ட வாரா கடனுக்கு அளிக்கப்பட்டத் தள்ளுபடி அல்லது வாடிக்கையாளர்களிடமிருந்து கிளைகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டப் பொருள்கள் இவை அனைத்திற்கும் தலைமை அலுவலகம் எந்த ஒரு பதிவுகளும் செய்யப்படமாட்டாது. சாதாரணமாக இவ்விவரங்கள் வருட இறுதியில் கிளைக் கணக்கில் கடனாக்கப்பட்டக் கடனாளியின் இருப்பைக் குறைக்கும்.

7. சரக்கிருப்பு அல்லது கடனாளிற்குச் சம்பந்தப்பட்டத் தகவல்கள் தரப்பட்டால் அவைக் குறிப்புச் சரக்கிருப்புக்

கணக்கு அல்லது கடனாளிகளின் கணக்கைத் தயாரிப்பதன் மூலம் ஊகித்துக்கொள்ளலாம்.

**எடுத்துக்காட்டு – 1**

டிசம்பர் 31, 2008 ஆம் ஆண்டுக்கான திருவனந்தபுரம் கிளை பற்றிய விவரங்கள் பின்வருமாறு. தலைமை அலுவலகத்தின் புத்தகத்தில் கிளைக் கணக்கைக் காண்பிக்கவும்.

| விவரங்கள் | | ரூ. |
|---|---|---|
| சரக்கிருப்பு 01.01.08 | | 30,000 |
| கடனாளிகள் | | 12,000 |
| சிறு செலவு ரொக்கம் | | 200 |
| அவ்வருடத்தில் கிளைக்குப் பொருட்களை அனுப்பியது | | 50,000 |
| தலைமை அலுவலகத்திற்குப் பொருட்கள் திரும்பியது | | 600 |
| கிளையில் விற்பனை | | |
| ரொக்கம் | ரூ.30,000 | |
| கடனீந்தோர் | ரூ.42,000 | 72,000 |
| கிளைக்கு விற்பனைத் திருப்பம் | | 250 |
| வராக்கடன் நீக்கியது | | 300 |
| வாடிக்கையாளருக்குத் தள்ளுபடி அளித்தது | | 100 |
| தலைமை அலுவலகம் கிளைச் செலவுகளைச் செலுத்தியது | | 3,000 |
| கிளைக்குச் சிறு செலவு ரொக்கம் அனுப்பியது | | 500 |

| | |
|---|---|
| கிளையினால் ஏற்பட்ட சிறு செலவுகள் | 400 |
| கிளை மனைத்துணையை வாங்கியது | 1,000 |
| 31, டிசம்பர் 2008 அன்று சரக்கிருப்பு | 12,500 |
| வாடிக்கையாளரிடமிருந்து பணம் பெற்றது | 35,000 |

**தீர்வு :**

**குறிப்பு:**

இறுதியில் இருக்கும் கடனாளிகள் மற்றும் சிறுசெலவு ரொக்க இருப்புக் கண்டுபிடிப்பதற்காகக் குறிப்பு கடனாளிகள் க/கு மற்றும் சிறுசெலவுக் க/கு தயாரிக்கவும்.

| | விவரங்கள் | ரூ. | | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| **2008 ஜன.1** | இருப்பு கீ/கொ | 12,000 | **2008 டிச.31** | ரொக்கம் பெற்றது | 35,000 |
| **டிச. 31** | கடன் விற்பனை | 42,000 | **ஜன.1** | விற்பனை திருப்பம் | 250 |
| | | | | வராக்கடன் | 300 |
| | | | | தள்ளுபடி அளித்தது | 100 |
| | | | | இருப்பு (இறுதி கடனாளிகள்) | 18,350 |
| | | **54,000** | | | **54,000** |

| | விவரங்கள் | ரூ. | | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| **2008 ஜன.1** | இருப்பு கீ/கொ | 200 | **2008 டிச.31** | சிறு செலவுகள் | 400 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டிச. 31 | ரொக்கம் பெற்றது | 500 | ஜன.1 | இருப்பு கீ/இ (இறுதி சிறு செலவு ரொக்கம்) | 300 |
| | | 700 | | | 700 |

**தலைமை அலுவலக புத்தகத்தில்**

**திருவனந்தபுரம் கிளை க/கு**

| | விவரங்கள் | | ரூ. | | விவரங்கள் | | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ: | | | 2008 டிச.31 | பணம் அனுப்பியது: | | |
| | சரக்கிருப்பு | 30,000 | | | ரொக்க விற்பனை | 30,000 | |
| | கடனாளிகள் | 12,000 | | | கடனாளிகளிடம் இருந்து ரொக்கம் பெற்றது | 35,000 | |
| | சிறு செலவு ரொக்கம் | 200 | 42,200 | | | | |
| | | | | | | 65,000 | |
| டிச.31 | கிளைக்கு பொருட்களை அனுப்பியது | | 50,000 | | (–) மனைத்துணை வாங்கியது | 1,000 | 64,000 |
| | வுங்கி க/கு: | | | டிச.31 | கிளைக்கு பொருட்கள் அனுப்பியது (திருப்பம்) | | 600 |
| | செலவுகள் | | 3,000 | டிச.31 | இருப்பு கீ/இ | | |
| | சிறு செலவு ரொக்கம் | | 500 | | சரக்கிருப்பு | 12,500 | |
| | இலாபம (இலாப நட்டக் க/கு) | | 1,050 | | கடனாளிகள் | 18,350 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சிறு செலவு<br>ரொக்கம்<br>மனைத்துனை | 300<br><br>1,000 | <br><br>32,150 |
| | | | 96,750 | | | | 96,750 |

தலைமை அலுவலகம் "இறுதிக் கணக்கு முறையையும் பயன்படுத்தலாம். கிளையின் இலாப நட்டக் கணக்கு மற்றும் கிளைக் கணக்கைத் தயாரிப்பதற்கு கிளை வியாபார இலாப நட்டக் கணக்கை தயாரிக்கலாம். இங்குக் 'கிளைக் கணக்கு' தனி நபர் கணக்கு இயல்புடையது. கிளைக் கணக்கு கீழ்க்காணும் முறையில் தயாரிக்கப்படுகிறது.

**பற்றுப் பக்கத்தில்**

அ) ஆரம்பத்தில் இருக்கும் இருப்புச் சொத்துகள்

ஆ) கிளைக்குப் பொருட்களை அனுப்பியதுக் கழித்தல் திருப்பம்.

இ) கிளையின் செலவுகளுக்காக ரொக்கம் அனுப்பியது

ஈ) இலாப நட்டக் கணக்கிலிருந்து கிளைக்கு இலாபம் ஏற்பட்டது.

**வரவுப் பக்கத்தில்**

அ) ஆரம்பத்தில் இருப்புப் பொறுப்புகள் இருந்தால்

ஆ) கிளையிலிருந்து பணம் பெறப்பட்டது

இ) கிளை ஏற்படுத்திய நஷ்டம்

**எடுத்துக்காட்டு – 2**

எடுத்துக்காட்டு – 1லிருந்து கிளை வியாபார இலாப நஷ்டக் கணக்கு மற்றும் கிளைக் கணக்கைத் தயாரிக்கவும்.

**தீர்வு :**

கிளை வியாபார இலாப நட்டக் க/கு 31.12.2008ஆம் ஆண்டு

| | விவரங்கள் | | ரூ. | | விவரங்கள் | | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம்ப சரக்கிருப்பு | | 30,000 | | விற்பனை : | | |
| | தலைமை | | | | ரொக்கம் | 30,000 | |
| | அலுவலகத்திடமிருந்து | | | | கடன் | 42,000 | |
| | பொருள் பெற்றது | 50,000 | | | | 72,000 | |
| | (—) திருப்பம் | 600 | 49,400 | | (—) திருப்பம் | 250 | 71,750 |
| | மொத்த இலாபம் | | 4,850 | | இறுதி சரக்கிருப்பு | | 12,500 |
| | | | **84,250** | | | | **84,250** |
| | இதர செலவுகள் | | 3,000 | | மொத்த இலாபம் கீ/கொ | | 4,850 |
| | சிறு செலவுகள் | | 400 | | | | |
| | வராக்கடன் | | 300 | | | | |
| | தள்ளுபடி அளித்தது | | 100 | | | | |
| | நிகர இலாபம் | | 1,050 | | | | |
| | | | **4,850** | | | | **4,850** |

## கிளைக் கணக்கு

| | | | ரூ. | | | | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ : | | | 2008 ஜன.1 | கிளைக்கு பொருள் அனுப்பியது – திருப்பம் | | 600 |
| | | | | டிச. 31 | | | |
| | கிளை சரக்கிருப்பு | 30,000 | | | ரொக்கம் பெற்றது | | 64,000 |
| | கிளை கடனாளிகள் | 12,000 | | | | | |
| | கிளை சிறு செலவு ரொக்கம் | 200 | 42,200 | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| டிச. 31 | கிளைக்கு பொருள் அனுப்பியது | | 50,000 | | இருப்பு கீ/இ : | | |
| | கிளைக்கு சிறு செலவு ரொக்கம் | | 500 | | கிளை சரக்கிருப்பு | 12,500 | |
| | | | | | கிளை கடனாளிகள் | 18,350 | |
| | | | | | கிளை சிறு செலவு ரொக்கம் | 300 | |
| | | | | | கிளை மனைத்துனை | 1,000 | 32,150 |
| | ரொக்கம் — செலவுகள் செலுத்தியது | | 3000 | | | | |
| | இலாப நட்டக் க/கு (இலாபம்) | | 1,050 | | | | |
| | | | 96,750 | | | | 96,750 |

## இடாப்பு விற்பனை முறை கணக்குகள்

தலைமை அலுவலகத்தினால் விற்பனை விலைக்கே இடாப்பு செய்யப்பட்ட பொருளைக் கிளைகளுக்கு அனுப்பியதற்கு இரண்டு முக்கிய நோக்கங்கள் உள்ளன. முதல் நோக்கம் கிளையின் இலாபத்தை அந்தக் கிளையே அறியாமல் இருப்பதற்கு. ஆனால் முக்கியமான நோக்கம் என்னவென்றால் கிளையின் சரக்கிருப்பைப் பெரியதாக கட்டுப்படுத்துவதுமாகும். விற்பனை விலையில் இடாப்பு செய்யப்படுவது மற்றும் கிளைக்கு இடாப்பு விலையில் விற்பனையைக் கட்டாயப்படுத்துவது. இவையெல்லாம் சரக்கிருப்பைக் கட்டுப்படுத்துவதாகும்.

மாதிரி படிவம் பின்வருமாறு

குறிப்புச் சரக்குக் கணக்கு

| | | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜன.1 | இருப்பு கீ/கொ : | xxx | டிச. 31 | தலைமை அலுவலகத்திற்கு பொருளை அனுப்பியது | xxx |
| டிச. 31 | கிளைக்கு பொருட்களை அனுப்பியது | xxx | | விற்பனை – ரொக்கம் | xxx |
| | வாடிக்கையாளரிடமிருந்து திரும்பியது | xxx | | விற்பனை – கடன் | xxx |
| | உபரி | xxx | | பற்றாக்குறை | xxx |
| | | | | இருப்பு கீ/இ | xxx |
| | | xxx | | | xxx |

**கணக்கியல் முறை**

தலைமை அலுவலகத்திற்கு விற்பனை விலையில் பொருட்கள் அனுப்பப்பட்டால், இடாப்பு விலையில் மட்டுமே பதிவுச் செய்யப்படும். ஆரம்பச் சரக்கிருப்பு, கிளைக்குப் பொருள் அனுப்பியது மற்றும் இறுதிச் சரக்கிருப்பு இவையெல்லாம் கிளைக் கணக்கில் இடாப்பு விலையில் மட்டுமே பதிவாகும். உண்மையான இலாபத்தைக் கண்டறிவதற்காக, மேலே கூறப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தையும் இடாப்பு மற்றும் அடக்க விலையின் வித்தியாசத்தை சரிகட்டுவதற்கு, சரிகட்டல் பதிவுகள் பின்வருமாறு:

1. பொருள் அனுப்பும்போது ஏற்பட்டச் சுமையைச் (Load) சரிகட்டுவதற்கு

கிளைக் கணக்குக்கு பொருள் அனுப்பியது ப xxx

கிளைக் கணக்கு xxx

(அனுப்பியப் பொருளின் இடாப்பு விலை மற்றும் அடக்க விலை வித்தியாசத்துடன், அவ்ஆண்டிற்கானத் திருப்பத்தைக் கழித்தது)

2. இறுதி சரக்கிருப்பின் வித்தியாசத்தைச் சரிகட்டல்

கிளைக் கணக்கு ப xxx

கிளைச் சரக்கு ஒதுக்கீடு க/கு xxx

(இறுதிச் சரக்கிருப்பின் இடாப்பு விலை மற்றும் அடக்கவிலையின் வித்தியாசம்)

3. ஆரம்ப சரக்கிருப்பின் வித்தியாசத்தை சரிக்கட்டல் :

கிளைச் சரக்கு ஒதுக்கீடு க/கு ப XXX

கிளை க/கு XXX

(ஆரம்பச் சரக்கிரப்பின் இடாப்பு விலை மற்றும் அடக்கவிலையின் வித்தியாசம்)

மூன்றாவது கூறப்பட்டது மாற்றுப் பதிவாகும். ஆனால் இதன் நோக்கம் ஆரம்ப சரக்கிருப்பின் வித்தியாசத்தைச் சரிகட்டுவதாகும். முந்தியக் காலங்களின் கிளைக் கணக்கு மற்றும் கிளைச் சரக்கு ஒதுக்கீடு கணக்கு முடிவடைவதை அந்த ஆண்டின் கிளைக் கணக்கில் மாற்றம் செய்யப்படும்.

கிளைச் சரக்கிருப்புக் கணக்கு முடிவடைந்ததும், அக்கணக்கு வருட ஆரம்பத்தில் கிளைக் கணக்கில் மாற்றப்படும். மற்றும் கிளைச் சரக்கிருப்பு ஒதுக்கீடு கணக்கு வருட இறுதியில் மாற்றப்படும். நடப்பு ஆண்டு இறுதியில் உள்ள கிளைச் சரக்கின் கணக்கிருப்புச் சொத்தைக் குறிக்கும். அவை சரக்கு ஒதுக்கீட்டை கழித்ததற்குப் பின் இருப்பு நிலைக் குறிப்பேட்டில் காட்டப்படும். இந்த இருப்புகள் அடுத்த ஆண்டிற்குக் கொண்டுச் செல்லப்பட்டு, அடுத்த கணக்கியல் ஆண்டில் மாற்றப்பட்ட கிளை கணக்கில் முடிவடையும்.

எடுத்துக்காட்டு – 3

ஒரு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அதன் கோயம்புத்தூர் கிளைக்கு விலை+20 சதவீதத்தில் பொருட்களை இடாப்பு செய்து அனுப்பப்பட்டது. கோயம்புத்தூர் கிளைத்

தனிநபராக உள்ளூர் ஆள்களிடம் பொருட்களைக் கொள்முதல் செய்ததற்குத் தலைமை அலுவலகம் பணம் செலுத்தியது. கிளை வசூலித்தப் பணம் தலைமை அலுவலகக் கணக்கில் போடப்பட்டது. மற்றும் கிளையின் சிறுச் செலவு ரொக்கம் பராமரிக்கப்படுவதைத் தவிர அனைத்துச் செலவுகளையும் தலைமை அலுவலகம் செலுத்தியது. அவைக் குறித்தக் காலங்களில் தலைமை அலுவலகக் கணக்கில் மாற்றி அமைக்கப்பட வேண்டும். கீழ்காண்பவை 31.12.2008ஆம் ஆண்டுக்கான தலைமை அலுவலகம் பராமரிக்கப்படும் கிளைக் கணக்காகும்.

| | | ரூ. |
|---|---|---|
| இம்ரஸ்ட் ரொக்கம் | | |
| 01.07.2008 | | 2,000 |
| 31.12.2008 | | 1,850 |
| பற்பல கடனாளிகள் 01.07.2008 | | |
| சரக்கு 01.07.2008 | | |
| தலைமை அலுவலகத்தில் இருந்து மாற்றியது (இடாப்பு விலையில்) | 24,000 | |
| கிளை நேரடியாக வாங்கியது | 16,000 | 40,000 |
| ரொக்க விற்பனை | | 45,000 |
| கடன் விற்பனை | | 1,30,000 |
| நேரடிக் கொள்முதல் | | 45,000 |
| வாடிக்கையாளரிடமிருந்து திரும்ப பெற்றது | | 3,000 |
| தலைமை அலுவலகத்திடமிருந்து கிளைக்கு பொருட்களை அனுப்பியது (இடாப்பு விலை) | | 60,000 |
| தலைமை அலுவலகத்திடமிருந்து சிறு ரொக்க செலவுகள் மாற்றியது | | 2,500 |
| வராக்கடன் | | 1,000 |
| வாடிக்கையாளருக்கு தள்ளுபடி அளித்தது | | 2,000 |
| வாடிக்கையாளரிடமிருந்து ரொக்கம் பெற்றது | | 1,25,000 |
| கிளை செலவுகள் | | 3,000 |
| சரக்கிருப்பு 31.12.2008 : | | |
| தலைமை அலுவலகத்திடமிருந்து மாற்றியது (இடாப்பு விலை) | 18,000 | |
| கிளை நேரடியாக வாங்கியது | 12,000 | 30,000 |

தீர்வு :

## தலைமை அலுவலகப் புத்தகத்தில்
## குறிப்புக் கடனாளிகள் கணக்கு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ : | 25,000 | ரொக்கம் பெற்றது | 1,25,000 |
| கடன் விற்பனை | 1,30,000 | விற்பனை திருப்பம் | 3,000 |
| | | வராக்கடன் | 1,000 |
| | | தள்ளுபடி அளித்தது | 2,000 |
| | | இருப்பு கீ/கொ | 24,000 |
| | 1,55,000 | | 1,55,000 |

## கிளைக் கணக்கு

| 2008 | | | ரூ. | 2008 | | | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| ஜன்.1 | இருப்பு: | | | டிச. 31 | வங்கி : | | |
| | சரக்கு : தலைமை அலுவலகம் | 24,000 | | | ரொக்க விற்பனை | 45,000 | |
| | உள்ளூர் கொள்முதல் | 16,000 | 40,000 | | ரொக்கம் பெற்றது | 1,25,000 | |
| | கடனாளிகள் | | 25,000 | | | 1,70,000 | |
| | சிறுச் செலவு ரொக்கம் | | 2,000 | | (–) சிறுச் செலவு ரொக்கம் | 150 | 1,69,850 |
| டிச. 31 | கிளைக்கு பொருளை அனுப்பியது | | 60,000 | டிச. 31 | கிளைக்குப் பொருட்களை அனுப்பியது (Load) | | 10,000 |
| | வங்கி க/கு: | | | | கிளைச் சரக்கு ஒதுக்கீடு (ஆ.சரக்கின் சுமை(Load) | | 4,000 |
| | கிளைச் செலவுகள் | | 3,000 | | இருப்பு | | |
| | சிறுச் செலவு ரொக்கம் | | 2,500 | | சரக்கு தலைமை அலுவலகம் | 18,000 | |
| | நேரடிக் கொள்முதல் | | 45,000 | | உள்ளூர் | 12,000 | 30,000 |
| | கிளைச் சரக்கு ஒதுக்கீடு (இறுதிச் சரக்கிருப்பில் சுமை(Load)) | | 3,000 | | கடனாளிகள் | | 24,000 |
| | இலாபம் | | 59,350 | | சிறுச் செலவு ரொக்கம் (ரூ.1850 + 150) | | 2,000 |
| | | | 2,39,850 | | | | 2,39,850 |

**குறிப்பு :**

இம்ரஸ்ட் (Imprest) முறையில் சிறுச் செலவு ரொக்கத்தைப் பராமரிப்பதால், தலைமை அலுவலகம் சிறுச்செலவுக்காக கிளைக்குப் பணம் அனுப்பியதிலிருந்து ரூ.150/- கிளை கழித்து, வருட இறுதியில் சிறுச் செலவு இருப்பை ரூ.2,000/-ஆக கொண்டுவர வேண்டும்.

**எடுத்துக்காட்டு – 4**

கல்கத்தாவின் தலைமை அலுவலகம் டில்லியில் உள்ள கிளைக்குப் பொருட்களை அனுப்பிய முறை விலை+25%. கீழ்க்காணும் தகவலின்படி, தலைமை அலுவலக புத்தகத்தில் கீழ்க்காணும் கணக்குகளைத் தயாரிக்கவும்.

அ) டில்லி கிளை வியாபார க/கு

ஆ) டில்லி கிளை மொத்த கடனாளிகள் க/கு

இ) டில்லி கிளை க/கு

| | |
|---|---|
| | ரூ. |

| | |
|---|---|
| கிளைக்குப் பொருளைக் கொடுத்தது (இடாப்பு விலையில்) | 86,925 |
| வருடத்தில் மொத்த விற்பனை | 84,500 |
| வருடத்தில் ரொக்க விற்பனை | 38,400 |
| கடனாளிகளிடமிருந்து தொகையைப் பெற்றது | 42,500 |
| ஆரம்பத்தில் கிளைக் கடனாளிகள் | 15,500 |
| ஆரம்பத்தில் கிளைச் சரக்கிருப்பு | 18,240 |
| இறுதியில் கிளைச் சரக்கிருப்பு | 26,590 |
| தலைமை அலுவலகத்திற்கு பொருளைத் திருப்பியது (இடாப்பு மதிப்பு) | 5,480 |
| பொதுச் செலவுகள் (பின்னத்தைக் கவனியாதிரு) | 1,560 |

**தீர்வு:**

## டில்லிக் கிளை மொத்தக் கடனாளிகள் க/கு.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 15,500 | ரொக்கம் பெற்றது | 42,500 |
| கடன் விற்பனை | 46,100 | இருப்பு கீ/இ | 19,100 |
| | **61,600** | | **61,600** |

## டில்லி கிளை வியாபார க/கு

| | | ரூ. | | ரூ. |
|---|---|---|---|---|
| ஆரம்பச் சரக்கிருப்பு : (ரூ.18,240 – 3648) | | 14,592 | விற்பனை | 84,500 |
| தலைமை அலுவலகத்திடமிருந்து பொருள் (ரூ.86,925 – 17385) | 69,540 | | இறுதிச் சரக்கிருப்பு (ரூ.26590 – 5318) | 21,272 |
| (–) திருப்பம் (ரூ.5480 –1096) | 4,384 | 65,156 | | |
| மொத்த இலாபம் (பொது இலாப நட்டக் கணக்கில் வரவாக்கப்படும்) | | 26,024 | | |
| | | **1,05,772** | | **1,05,772** |

## பொது இலாப மற்றும் நட்ட க/கு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பொதுச் செலவுகள் | 1,560 | மொத்த இலாபம் | 26,024 |
| நிகர இலாபம் | 24,464 | | |
| | 26,024 | | 26,024 |

**கிளைக் கணக்கு**

| | | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | கிளைப் பொருட்களை அனுப்பியது (திருப்பம்) | | 4,384 |
| கிளைச் சரக்கு | 14,592 | | வங்கி (ரூ.38400 + 42,500) | | 80,900 |
| கிளைக் கடனாளிகள் | 15,500 | 30,092 | இருப்பு கீ/இ : | | |
| கிளைப் பொருளை அனுப்பியது | | 69,540 | கிளைச் சரக்கு | 21,272 | |
| பொது இலாப நட்டக் கணக்கு (இலாபம்) | | 26,024 | கிளைக் கடனாளிகள் | 19,100 | 40,372 |
| | | 1,25,656 | | | 1,25,656 |

### சரக்கிருப்பு மற்றும் கடனாளிகள் முறை

தலைமை அலுவலகம் கிளையில் சிறப்பானச் சரக்கிருப்புக் கட்டுப்பாட்டைத் தயாரிக்க விரும்பினால், இந்த முறைப் பயன்படுகிறது. இம்முறையில், தலைமை அலுவலகம் தனதுப் புத்தகத்தில் கிளைக் கணக்கை ஆரம்பிக்காது. ஆனால் கிளையின் பல்வேறு வகையான நடவடிக்கைகளுக்கு தனிக் கணக்கை வைத்திருக்கும். கீழ்க்காணும் கணக்குகள் பொதுவாகத் தலைமை அலுவலகத்தில் பராமரிக்கப்படும்.

1. கிளைச் சொத்து க/கு
2. கிளைச் சரக்கு க/கு
3. கிளைக் கடனாளிகள் க/கு
4. கிளைச் செலவுகள் க/கு
5. கிளைச் சரிக்கட்டல் க/கு (அ) (இ&ந க/கு)
6. கிளைக்குப் பொருளை அனுப்பியக் க/கு

கிளைச் சரக்குக் கணக்கைத் தலைமை அலுவலகத்தின் புத்தகத்தில் தயாரிப்பதால், கிளையின் சரக்கில் பற்றாக்குறை அல்லது உபரியைக் கண்டுப்பிடிக்க முடியும்.

கிளைகளுக்கு விற்பனை விலையில் பொருட்களை இடாப்புச் செய்யும்பொழுது மட்டுமே இந்தமுறை பயன்படுத்தப்படுவதால் கிளையில் மாற்றம் ஏற்படாது.

**கணக்கியல் முறை**

கீழக்காணும் முறையில் பதிவுகள் செய்யப்படும்.

1. கிளைக்குப் பொருட்களை அனுப்பும்போது:

கிளைச் சரக்கு க/கு ப

கிளைப் பொருட்களை அனுப்பியக் க/கு

(இடாப்பு மதிப்பில் பொருட்களை அனுப்பியது)

கிளையினால் பொருள் திரும்பினால், மேலே உள்ள பதிவுகள் தலைகீழாக மாற்றி அமைக்கப்படும்.

2. கிளையினால் விற்பனைச் செய்யப்படும்போது

அ) ரொக்க விற்பனையில்:

ரொக்கக் க/கு ப

கிளை சரக்கு க/கு

ஆ) கடன் விற்பனையில்

கிளைக் கடனாளிகள் க/கு ப

கிளைச் சரக்கு க/கு

3. கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெறும்போது

ரொக்கக் க/கு ப

கிளைக் கடனாளிகள் க/கு

4. கடன் வாடிக்கையாளரிடமிருந்து பொருட்கள் திரும்பினால்

கிளைச் சரக்கு க/கு ப

கிளைக் கடனாளிகள் க/கு

5. தள்ளுபடி அளித்ததற்கு, மற்ற பண உதவிகள் (Allowances) மற்றும் வராக்கடனுக்கு

கிளைச் செலவுகள் க/கு ப

கிளைக் கடனாளிகள் க/கு

6. தலைமை அலுவலகம் ரொக்கத்திற்குக் கிளைச் செலவுகளை செலுத்தியதற்கு

கிளைச் செலவுகள் க/கு ப

ரொக்கக் க/கு

7. கிளைக்குப் பொருட்களை அனுப்பியச் சுமையைச் (Load) சரிக்கட்டுவதற்கு

கிளைக்குப் பொருட்களை அனுப்பியக் க/கு ப

கிளைச் சரிக்கட்டல் க/கு

8. இறுதிச் சரக்கிருப்பின் சுமையை (Load) சரிக்கட்டுவதற்கு

கிளைச் சரிக்கட்டல் க/கு ப

கிளைச் சரக்கு ஒதுக்கீடு க/கு

9. கிளையினச் சரக்கு பற்றாக்குறைக்கு

கிளைச் சரிக்கட்டல் க/கு ப

கிளைச் சரக்கு க/கு

10. கிளையின் சரக்கு உபரி இருந்தால்

கிளைச் சரக்கு க/கு ப

கிளைச் சரிக்கட்டல் க/கு

11. ஆரம்பச் சரக்கின் சுமையை (Load) சரிக்கட்டுவதற்கு

கிளைச் சரக்கு ஒதுக்கீடு க/கு ப

கிளைச் சரிக்கட்டுதல் க/கு

இது மாற்றுப் பதிவாகும். முந்தியக் காலங்களில் கொண்டுவரப்பட்டச் சரக்கு ஒதுக்கீடு முடிவடையும்.

மற்றும் கிளைச் சரிக்கட்டலுக்கு மாற்றப்படும். ஆண்டு முடிவில் இருக்கும் சரக்கு ஒதுக்கீடு அடுத்த ஆண்டிற்குக் கொண்டுவரப்படும்.

12. கிளைச் செலவுகளைக் கிளைச் சரிக்கட்டல் கணக்கிற்கு மாற்றுவதற்கு:

கிளைச் சரிக்கட்டல் க/கு ப

கிளைச் செலவுகள் க/கு

13. கிளைச் சரிக்கட்டல் கணக்கின் இருப்பு இலாப நட்டமாகும் அதை பொதுவான இலாப நட்டக் கணக்கில் மாற்றப்படும். இதற்கான பதிவு:

கிளை சரிக்கட்டல் க/கு ப

பொதுவான இலாப நட்டக் க/கு

கிளைச் சரிகட்டல் க/கு நட்டம் வெளிப்படுத்தினால், மேலே கூறிய பதிவுகள் தலைகீழாக்கப்படும்.

14. கிளைக்குப் பொருட்களை அனுப்பியதை முடிப்பதற்கு:

கிளைக்குப் பொருட்களை அனுப்பியக் க/கு ப

கொள்முதல் க/கு வியாபாரக் க/கு

எடுத்துக்காட்டு – 5

கல்கத்தா தலைமை அலுவலகம் கான்பூர் கிளைக்கு பிப்ரவரி 1,2008 அன்று ரூ.33,000 விலை மதிப்புள்ள பொருளை

இடாப்பு செய்து அனுப்பியது. விற்பனை விலையில் மொத்த இலாபம் 25% சதவீதம் ஏற்படுத்துவதற்கு விற்பனை விலை வசமாக்கப்பட்டது. மாத இறுதியில், கான்பூர் கிளையில் இருந்து திருப்பிய விற்பனை ரூ.30,000 கான்பூர் கிளையில் ரூ.600க்கு இடாப்பு செய்யப்பட்ட பொருள் கல்கத்தா தலைமை அலுவலகத்திற்குத் திரும்பியது. கான்பூர் கிளையின் இறுதிச் சரக்கிருப்பு விற்பனை விலையில் ரூ.12,300.

கான்பூர் சரக்கு க/கு, கான்பூர் கிளைச் சரிக்கட்டல் க/கு, கான்பூர் கிளைக்குப் பொருட்களை அனுப்பிய கணக்கைத் தலைமை அலுவலகப் பேரேட்டில் தயாரிக்கவும்.

**தீர்வு :**

தலைமை அலுவலகத்தின் புத்தகத்தில் கான்பூர் கிளை

சரக்கு க/கு

| 2008 பிப்–1 | | ரூ. | 2008 பிப்.28 | | ரூ. |
|---|---|---|---|---|---|
| | கிளைக்குப் பொருட்களை அனுப்பியது (இடாப்பு விலை) | 44,000 | | ரொக்கம் (விற்பனை) | 30,000 |
| | | | | கிளைக்குப் பொருளை அனுப்பியது (இடாப்பு விலையில் திரும்பியது) | 600 |
| | | | | கிளைச் சரிகட்டல் க/கு— பற்றாக்குறை | 1,100 |
| | | | | இருப்பு கீ/இ | 12,300 |
| | | **44,000** | | | **44,000** |

**கான்பூர் கிளைச் சரிகட்டல் க/கு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| கிளைச் சரக்கு ஒதுக்கீடு (இறுதிச் சரக்கிருப்பு) | 3,075 | கிளைக்குப் பொருட்களை அனுப்பியது (1/4–இல் 43,400) | 10,850 |

| | | | |
|---|---|---|---|
| கிளைச் சரக்கு க/கு<br>பற்றாக்குறை<br>கிளை இலாப நட்டக் க/கு | 1,100<br>6,675 | | |
| | 10,850 | | 10,850 |

**கான்பூர் கிளைக்குப் பொருட்களை அனுப்பிய க/கு**

| 2008 | | ரூ. | | ரூ. |
|---|---|---|---|---|
| ஏப்.28 | கிளைச் சரக்கு க/கு | 600 | கிளைச் சரக்கு க/கு | 44,000 |
| - | கிளைச் சரிகட்டல் க/கு | 10,850 | | |
| | கொள்முதல் க/கு | 32,550 | | |
| | | 44,000 | | 44,000 |

கிளைச் சரிக்கட்டலை இரண்டு நிலையாகப் பிரிக்கலாம். முதல்நிலை மொத்த இலாபத்தையும் இரண்டாம் நிலை நிகர இலாபத்தையும் காட்டும். ஆரம்பச் சரக்கின் சரிகட்டல், கிளைக்கு பொருட்களை அனுப்பியது, இறுதிச் சரக்கிருப்பு ஆகிய அனைத்தும் முதல் நிலையையும் கிளைச் செலவுகள் இரண்டாம் நிலையையும் காட்டும். பற்றாக்குறை (அ) உபரியின் சுமை (Load) பகுதி முதல் நிலையிலும் மற்றும் 'விலை' பகுதி இரண்டாம் நிலையிலும் காண்பிக்கப்படும்.

**எடுத்துக்காட்டு – 6**

தேவி சோப்பு மில் லிமிடெட். இரண்டுக் கிளைகளாக ஆம்பூர் மற்றும் காஞ்சிபுரத்தில் வைத்து உள்ளன. கிளைகளுக்கு விலை+50% பொருட்களை இடாப்பு செய்யப்பட்டது. தலைமை அலுவலகம் எல்லா செலவுகளையும் ஏற்றது. கீழ்க்காணும் சரக்கு மற்றும் கடனாளிகள் முறையில் கிளையின் இலாபத்தைக் கணக்கிடவும்.

| | ஆம்பூர் ரூ. | காஞ்சிபுரம் ரூ. |
|---|---|---|

| | | |
|---|---|---|
| சரக்கு 01.01.08 (இடாப்பு விலை) | 9,300 | 15,600 |
| கடனாளிகள் 01.01.08 | 6,800 | 8,700 |
| இந்த ஆண்டிற்கான நடவடிக்கைகள்: | | |
| கிளைக்குப் பொருட்களை இடாப்புச் செய்தது (விலை) | 34,000 | 36,000 |
| விற்பனை – ரொக்கம் | 25,010 | 35,000 |
| விற்பனை – கடன் | 31,000 | 30,100 |
| கடனாளிகளிடமிருந்து ரொக்கம் வசூல் | 30,400 | 29,800 |
| கடனாளிகளிடமிருந்துப் பொருட்கள் திரும்பியது | 1,200 | 1,500 |
| கிளைத் தலைமை அலுவலகத்திற்குப் பொருட்கள் திரும்பியது | 1,500 | - |
| காஞ்சிபுரத்திலிருந்து பொருட்களை ஆம்பூருக்கு மாற்றியது | 2,100 | 2,100 |
| உபரிச் சரக்கு | - | 300 |
| பற்றாக்குறைச் சரக்கு | 450 | - |
| வாடிக்கையாளருக்குத் தள்ளுபடி | 200 | 350 |
| கிளையின் செலவுகள் | 5,400 | 6,700 |

**தீர்வு :**

## கிளைச் சரக்கு க/கு

| 2008 | | ஆம்பூர் ரூ. | காஞ்சிபுரம் ரூ. | 2008 | | ஆம்பூர் ரூ. | காஞ்சிபுரம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| ஜுன்.1 | இருப்பு கீ/கொ | 9,300 | 15,650 | ஜன.1 | ரொக்கம் | 25,010 | 35,000 |
| | கிளைக்குப் பொருட்கள் அனுப்பியது | 51,000 | 54,000 | | கிளைக் கடனாளிகள் க/கு | 31,000 | 30,100 |
| | கிளைக் கடனாளிகள் க/கு | 1,200 | 1,500 | | கிளைக்குப் பொருட்களை அனுப்பியது (திருப்பம்) | 1,500 | - |
| | கிளைச் சரக்கு காஞ்சிபுரம் | 2,100 | - | | கிளைச் சரக்கு – ஆம்பூர் | - | 2,100 |
| | கிளைச் சரிகட்டல் –உபரி | - | 300 | | கிளைச் சரிகட்டல் – பற்றாக்குறை | 450 | - |
| | | | | டிச.31 | இருப்பு கீ/இ | 5,640 | 4,200 |
| | | 63,600 | 71,400 | | | 63,600 | 71,400 |

### கிளை கடனாளிகள் க/கு

| 2008 | | ஆம்பூர் ரூ. | காஞ்சிபுரம் ரூ. | 2008 | | ஆம்பூர் ரூ. | காஞ்சிபுரம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| ஜன.1 | இருப்பு கீ/கொ | 6,800 | 8,700 | ஜன.1 | ரொக்கம் | 30,400 | 29,800 |
| | கிளை இருப்பு | 31,000 | 30,100 | | சரக்கு (திரும்பியது) | 1,200 | 1,500 |
| | | | | | கிளைச் செலவுகள் – தள்ளுபடி | 200 | 350 |
| | | | | | இருப்பு கீ/இ | 6,000 | 7,150 |
| | | 37,850 | 38,800 | | | 37,850 | 38,800 |

### கிளைச் செலவுகள் க/கு

| | ஆம்பூர் ரூ. | காஞ்சிபுரம் ரூ. | | ஆம்பூர் ரூ. | காஞ்சிபுரம் ரூ. |
|---|---|---|---|---|---|
| கிளைக் கடனாளிகள் க/கு | 250 | 350 | கிளைச் சரிகட்டல் க/கு | 5,600 | 7,050 |
| ரொக்கம் | 5,400 | 6,700 | | | |
| | 5,600 | 7,050 | | 5,600 | 7,050 |

### கிளைச் சரிகட்டல் க/கு

| 2008 | | ஆம்பூர் ரூ. | காஞ்சிபுரம் ரூ. | 2008 | | ஆம்பூர் ரூ. | காஞ்சிபுரம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| டிச.31 | கிளைச் சரக்கு ஒதுக்கீடு (இறுதிச் சரக்கு) | 1,880 | 1,400 | டிச.31 | கிளைச் சரக்கு ஒதுக்கீடு ஆரம்பச் சரக்கு | 3,100 | 5,200 |
| | கிளைச் சரக்கு க/கு– உபரி சுமை | 150 | | | கிளைக்குப் பொருட்களை அனுப்பியது | 17,200 | 17,300 |
| | | | | | கிளைச் சரக்கு சரிகட்டல் உபரி (Load) | - | 100 |
| | | 20,300 | 22,600 | | | 20,300 | 22,600 |
| | கிளைச் செலவுகள் க/கு | 5,600 | 7,050 | | மொத்த இலாபம் | 18,270 | 21,200 |
| | பற்றாக்குறை – விலை | 300 | | | உபரி விலை | - | 200 |
| | நிகர இலாபம் | 12,370 | 14,350 | | | | |
| | | 18,270 | 21,400 | | | 18,270 | 21,400 |

### கிளைக்குப் பொருட்களை அனுப்பிய க/கு

| 2008 | | ஆம்பூர் | காஞ்சிபுரம் | 2008 | | ஆம்பூர் | காஞ்சிபுரம் |
|---|---|---|---|---|---|---|---|

| | | ரூ. | ரூ. | | | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| டிச.31 | கிளைச் சரிகட்டல் க/கு | 1,500 | - | டிச.31 | கிளைச் சரக்கு க/கு | 51,000 | 54,000 |
| | கிளைச் சரிகட்டல் | 17,200 | 17,300 | | | | |
| | கொள்முதல் க/கு | 32,300 | 36,700 | | | | |
| | | 51,000 | 54,000 | | | 51,000 | 54,000 |

சரிசெய்யும் முறைகள்:

கிளைகளுக்குப் பொருட்களை அனுப்பியது (சுமை) (Load)

ஆம்பூர்:

| | |
|---|---|
| பொருள் அனுப்பியது | ரூ. 51,000 |
| காஞ்சிபுரத்திலிருந்து பொருட்களை மாற்றியது | ரூ. 2,100 |
| | ரூ. 53,100 |
| (—) தலைமை அலுவலகத்திற்குத் திருப்பியது | ரூ. 1,500 |
| | ரூ. 51, 600 |
| ரூ.51,600-இல் 1/3 சுமை (Load) = | ரூ.17,200 |

காஞ்சிபுரம்:

| | |
|---|---|
| பொருள் அனுப்பியது | ரூ. 54,000 |
| (—) ஆம்பூருக்கு மாற்றியது | ரூ. 2,100 |
| | ரூ. 51,900 |
| ரூ.51,900-இல் 1/3 சுமை (Load) = | ரூ. 17,300 |

## பயிற்சிகள்

### கடனாளிகள் முறை

1. M/s மகாஜன் பிரதர்ஸ், இடாப்பு பொருட்களை பல்வேறு கிளைகளுக்கு, இடாப்பு விலையில் அனுப்பினார். இலாபம் கணக்கிடுவதற்கு கிளை கணக்கை தயாரிக்கவும்.

| | | ரூ. |
|---|---|---|

| | | |
|---|---|---|
| கடனாளிகள் டிசம்பர் 31, 2005 | | 2,000 |
| கிளைக்குப் பொருட்களை அனுப்பியது (2005) | | 7,000 |
| கிளைப்பொருட்களைத் திருப்பியது | | 800 |
| கிளைக்கு வாடிக்கையாளர்கள் பொருட்களைத் திருப்பியது | | 150 |
| ரொக்க விற்பனை | | 4,800 |
| கடன் விற்பனை | | 6,000 |
| த.அ—திற்கு ரொக்கம் அனுப்பப்பட்டது | | 11,300 |
| வுாடிக்கையாளருக்கு படிகள் | | 40 |
| சரக்கு ஜனவரி 1, 2005 | | 2,000 |
| சரக்கு டிசம்பர் 31, 2005 | | 1,600 |
| வராக்கடன் | | 70 |
| **த.அ. செலவுகளைச் செலுத்தியது:** | | |
| வாடகை 01.01.2005 முதல் 31.01.2006 வரை | 1,300 | |
| காப்பீடு 31.03.2006 வரை | 1,800 | |
| சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 2,800 | **5,900** |

**விடை:**

நிகர நட்டம் ரூ.1,910

2. மும்பையிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு அஹமதாபாத்தில் கிளை உள்ளது. அதன் பொருட்களை த.அ அடக்கவிலை +25%-க்கு இடாப்பு செய்யப்பட்டது. கிளை ரொக்கம் பெற்றதை தலைமை அலுவலகத்திற்கு தினமும் அனுப்பியது. அனைத்து செலவுகளும் மும்பையிலிருந்து செலுத்தப்பட்டது. த.அ புத்தகத்தில் கிளை க/கு எவ்வாறு தோன்றும் என்பதை பின்வரும் தகவலின்படி காண்பிக்கவும். (இடாப்பு விலையில் பதிவுகள் செய்யப்பட வேண்டும்.)

| | | ரூ. |
|---|---|---|
| சரக்கு ஜூலை 1, 2005 அன்று (இடாப்பு விலையில்) | | 12,500 |
| கடனாளிகள் ஜூலை 1, 2005 அன்று | | 12,000 |
| மும்பையிலிருந்து பொருட்கள் இடாப்பு செய்யப்பட்டது | | 40,000 |
| மும்பைக்குப் பணம் அனுப்பியது : | | |
| ரொக்க விற்பனை | 16,000 | |
| கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 29,000 | 45,000 |
| த.அ—விற்கு பொருட்கள் திரும்பியது | | 2,400 |
| மும்யையிலிருந்து காசோலை பெற்றது : | | |
| கூலிகள் மற்றும் சம்பளங்கள் | 11,000 | |
| வாடகை, வரிகள் முதலியவை | 3,000 | |
| பற்பலச் செலவுகள் | 150 | 14,510 |
| சரக்கு, டிசம்பர் 31, 2005 அன்று (இடாப்பு விலையில்) | | 15,000 |
| குடனாளிகள் டிசம்பர் 31,2005 அன்று | | 22,500 |

**விடை:**

இலாபம் ரூ.12,910.

B மற்றும் C துறைகளுக்கு அவர்களின் இறுதி சரக்கு நிலைமைகளின் மீது 10% சரக்கு ஒதுக்கீடு உருவாக்க வேண்டும் என்பதை மனத்தில் எடுத்துக்கொண்டு, ஜூன் 30, 2008, 6 மாத முடிவிற்கு மூன்று துறைகளின் துறைவாரி இலாப நட்டக் கணக்கைத் தயாரிக்கவும்.

A, B மற்றும் Cஇன் ஒவ்வொரு துறைகளுக்கும் பொறுப்பான X, Y மற்றும் Z இயக்குநர்களுக்கு அந்த துறைகளில் சம்பந்தப்பட்ட நிகர இலாபத்தில் 10% ஊதியம் அவர்களுக்கு உரிமை அளிக்கப்படுகிறது.

விடை:

மொ.இ.துறை A ரூ.14,400, B ரூ.15,000, C ரூ.7,000, நி.இ துறை A ரூ.8,856, துறை B ரூ.7,542, C ரூ.2,052.

## அலகு — V

## வாடகை கொள்முதல் கணக்கு

**பொருள்**

இந்த முறையில், வடகைக்குக் கொள்முதல் செய்தவர் (வாங்குபவர்) மற்றும் வாடகைக்கு விற்றவர் (விற்பனை செய்வோன்) ஆகிய இரண்டு நபர்களிடம் இடையே உள்ளப் பொருட்களை மாற்றுவதற்காக ஒப்பந்தத்தில் நுழைகின்றனர். இந்த வழக்கில், ஒப்பந்தம் செய்யப்படும் சமயத்தில் விற்பவரிடமிருந்து வாங்குவோருக்குப் பொருட்களின் உடைமை மட்டுமே மாற்றப்படுகிறது.

வாங்குபவரால் கட்ட வேண்டிய முழுத்தொகையைக் கட்டும் வரைப் பொருளின் உரிமை விற்பவரிடமே இருக்கும். வாங்குபவர் பொருளின் விலையை தவணையில் செலுத்த வேண்டும்.(குறித்தக் காலங்களில் செலுத்துதல்) ஒப்பந்தம் செய்யப்பட்ட சமயத்தில் செலுத்தியத் தொகை ஏதும் இருந்தால், அந்தச் செலுத்திய தொகையை ஒப்பந்தத்தில் செலுத்திய தொகை(Down Payment) என்றழைக்கப்படுகிறது.

வாடகைக் கொள்முதல் முறையில் செலுத்த வேண்டிய விலை "தவணை விலை" என்றழைக்கப்படுகிறது. அது சாதாரணமாக ரொக்க முறையில் செலுத்த வேண்டிய விலையைவிட அதிகமாக இருக்கும். ரொக்க விலையைவிட தவணை விலை தொகை அதிகமாக இருப்பதால் "வட்டி" எனப்படும். அந்த வட்டி வாங்குவோருக்கு செலவாகும் ஏன்னென்றால் அவர் செலுத்த வேண்டியத் தொகையை உடனடியாக செலுத்த மாட்டார். ஆனால் விற்றவருக்கு அது வருவாயாகும் ஏனென்றால் செலுத்தப்பட வேண்டியத் தொகையை அதிகக் காலங்களில் பெறுகிறார்.

**வாடகைக் கொள்முதல் நிர்ணயம்**

வாடகைக் கொள்முதல் நிர்ணயம் என்றால் வாடகைக் கொள்முதல் ஒப்பந்தத்தில் இடையே உள்ள வாடகைக் கொள்முதல் விலை மற்றும் ரொக்க விலையாகும்.

**எடுத்துக்காட்டு – 1**

ஜனவரி 1, 2005ஆம் வருடத்தில் Q என்பவரிடமிருந்து மோட்டார் காரை P என்பவர் ரொக்கவிலை ரூ.56000க்கு கொள்முதல் செய்தார். முதல் ஒப்பந்தத்தில் ரூ.15000 செலுத்தப்பட்டது கையெழுத்தானது. மற்றும் மீதமுள்ள இருப்பை மூன்று தவணையாக ஆண்டுக்கொரு முறை ரூ.15,000 செலுத்த வேண்டும்.

ஆண்டிற்கான வட்டி 5% ஒவ்வொரு தவணையிலும் உள்ளடங்கிய வட்டித்தொகையைக் கணக்கிடுக:

**தீர்வு :**

| | ரூ. |
|---|---|
| மோட்டார்காரின் ரொக்க விலை | 56,000 |
| (–) ஒப்பந்தத் தொகை(Down Payment Mode) | 15,000 |
| | 41,000 |
| (+) 2005ஆம் வருடத்திற்கான 5% வட்டி (41,000 X5/100) | 2,050 |
| | 43,050 |
| (–) 2005ஆம் ஆண்டின் முடிவில் தவணையாக செலுத்தியது | 15,000 |
| | 28,050 |
| (+) 2006ஆம் வருடத்திற்கான 5% வட்டி (28050 X 5/100) | 1,403 |
| | 29,453 |
| (-) 2006ஆம் ஆண்டின் முடிவில் தவணையாகச் செலுத்தியது | 15,000 |
| | 14,453 |
| (+) 2007ஆம் வருடத்திற்கான வட்டி(15,000 – 14,453)<br>(தவணை – ரொக்க விலையின் இருப்பு) | 547 |
| | 15,000 |
| (-) 2007ஆம் ஆண்டின் முடிவில் தவணையாகச் செலுத்தியது | 15,000 |
| | 0 |

எடுத்துக்காட்டு – 2

கீழ்க்காணும் தகவலின் படி, வாடகை கொள்முதல் செய்தவர் கொள்முதல் பொருட்களை பூர்த்தி செய்யச் கருதினால் சொந்தக்காரருக்கு செலுத்த வேண்டியத் தொகையைக் கணக்கிடுக:

| | ரூ. |
|---|---|
| ரொக்க விலை | 36,000 |
| செலுத்தியத் தொகை | 3,000 |
| வாடகைக் கொள்முதல் விலை | 39,000 |
| தவணை எண்ணிக்கை | 24 |
| வாடகைக் கொள்முதல் செய்தவர் செலுத்திய தவணை | 18 |

**தீர்வு:**

வாடகைக் கொள்முதல் நிர்ணயம்

= வாடகைக் கொள்முதல் விலை – ரொக்க விலை

$= 39,000 - 36,000$

= ரூ.3000

வாடகைக் கொள்முதல் விலையின் இருப்பு

= வாடகைக் கொள்முதல் விலை—(செலுத்தியத் தொகை + செலுத்திய தவணை தொகை)

$= 39,000 - 30,000$

= ரூ.9000

தள்ளுபடி= 2/3 (மொத்த வாடகை கொள்முதல் நிர்ணயம் X செலுத்தப்படாதத் தவணையின் எண்ணிக்கை / மொத்த தவணையின் எண்ணிக்கை)

$= 2/3 \left( \frac{3000 \times 6}{24} \right)$

$= 500$

எனவே, வாடகைக் கொள்முதல் செய்தவர், கொள்முதல் பொருட்களை மொத்தமாக,

ரூ.9000 - ரூ.500 = ரூ.8500 பூர்த்திச் செய்கிறார்.

**ஆண்டில் செலுத்த வேண்டிய ரொக்க விலை வெவ்வேறாக இருக்கும்போது அதற்கான கணக்கிடல்:**

எடுத்துக்காட்டு – 3

A என்பவர் வாடகை கொள்முதல் முறையில் ரூ.30,000க்கு இயந்திரம் வாங்கினார். அதற்குச் செலுத்தப்பட வேண்டிய தவணைகள் கீழ்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| ஒப்பந்தத் தொகை | 5000 |
| முதல் ஆண்டின் முடிவில் | 7000 |
| இரண்டாம் ஆண்டின் முடிவில் | 6500 |
| மூன்றாம் ஆண்டின் முடிவில் | 6000 |
| நான்காம் ஆண்டின் முடிவில் | 5500 |

ரொக்க மதிப்பில் ஆண்டு ஒன்றுக்கு 10% வட்டி வசூலிக்கப்படவிருக்கிறது. இயந்திரம் எந்த மதிப்பில் முதலீடு செய்யப்படுகிறது?

தீர்வு:

| வருடம் | வருடத்தின் முடிவில் கொடுக்கப்பட வேண்டியத் தொகை | தவணை செலுத்தியது | வருடத்தின் முடிவில் கொடுக்கப்பட வேண்டியத் மொத்தத் தொகை | வட்டி 10/110 | வருடத்தின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட வேண்டியத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| 4-ஆம் ஆண்டு | இல்லை | 5,500 | 5,500 | 5,00 | 5,000 |
| 3-ஆம் ஆண்டு | 5,000 | 6,000 | 11,000 | 1,000 | 10,000 |
| 2-ஆம் ஆண்டு | 10,000 | 6,500 | 16,500 | 1,500 | 15,000 |
| 1-ஆம் ஆண்டு | 15,000 | 7,000 | 22,000 | 2,000 | 20,000 |

| | ரூ. |
|---|---|
| 1—ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கொடுக்கப்பட வேண்டிய அசல் தொகை | 20,000 |
| (+) ஒப்பந்தத் தொகை | 5,000 |
| இயந்திரத்தின் ரொக்க விலை | 25,000 |

**கணக்குப் பதிவு முறை**

வாடகைக் கொள்முதல் செய்தவர் நடவடிக்கைகளைப் புத்தகத்தில் இரண்டு முறையில் பதிவு செய்யலாம்.

**முறை I:**

வாடகைக் கொள்முதல் செய்தவர் புத்தகத்தில்

1. கொள்முதல் / விற்பனைக்கு:

சொத்துக் க/கு ப

வாடகைக்கு விற்றவர் க/கு

2. ஒப்பந்தத் தொகை செலுத்தியதற்கு:

வாடகைக்கு விற்றவர் க/கு ப

வங்கி க/கு

3. வட்டிக்கு:

வட்டி க/கு ப

வாடகைக்கு விற்றவர் க/கு

4. தவணையில் செலுத்துவதற்கு

வாடகைக்கு விற்றவர் க/கு ப

வங்கி க/கு

5. தேய்மானத்திற்கு:

தேய்மானக் க/கு ப

சொத்து க/கு

வருட ஆரம்பத்தில், மேலேக் கூறப்பட்ட பதிவுகள் ஏற்கப்படும் மற்றும் பின்வருகிற வருடங்களில் 3, 4 & 5 பதிவுகள் திரும்பத் திரும்ப வரும்.

வாடகைக்கு விற்றவர் புத்தகத்தில்

1. கொள்முதல்/விற்பனைக்கு

வாடகைக் கொள்முதல் செய்தவர் க/கு ப

வாடகைக் கொள்முதல் விற்பனை க/கு

2. தொகை செலுத்தியதற்கு

வங்கிக் க/கு ப

வாடகைக் கொள்முதல் செய்தவர் க/கு

3. வட்டிக்கு

வாடகைக் கொள்முதல் செய்தவர் க/கு ப

வட்டிக் க/கு

4. தவணையில் செலுத்துவதற்கு

வங்கி க/கு ப

வாடகைக் கொள்முதல் செய்தவர் க/கு

5. தேய்மானத்திற்கு

பதிவு இல்லை

வருட ஆரம்பத்தில் மேலே கூறப்பட்ட பதிவுகள் ஏற்கப்படும் மற்றும் பின்வருகிற வருடங்களில் 3, 4 & 5 பதிவுகள் திரும்பத் திரும்ப வரும்.

முறை II:

வாடகைக் கொள்முதல் செய்தவர் புத்தகத்தில்

1. கொள்முதலுக்கு:

பதிவு இல்லை

2. அ) ஒப்பந்தத் தொகை கொடுக்கப்பட வேண்டியதற்கு

சொத்துக் க/கு ப

வாடகைக்கு விற்றவர் க/கு

ஆ) தொகை செலுத்தியதற்கு

வாடகைக்கு விற்றவர் க/கு ப

வங்கிக் க/கு

3. அ) தவணைக் கொடுக்கப்பட வேண்டியதற்கு

சொத்துக் க/கு ப

வட்டிக் க/கு ப

வாடகைக்கு விற்றவர் க/கு

ஆ) தொகை செலுத்தியதற்கு

வாடகைக்கு விற்றவர் க/கு ப

வங்கிக் க/கு

4. அ) தேய்மானத்திற்கு

தேய்மானக் க/கு ப

ப                வங்கிக் க/கு

**எடுத்துக்காட்டு – 4**

P என்பவர் நான்கு கார் ஒவ்வொன்றையும் ரூ.14,000/-க்கு வாடகை கொள்முதல் முறையில் வாங்கினார். நான்கு கார்களுக்கும் சேர்த்து வாடகை கொள்முதல் விலை ரூ.60,000 இருந்தது. அதனை ரூ.15,000 ஒப்பந்தத் தேதியிலும் மற்றும் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ரூ.15,000 வீதம் மூன்று சமமான தவணைகளிலும் செலுத்தப்பட வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு 5% வட்டி வசூலிக்கப்படவிருக்கிறது. வாங்குபவர் கார்களை ஆண்டு ஒன்றுக்கு 10% நேர்வழி முறையில் தேய்மானம் செய்கிறார்.

மேற்கண்ட விவரங்களிலிருந்து குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் அதற்குத் தொடர்பான கணக்குகளை P மற்றும் வாடகைக்கு விற்றவர் ஆகியவர்களின் ஏடுகளில் இரண்டு முறைகளில் தருக.

**தீர்வு :**

**அட்டவணைக் காட்டும் கணக்கிடல்**

| | மொத்த ரொக்க விலை ரூ. | தவணைகள் செலுத்தியது ரூ. | வட்டி ரூ. | ரொக்க விலை செலுத்தியது (தவணை செலுத்தியது – வட்டி செலுத்தியது) ரூ. |
|---|---|---|---|---|
| ஒப்பந்தத்தில் செலுத்தியது | 56,000 | - | - | - |
| | -15,000 | 15,000 | - | 15,000 |
| | 41,000 | | | |
| 1-ஆம் ஆண்டில் முடிவில் | -12,950 | 15,000 | 2,050 | 12,950 |
| | 28,050 | | | |
| 2-ஆம் ஆண்டின் முடிவில் | -13,597 | 15,000 | 1,403 | 13,597 |
| | 14,453 | | | |
| 3-ஆம் ஆண்டின் முடிவில் | -14,453 | 15,000 | 547 | 14,453 |
| | - | 60,000 | 4,000 | 56,000 |

முறை I:

## P என்பவரின் புத்தகத்தில்

## குறிப்பேடு

| தேதி | விவரங்கள் | | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| 1 வருடம் | ரொக்க க/கு | ப | 56,000 | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | | | 56,000 |
| | (கார் வாடகை கொள்முதல் முறையில் வாங்கியது) | | | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | ப | 15,000 | |
| | வங்கி க/கு | | | 15,000 |
| | (ஒப்பந்தத்தில் செலுத்தியது) | | | |
| 1ஆம் வருட முடிவில் | வட்டி க/கு | ப | 2,050 | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | | | 2,050 |
| | (வட்டி செலுத்தியது) | | | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | ப | 15,000 | |
| | வங்கி க/கு | | | 15,000 |
| | (முதல் தவணை செலுத்தியது) | | | |
| | தேய்மான க/கு | ப | 5,600 | |
| | கார்கள் க/கு | | | 5,600 |
| | (கார்களின் தேய்மானம்) | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2ஆம் வருட முடிவில் | வட்டிக் க/கு | ப | 1,403 | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | | | 1,403 |
| | (வட்டி செலுத்தியது) | | | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | ப | 15,000 | |
| | வங்கிக் க/கு | | | 15,000 |
| | (இரண்டாம் தவணை செலுத்தியது) | | | |
| | தேய்மானக் க/கு | ப | 5,600 | |
| | கார்கள் க/கு | | | 5,600 |
| | (கார்களின் தேய்மானம்) | | | |
| 3ஆம் வருட முடிவில் | வட்டி க/கு | ப | 547 | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | | | 547 |
| | (வட்டி செலுத்தியது) | | | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | ப | 15,000 | |
| | வங்கிக் க/கு | | | 15,000 |
| | (3 மற்றும் இறுதி தவணை செலுத்தியது) | | | |
| | தேய்மான க/கு | ப | 5,600 | |
| | கார்கள் க/கு | | | 5,600 |
| | (கார்களின் தேய்மானம்) | | | |

## கார்கள் கணக்கு

ப வ

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் | 56,000 | 1ம் வருடம் | தேய்மான க/கு | 5,600 |
| | | | | இருப்பு கீ/இ | 50,400 |
| | | **56,000** | | | **56,000** |
| 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 50,400 | | தேய்மான க/கு | 5,600 |
| | | | | இருப்பு கீ/இ | 44,800 |
| | | **50,400** | | | **50,400** |
| 3ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 44,800 | | தேய்மான க/கு | 5,600 |
| | | | | இருப்பு கீ/இ | 39,200 |
| | | **44,800** | | | **44,800** |
| | இருப்பு கீ/கொ | 39,200 | | | |

## வாடகைக்கு விற்றவர் க/கு

ப வ

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வங்கி (ஒப்பந்தத்தில் செலுத்தியது) | 15,000 | 1ஆம் வருடம் | கார்கள் க/கு | 56,000 |
| | வங்கி | 15,000 | | வட்டி க/கு | 2,050 |
| | இருப்பு கீ/இ | 28,050 | | | |
| | | **58,050** | | | **58,050** |
| 2ஆம் வருடம் | வங்கி | 15,000 | 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 28,050 |
| | இருப்பு கீ/இ | 14,453 | | வட்டி க/கு | 1,403 |
| | | **29,453** | | | **29,453** |
| 3ஆம் வருடம் | வங்கி | 15,000 | 3ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 14,453 |
| | | | | வட்டி க/கு | 547 |
| | | **15,000** | | | **15,000** |

## வட்டிக்கு க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் | 2,050 | 1ஆம் வருடம் | இ & ந க/கு | 2,050 |
| 2ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் | 1,403 | 2ஆம் வருடம் | இ & ந க/கு | 1,403 |
| 3ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் | 547 | 3ஆம் வருடம் | இ & ந க/கு | 547 |

முறை II

**P என்பவரின் புத்தகத்தில்:**

**குறிப்பேடு:**

| தேதி | விவரங்கள் | | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | கார்கள் க/கு | ப | 15,000 | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | | | 15,000 |
| | (ஒப்பந்தத்தின் போது தொகை செலுத்தியது) | | | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | ப | 15,000 | |
| | வங்கி க/கு | | | 15,000 |
| | (ஒப்பந்தத்தில் செலுத்தியது) | | | |
| 1ஆம் வருட முடிவில் | கார்கள் க/கு | ப | 12,950 | |
| | வட்டி க/கு | ப | 2,050 | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | | | 15,000 |
| | (விற்றவருக்கு முதல் தவணை செலுத்தியது, ரூ.2050 வட்டி, மீதமுள்ள இருப்பு அசலுக்கு) | | | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | ப | 15,000 | |
| | வங்கி க/கு | | | 15,000 |
| | (முதல் தவணை செலுத்தியது) | | | |
| | தேய்மான க/கு | ப | 5,600 | |
| | கார்கள் க/கு | | | 5,600 |
| | (கார்களின் தேய்மானம்) | | | |
| 2ஆம் வருட முடிவில் | கார்கள் க/கு | ப | 13,597 | |
| | வட்டி க/கு | ப | 1,403 | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | | | 15,000 |
| | (ரூ.1403 வட்டியுடன் சேர்த்து இரண்டாம் தவணை கொடுக்கப்பட வேண்டியது) | | | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | ப | 15,000 | |
| | வங்கி க/கு | | | 15,000 |
| | (இரண்டாம் தவணை செலுத்தியது) | | | |
| | தேய்மானக் க/கு | ப | 5,600 | |
| | கார்கள் க/கு | | | 5,600 |
| | (கார்களின் தேய்மானம்) | | | |
| 3ஆம் வருட முடிவில் | கார்கள் க/கு | ப | 14,453 | |
| | வட்டி க/கு | ப | 547 | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | | | 15,000 |
| | (ரூ.547 வட்டியுடன் சேர்த்து இறுதி தவணை கொடுக்கப்பட வேண்டியது) | | | |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | ப | 15,000 | |
| | வங்கி க/கு | | | 15,000 |
| | (தவணை செலுத்தியது) | | | |
| | தேய்மான க/கு | ப | 5,600 | |
| | கார்கள் க/கு | | | 5,600 |
| | (கார்களின் தேய்மானம்) | | | |

## கார்கள் கணக்கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் க/கு | 15,000 | 1ஆம் வருடம் | தேய்மான க/கு | 5,600 |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | 12,950 | | இருப்பு கீ/இ | 22,350 |
| | | **27,950** | | | **27,950** |
| 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 22,350 | | தேய்மான க/கு | 5,600 |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | 13,597 | | இருப்பு கீ/இ | 30,347 |
| | | **35,947** | | | **35,947** |
| 3ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 30,347 | | தேய்மான க/கு | 5,600 |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | 14,453 | | இருப்பு கீ/இ | 39,200 |
| | | **44,800** | | | **44,800** |
| | இருப்பு கீ/கொ | 39,200 | | | |

## வாடகைக்கு விற்றவர் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வங்கி | 15,000 | 1ஆம் வருடம் | கார்கள் க/கு | 15,000 |
| | வங்கி | 15,000 | | கார்கள் க/கு | 12,950 |
| | | | | வட்டி க/கு | 2,050 |
| | | **30,000** | | | **30,000** |
| 2ஆம் வருடம் | வங்கி | 15,000 | 2ஆம் வருடம் | கார்கள் க/கு | 13,597 |
| | | | | வட்டி க/கு | 1,403 |
| | | **15,000** | | | **15,000** |
| 3ஆம் வருடம் | வங்கி | 15,000 | 3ஆம் வருடம் | கார்கள் க/கு | 14,453 |
| | | | | வட்டி க/கு | 547 |
| | | **15,000** | | | **15,000** |

## வட்டிக் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் | 2,050 | 1ஆம் வருடம் | இ & ந க/கு | 2,050 |
| 2ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் | 1,403 | 2ஆம் வருடம் | இ & ந க/கு | 1,403 |
| 3ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் | 547 | 3ஆம் வருடம் | இ & ந க/கு | 547 |

## வாடகைக்கு விற்றவரின் புத்தகத்தில்:
## குறிப்பேடு:

| தேதி | விவரங்கள் | | ப ரூ. | வ ரூ. |
|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | Pஇன் க/கு | ப | 5600 | |
| | வாடகைக்கு கொள்முதல் விற்பனை க/கு | | | 5600 |
| | (வாடகை கொள்முதல் அடிப்படையில் விற்பனை செய்தது) | | | |
| | வுங்கி க/கு | ப | 15000 | |
| | Pஇன் க/கு | | | 15000 |
| | (ஒப்பந்தத்தின் போது பெற்றது) | | | |
| 1ஆம் வருடம் முடிவில் | Pஇன் க/கு | ப | 2050 | |
| | வட்டி க/கு | | | 2050 |
| | (Pஇன் வட்டி) | | | |
| | வங்கி க/கு | ப | 15000 | |
| | Pஇன் க/கு | | | 1500 |
| | (முதல் வட்டி பெற்றது) | | | |
| 2ஆம் வருடத்தின் முடிவில் | Pஇன் க/கு | ப | 1403 | |
| | வட்டி க/கு | | | 1403 |
| | (Pஇன் வட்டி) | | | |
| | வங்கி க/கு | ப | 15000 | |
| | Pஇன் க/கு | | | 15000 |
| | (இரண்டாம் தவணை பெற்றது) | | | |
| 3ஆம் வருடத்தின் முடிவில் | Pஇன் க/கு | ப | 547 | |
| | வட்டி க/கு | | | 547 |
| | (Pஇன் வட்டி) | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு | ப | 15000 | |
| | Pஇன் க/கு | | | 15000 |
| | (மூன்றாம் தவணை பெற்றது) | | | |

## P'ன் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகை கொள்முதல் விற்பனை | 56,000 | 1ஆம் வருடம் | வங்கி | 15,000 |
| | வட்டி | 2,050 | | வங்கி | 15,000 |
| | | | | இருப்பு கீ/இ | 28,050 |
| | | 58,050 | | | 58,050 |
| 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 28,050 | 2ஆம் வருடம் | வங்கி | 15,000 |
| | வட்டி | 1,403 | | இருப்பு கீ/இ | 14,453 |
| | | 29,453 | | | 29,453 |
| 3ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 14,453 | 3ஆம் வருடம் | வங்கி | 15,000 |
| | வட்டி | 547 | | | |
| | | 15,000 | | | 15,000 |

## தவணைத் தவறல் மற்றும் பொருள் மீட்டல்

### தவணைத் தவறல்

வாடகைக் கொள்முதல் செய்தவர் தனது தவணைத் தொகையை கட்டத் தவறும்போது அது "தவணைத் தவறல்" என்று அழைக்கப்படுகிறது.

### பொருள் மீட்டல்

தவணைத் தவறல் வழக்கில், வாங்கியவரிடமிருந்து பொருளை திரும்பி எடுக்கும் உரிமை விற்பவருக்கு உள்ளது.

அந்த பொருளின் உரிமையை திரும்பி எடுப்பதை "பொருள் மீட்டல்" என்று அழைக்கப்படுகிறது.

பொருள் மீட்டல் இரண்டு வகைப்படும்

1. முழுமையான பொருள் மீட்டல்,
2. பகுதி பொருள் மீட்டல்.

1. முழுமையானப் பொருள் மீட்டல்

| | கொள்முதல் செய்தவர் புத்தகத்தில் | விற்பவர் புத்தகத்தில் |
|---|---|---|
| 1. | செலுத்தியத் தொகைக்கான பதிவைத் தவிர மற்ற அனைத்து பதிவுகளும் நிறைவேற்றத் தவறிய நாள் வரை அவை வழக்கமான முறையில் பதிவு செய்யப்படும். | செலுத்தியத் தொகைக்கான பதிவைத் தவிர மற்ற அனைத்து பதிவுகளும் நிறைவேற்றத் தவறிய நாள் வரை அவை வழக்கமான முறையில் பதிவு செய்யப்படும். |
| 2. | விற்பவரின் கணக்கைப் பற்றாக்கி அவரின் கணக்கை வாங்குபவர் முடிவுற்றுகிறார். (பெற்றவரை பற்றாக்கு) அதே தொகை சொத்துக் கணக்கில் வரவாக்கப்படும் (வெளியே செல்வதை வரவாக்கு). | வாங்குபவரின் கணக்கை வரவாக்கி அவரின் கணக்கை முடிவுற்றுகிறார் (கொடுத்ததை வரவாக்கு) மற்றும் பொருள் திரும்பியக் கணக்கு பற்றாக்கப்படும் (புதியக் கணக்கு) |
| 3. | சொத்துக் கணக்கில் ஏதேனும் இருப்புகள் விடப்பட்டிருந்தால் அவைகளை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றி அக்கணக்குகள் முடிக்கப்படும். | பொருள்கள் திரும்பியக் கணக்கை ஆரம்பிக்கப்பட்டு மற்றும் மேலும் அவை பழுதடைந்தப் பொருள்களில் ஏற்பட்ட செலவுகளை பற்றாக்கி, அசலான மறு விற்பனை விலையில் வரவாக்கப்படும். இக்கணக்கில் ஏதேனும் இருப்புகள் இருந்தால், மறு விற்பனையில் உள்ள இலாபம் அல்லது நட்டத்தை, இலாப நட்டக் கணக்கிற்கு மாற்ற வேண்டும். |

எடுத்துக்காட்டு – 5

ராம் என்பவர் வேனை ரூ.42,000க்கு கொள்முதல் செய்தார். அதனை ரூ.10,000 ஒப்பந்தத் தேதியிலும் மற்றும் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ரூ.10,000 வீதம் நான்கு தவணைகளிலும் செலுத்தப்பட வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு 10% வட்டி வசூலிக்கப்படவிருக்கிறது. வாங்குபவர் வேனை ஆண்டு ஒன்றுக்கு 10% குறைந்த செல் மதிப்பு முறையில் தேய்மானம் செய்கிறார்.

ராம் ஒப்பந்தத் தொகை மற்றும் முதல் தவணை ஆகிய இரண்டையும் முதல் வருட இறுதியில் செலுத்திய பிறகு, இரண்டாவது தவணையை கட்டத் தவறியதால், வாடகைக்கு விற்றவர் வேனின் உடைமையை எடுத்துக்கொண்டார். வாடகைக்கு விற்றவர் வேனை ரூ.1280க்கு பழுது பார்த்த பிறகு அதை ரூ.31,000க்கு விற்றார்.

இரண்டு நபர்களின் புத்தகத்தில் பேரேடுக் கணக்கை இரண்டு முறைகளில் காண்பிக்கவும்.

**முறை I**

**தீர்வு :**

**ராமின் புத்தகத்தில்**

**வேன் க/கு**

| தேதி | விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் | 42,000 | தேய்மான க/கு | 4,200 |
| | | | இருப்பு கீ/இ | 37,800 |
| | | **42,000** | | **42,000** |
| 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 37,800 | தேய்மான க/கு | 3,780 |
| | | | வாடகைக்கு விற்றவர் | 27,720 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இ&ந க/கு (இருப்பு) | 6,300 |
| | | **37,800** | | **37,800** |

## வாடகைக்கு விற்றவர் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வங்கி | 10,000 | வேன் | 42,000 |
| | வங்கி | 10,000 | வட்டி – ஒரு வருடத்தின் ரூ.32,000இல் 10% | 3,200 |
| | இருப்பு கீ/இ | 25,200 | | |
| | | **45,200** | | **45,200** |
| 2ஆம் வருடம் | வேன் க/கு (தவணைத் தவறலுக்கு மாற்ற வேண்டும்) | 27,720 | இருப்பு கீ/கொ | 25,200 |
| | | | வட்டி | 2,520 |
| | | **27,720** | | **27,720** |

**முறை II**

## வேன் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் க/கு | 10,000 | தேய்மான க/கு | 4,200 |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | 6,800 | இருப்பு கீ/இ | 12,600 |
| | | **16,800** | | **16,800** |
| 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 12,600 | தேய்மான க/கு | 3,780 |
| | | | இ&ந க/கு | 8,820 |
| | | **12,600** | | **12,600** |

## வாடகைக்கு விற்றவர் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| 1 ஆம் வருடம் | வங்கி | 10,000 | வேன் க/கு | 10,000 |
| | வங்கி | 10,000 | வேன் க/கு | 6,800 |
| | | | வட்டி க/கு | 3,200 |
| | | 20,000 | | 20,000 |

ராம் ரூ.6,300 நஷ்டத்தில் வேதனைக்குள்ளானார். கூடுதலாக் ரூ.2520யை 2ஆம் வருடத்திற்கு வட்டிச் செலுத்தினார். மொத்தம் ரூ.8,820.

## வாடகைக்கு விற்றவரின் புத்தகத்தில்
## வாடகைக் கொள்முதல் செய்தவர் (ராம்) க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகைக் கொள்முதல் விற்பனை | 42,000 | 1ஆம் வருடம் | வங்கி க/கு | 10,000 |
| | வட்டி | 3,200 | | வங்கி க/கு | 10,000 |
| | | | | இருப்பு கீ/இ | 25,200 |
| | | 45,200 | | | 45,200 |
| 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 25,200 | 2ஆம் வருடம் | மீட்டிய சரக்கு க/கு | 27,720 |
| | வட்டி | 2,520 | | | |
| | | 27,720 | | | 27,720 |

## மீட்டியச் சரக்கின் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2ஆம் வருடம் | ராம் க/கு | 27,720 | 2ஆம் வருடம் | வங்கி — விற்பனை | 31,000 |
| | வங்கி பளு | 1,280 | | | |
| | இ&ந க/கு (இலாபம் மாற்றப்படுகிறது) | 2000 | | | |
| | | 31,000 | | | 31,000 |

## 2. பகுதி பொருள் மீட்டல்

முதல் வழக்கில் செய்யப்பட்டதுபோல் இவ்வழக்கிலும் கணக்கியல் பதிவுகள் இரண்டு நபரின் புத்தகத்தில் ஒரே மாதிரி இருக்கும். கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியவை கீழ்வருமாறு:

1. வாங்குபவர் மற்றும் விற்பவர் ஆகிய இரண்டு நபர்களும் தங்களின் கணக்குகளைத் தங்களின் புத்தகத்திலேயே முடிப்பதில்லை. விற்பவரினால் எடுக்கப்பட்ட சொத்தின் ஒப்பந்த மதிப்பின்படி பதிவுகள் பதிவாகும். எடுக்கப்பட்ட சொத்தின் மதிப்பைக் கண்டுபிடிப்பதற்கு அடிப்படை கேள்வியில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. வாங்குபவரிடமிருக்கும் சொத்தின் மதிப்பை அவர் சாதாரண தேய்மான வீதத்தில் கண்டுபிடிக்கிறார். அவர் சொத்தின் கணக்கை ஆரம்பிக்கிறார். இக்கணக்கு விற்பவரால் வாங்குபவருக்கு விடப்பட்டச் சொத்தின் இருப்பைக் காட்டும்.

3. சொத்தின் கணக்கை வரவாக்கிய பின் (வாங்குபவரின் புத்தகத்தில்) அதனுடன் விற்பவரால் எடுக்கப்பட்ட சொத்தின் மதிப்பு (ஒப்பந்த மதிப்பில் கூறப்பட்டதுபோல்) மற்றும் விடுப்பட்ட சொத்தின் இருப்பை வைத்தப்பின் (2இல் சாதாரண மதிப்பில் கணக்கிடப்பட்டதுப் போல்) சொத்துக் கணக்கில் காட்டப்பட்ட வித்தியாசம் பொருள் தவறுதலில்

உள்ள இலாபம் அல்லது நட்டத்தைக் குறிக்கும். இந்த வித்தியாசம் இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

எடுத்துக்காட்டு – 6

P என்பவர் ஒவ்வொன்றும் ரூ.14,000 வீதம் நான்கு கார்களை வாடகைக் கொள்முதல் முறையில் வாங்கினார். நான்கு கார்களுக்கும் சேர்த்து வாடகைக் கொள்முதல் விலை ரூ.60,000 இருந்தது. அதனை ரூ.15,000 ஒப்பந்தத் தேதியிலும் மற்றும் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ரூ.15,000 வீதம் மூன்று தவணைகளிலும் செலுத்தப்பட வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு 5% வட்டி வசூலிக்கப்படவிருக்கிறது.

ஒப்பந்தத் தொகை மற்றும் முதல் தவணை செலுத்திய பிறகு, இரண்டாம் தவணையைக் கட்டத் தவறியதால், விற்றவர் மூன்று காரின் உடைமையை ஒப்பந்த மதிப்பில் எடுத்துக்கொண்டு காரின் தேய்மானம் ஆண்டு ஒன்றுக்கு 20% குறைந்த செல் மதிப்பு முறைக்குப் பின் கணக்கிட்டார். வாங்கியவரிடம் ஒரு கார் உள்ளது.

விற்றவர் ரூ.1200 செலவு செய்து பழுது பார்த்து மூன்று காரையும் X என்பவருக்கு ரூ.35,000க்கு விற்றார்.

வாடகைக்கு வாங்கியவர் மற்றும் வாடகைக்கு விற்றவர் புத்தகத்தில் பேரேடு கணக்கில் காண்பிக்கவும்.

தீர்வு :

முறை I:

பொருள் மீட்டலின் நட்டத்தை கணக்கிடுதல்

| | விவரங்கள் | வாடகைக்கு வாங்கியவர் | வாடகைக்கு விற்றவர் |
|---|---|---|---|

| தேதி | | மதிப்பின்படி நேர்கோட்டு முறையில் 10% | மதிப்பின்படி குறைந்த செல் மதிப்பு முறையில் 20% |
|---|---|---|---|
| | 3 காரின் அசல் மதிப்பு | 42,000 | 42,000 |
| 1ஆம் வருடம் | தேய்மானம் | 4,200 | 8,400 |
| | | 37,800 | 33,600 |
| 2ஆம் வருடம் | தேய்மானம் | 4,200 | 6,720 |
| | | 33,600 | 26,880 |

ரூ.(33600 – 26880) இடையே உள்ள வேறுபாடு ரூ.6720 வாடகைக் கொள்முதல் செய்தவருக்கு பொருள் மீட்டத்தால் நட்டம் ஏற்பட்டது.

**P என்பவரின் புத்தகத்தில் (வாடகைக் கொள்முதல் செய்தவர்)**

**கார்களின் க/கு:**

| தேதி | விவரங்கள் | ரு | தேதி | விவரங்கள் | ரு. |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் க/கு | 56,000 | 1ஆம் வருடம் | தேய்மானக் க/கு | 5600 |
| | | | | இருப்பு கீ/இ | 50,400 |
| | | 56,000 | | | 56,000 |
| 2 ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 50,400 | 2ஆம் வருடம் | தேய்மானக் க/கு | 5600 |
| | | | | வாடகைக்கு விற்றவர் க/கு | 26,880 |
| | | | | இ & ந க/கு | 6720 |
| | | | | இருப்பு கீ/இ | 11,200 |
| | | 50,400 | | | 50,400 |

**வாடகைக்கு விற்றவரின் க/கு**

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1ஆம் வருடம் | வங்கி க/கு | 15,000 | 1ஆம் ஆண்டு | கார்களின் க/கு | 56,000 |
| | வங்கி க/கு | 15,000 | | வட்டி க/கு | 2,050 |
| | இருப்பு கீ/இ | 28050 | | | |
| | | 58,050 | | | 58,050 |
| 2ஆம் வருடம் | கார்களின் க/கு | 26,880 | 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 28,050 |
| | இருப்பு கீ/இ | 2,573 | | வட்டி | 1,403 |
| | | 29,453 | | | 29,453 |

முறை – II:

## கார்களின் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ | தேதி | விவரங்கள் | ரூ |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1ஆம் வருடம் | வாடகைக்கு விற்றவர் க/கு | 15,000 | 1ஆம் வருடம் | தேய்மான க/கு | 5,600 |
| | வாடகைக்கு விற்றவர் க/கு | 12,950 | | இருப்பு கீ/இ | 22,350 |
| | | 27,950 | | | 27,950 |
| 1ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 22,350 | 2ஆம் வருடம் | தேய்மான க/கு | 5,600 |
| | வாடகைக்கு விற்றவர் தொகை கொடுக்கப்பட வேண்டியது (முறை I பார்க்கவும்) | 2,573 | | இ & ந க/கு | 8,123 |
| | | | | இருப்பு கீ/இ | 11,200 |
| | | 24,923 | | | 24,923 |
| 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 11,200 | | | |

## வாடகைக்கு விற்றவரின் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வங்கி க/கு | 15,000 | 1ஆம் ஆண்டு | கார்களின் க/கு | 15,000 |
| | வங்கி க/கு | 15,000 | | கார்களின் க/கு | 12,950 |
| | | | | வட்டி க/கு | 2,050 |
| | | 30,000 | | | 30,000 |
| 2 ஆம் வருடம் | இருப்பு கீ/இ | 2573 | 2ஆம் வருடம் | கார்களின் க/கு | 2,573 |
| | | | | இருப்பு கீ/கொ | 2,573 |

P என்பவர் ரூ.6720 க்கு நட்டமடைந்தார். கூடுதலாக ரூ.1403—யை இரண்டாம் ஆண்டில் செலுத்தினார். மொத்தம் ரூ.8123.

## வாடகைக்கு விற்றவரின் புத்தகத்தில்:

## Pஇன் க/கு:

| தேதி | விவரங்கள் | ரூ | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | வாடகைக் கொள்முதல் விற்பனை | 56,000 | 1ஆம் ஆண்டு | வங்கி | 15,000 |
| | வட்டி | 2,050 | | வங்கி | 15,000 |
| | | | | இருப்பு கீ/இ | 28,050 |
| | | 58,050 | | | 58,050 |
| 2ஆம் வருடம் | இருப்பு கீ/கொ | 28,050 | 2ஆம் வருடம் | மீட்டிய சரக்கின் க/கு | 26,880 |
| | வட்டி | 1,403 | | இருப்பு கீ/இ | 2,573 |
| | | 29,453 | | | 29,453 |

## மீட்டியச் சரக்கின் க/கு:

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ஆம் வருடம் | P க/கு | 26,880 | 1ஆம் வருடம் | X'க/கு – 3 காரின் விற்பனை | 35,000 |
| | வங்கி செலவுகள் | 1,200 | | | |
| | இ & ந :க/கு | 6,920 | | | |
| | | 35,000 | | | 35,000 |

**வாடகைக் கொள்முதல் வியாபாரக் கணக்கு**

வாடகைக் கொள்முதல் அடிப்படையில் விற்பவர் எண்ணிக்கையிலடங்கா விற்பனைச் செய்யும் போது கூடுதலாக சாதாரண விற்பனைக்கு அதனுடைய ஒவ்வொரு விற்பனையின் வட்டியைக் கணக்கிடுவதற்கு நிர்வகிக்க முடியாது. இந்தக் கஷ்டங்களைச் சமாளிப்பதற்கும் மற்றும் வாடகைக் கொள்முதல் விற்பனையில் ஏற்பட்ட இலாபத்தைக் கண்டுபிடிப்பதற்கும் கீழ்க்காணும் முறைகளில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

1. கடனாளிகள் முறை
2. சரக்கு மற்றும் கடனாளிகள் முறை
3. வட்டி அனாமத்து முறை

**1. கடனாளிகள் முறை**

இந்த முறையில் வாடகைக் கொள்முதல் பொருட்களை விற்றதில் ஏற்பட்ட இ & ந தொகையை ஆராய்வதற்காக வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு தயாரிக்கப்படுகிறது. வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு அனுப்பீடு க/கு அல்லது கிளைக் க/கு போல் இருக்கும்.

**கணக்கியல் பதிவுகள் பின்வருமாறு**

1. வாடகைக் கொள்முதலில் பொருட்களை விற்றதற்கு

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு ப

வா.கொ. பொருட்களை விற்றக் க/கு

(வாடகைக் கொள்முதல் விலையில்)

2. வாடிக்கையாளரிடமிருந்து ரொக்கம் (ஒப்பந்தத்தில் செலுத்தியத் தவணை) பெற்றதற்கு:

ரொக்கம் / வங்கிக் க/கு ப

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு

3. தவணைக் கொடுக்கப்பட வேண்டியது ஆனால் வருட இறுதியில் இன்னும் பெறவில்லை:

தவணைக் கொடுக்கப்பட வேண்டியக் க/கு ப

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு

4. தவணையைக் கட்டத் தவறியதால் பொருட்களை மீட்டியதற்கு:

மீட்டியச் சரக்குக் க/கு ப

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு

(மதிப்பீட்டு தொகையில் பொருளை மீட்டியது)

5. வாடிக்கையாளரிடம் இருக்கும் பொருள், கொடுக்கப்பட வேண்டிய தவணை வருட இறுதியில் பெறவில்லை:

வாடகைக் கொள்முதல் சரக்குக் க/கு ப

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு

6. வாடகைக் கொள்முதலில் பொருட்களை விற்றதில் சேர்ந்துள்ள சுமையை (Loading) நீக்குவதற்கு:

வாடகைக் கொள்முதலில் பொருட்களை விற்றக் க/கு ப

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு

(வாடகைக் கொள்முதல் விலை மற்றும் அடக்க விலையின்

இடையேயுள்ள வேறுப்பாடுகள்)

7. வாடிக்கையாளரிடம் இறுதியில் இருக்கும் பொருளில் சேர்ந்துள்ளச் சுமையை (Loading) நீக்குவதற்கு (வாடகைக் கொள்முதல் சரக்கு)

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு ப

சரக்கு ஒதுக்கீடு க/கு

இப்பொழுது, வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு இ&ந—தை வெளிப்படுத்தும் மற்றும் அவை பொது இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படும்.

பின் தொடர்கிற வருடங்களில், தவணைக் கொடுக்கப்பட வேண்டியது பெறவில்லை என்றால் முந்தைய ஆண்டின் வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு மற்றும் சரக்கு ஒதுக்கீடு க/கு மூடப்பட்டு வாடகைக் கொள்முதல் க/கு—கிற்கு மாற்றப்படுகிறது. அதற்கான பதிவுகள் பின்வருமாறு:

1. ஆரம்பத் தவணைக் கொடுக்க வேண்டியதற்கு:

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு ப

தவணைக் கொடுக்க வேண்டியக் க/கு

2. ஆரம்பத்தில் வாடகைக் கொள்முதல் சரக்கிற்கு:

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு ப

வாடகைக் கொள்முதல் சரக்குக் க/கு

3. ஆரம்பத்தில் சரக்கு ஒதுக்கீட்டிற்கு:

சரக்கு ஒதுக்கீடு க/கு ப

வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு

எடுத்துக்காட்டு – 7

2007, ஜனவரி 1ஆம் ஆண்டு விக்ரம் & கோ வாடகைக் கொள்முதல் துறையைத் துவங்கினார். அடக்க விலையுடன் 25 சதவீதத்தைக் கூட்டி வாடகைக் கொள்முதலுக்கு பொருட்களை விற்றார் துறை இ&ந—தை கீழ்க்கூறப்பட்ட தகவலின் படி கணக்கிடவும்.

| தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|
| 2007 ஜனவரி,1 | இந்த வருடத்தின் வாடகைக் கொள்முதலுக்கு பொருட்களை விற்றது.(வாடகை கொள்முதல் விலை) | 1,00,000 |
| | இந்த வருடத்தில் ரொக்கம் பெற்றது | 50,000 |
| | பொருட்கள் மீட்டியது (வாடகைக் கொள்முதலில் செலுத்தாத தவணை ரூ.4,000) அதன் மதிப்பு | 1000 |
| 2008 டிசம்பர் 31 | வுாடகைக் கொள்முதல் வாடிக்கையாளரிடம் உள்ள பொருட்கள் | 40,000 |
| | வுாடகைக் கொள்முதலுக்குப் பொருட்களை விற்றது | 1,50,000 |
| | இந்த வருடத்தில் ரொக்கம் பெற்றது | 1,00,000 |
| | பொருள் மீட்டியது (வாடகைக் கொள்முதலில் செலுத்தாத தவணை ரூ.6,000) அதன் மதிப்பு | 2000 |
| | தவணை கொடுக்கப்பட வேண்டியது ஆனால் பெறவில்லை | 10,000 |

தீர்வு :

செய்முறை:

| | | ரூ. |
|---|---|---|
| வாடகைக்குக் கொள்முதலுக்குப் பொருட்களை விற்றது | | 1,00,000 |
| (–) ரொக்கம் பெற்றது | 50,000 | |
| மீட்டிய சரக்கின் வாடகை கொள்முதல் மதிப்பு | 4,000 | |
| வுாடகைக் கொள்முதல் சரக்கு(தவணைக் கொடுக்க வேண்டியது) | 40,000 | 94,000 |

| | | |
|---|---|---|
| தவணைகள் கொடுக்கப்பட வேண்டியது | | 6,000 |

## வாடகைக் கொள்முதல் வியாபாரம் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2007 ஜனவரி 1 | வாடகைக் கொள்முதலுக்கு பொருட்கள் விற்றது | 1,00,000 | 2007 டிசம்பர் 31 | ரொக்கம் | 50,000 |
| | | | | மீட்டியச் சரக்கு க/கு தவணை | 1,000 |
| | | | | கொடுக்கப்பட வேண்டியக் க/கு | 6,000 |
| | | | | வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு | 40,000 |
| | | | | வாடகைக் கொள்முதல் பொருட்களை விற்றது(1,00000X2/125) | 20,000 |
| டிசம்பர்.31 | சரக்கு ஒதுக்கீடு க/கு (40,000 X 25 / 125) | 8,000 | | | |
| | இ&ந க/கு | 9,000 | | | |
| | | 1,17,000 | | | 1,17,000 |

## வாடகைக் கொள்முதலுக்குப் பொருட்களை விற்ற க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2007 டிச.31 | வாடகைக் கொள்முதல் விற்ற க/கு | 20,000 | 2007 ஜன.1 | வாடகைக் கொள்முதல் வியாபார க/கு | 1,00,000 |
| | கொள்முதல் க/கு | 80,000 | | | |
| | | 1,00,000 | | | 1,00,000 |

## தவணைக் கொடுக்கப்பட வேண்டியக் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2007 டிச.31 | வாடகைக் கொள்முதல் விற்றக் க/கு | 6,000 | 2007 டிச.31 | இருப்பு கீ/இ | 6,000 |
| 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ | 6,000 | | | |

## வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2007 டிச.31 | வாடகைக் கொள்முதல் விற்ற க/கு | 40,000 | 2007 டிச.31 | இருப்பு கீ/இ | 40,000 |
| 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ | 40,000 | | | |

## சரக்கு ஒதுக்கீடு க்/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2007 டிச.31 | இருப்பு கீ/இ | 8,000 | 2007 டிச.31 | வாடகைக் கொள்முதல் விற்ற க/கு | 8,000 |
| | | | 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ | 8,000 |

## 2008- ஆம் ஆண்டிற்கு:

### செயல்முறை:

| | | ரூ. |
|---|---|---|
| ஆரம்பத்தில் தவணைக் கொடுக்கப்பட வேண்டியது | | 6,000 |
| வாடகைக் கொள்முதல் வாடிக்கையாளரிடம் ஆரம்பத்தில் இருந்த பொருள்கள் | | 40,000 |
| இந்த வருடத்தில் வாடகைக் கொள்முதல் பொருள்களை விற்றது | | 1,50,000 |
| | | 1,96,000 |
| (—)ரொக்கம் பெற்றது | 1,00,000 | |
| மீட்டியப் பொருளின் வாடகைக் கொள்முதல் மதிப்பு | 6,000 | |
| தவணைத் தொகைக் கொடுக்கப்பட வேண்டியது | 10,000 | 1,16,000 |
| வாடகைக் கொள்முதல் வாடிக்கையாளரிடம் இறுதியில் இருந்த பொருள் (வா.கொ.சரக்கு) | | 80,000 |

## வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2008 | தவணைக் கொடுக்கப்பட | | 2008 | சரக்கு ஒதுக்கீடு க/கு | 8,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜன.1 | வேண்டியது | 6,000 | ஜன.1 | | |
| | வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு | 40,000 | | ரொக்கம் | 1,00,000 |
| | வாடகைக் கொள்முதல் பொருட்களை விற்றது | 1,50,000 | | மீட்டிய சரக்கு க/கு | 2,000 |
| டிச.31 | சரக்கு ஒதுக்கீடு க/கு (80,000 x 25/125) | 16,000 | | தவணைக் கொடுக்கப்பட வேண்டியது | 10,000 |
| | இ&ந க/கு – இலாபம் | 18,000 | | வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு | 80,000 |
| | | | | வாடகைக் கொள்முதல் பொருட்களை விற்றது (1,50,000 x 25/125) | 30,000 |
| | | 2,30,000 | | | 2,30,000 |

## வாடகைக் கொள்முதலுக்குப் பொருட்களை விற்றக் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2008 டிச.31 | வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு—சுமை | 30,000 | 2008 ஜன.1 | வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு | 1,50,000 |
| | கொள்முதல் க/கு | 1,20,000 | | | |
| | | 1,50,000 | | | 1,50,000 |

## தவணைக் கொடுக்கப்பட வேண்டியக் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ | 6,000 | 2008 ஜன.1 | வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு – மாற்றம் | 6,000 |
| | வாடகைக் கொள்முதல் வியாபார க/கு | 10,000 | | இருப்பு கீ/கொ | 10,000 |
| | | 16,000 | | | 16,000 |
| 2009 ஜன.1 | இருப்பு கீ/கொ | 10,000 | | | |

## வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ | 40,000 | 2008ஜன.1 | வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு – மாற்றம் | 40,000 |
| 2008 டிச.31 | வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு | 80,000 | 2008 டிச. 31 | இருப்பு கீ/கொ | 80,000 |
| | | 1,20,000 | | | 1,20,000 |
| 2009 ஜன.1 | இருப்பு கீ/கொ | 80,000 | | | |

## சரக்கு ஒதுக்கீடு க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2008 ஜன.1 | வாடகைக் கொள்முதல் வியாபாரக் க/கு – மாற்றம் | 8,000 | 2008ஜன.1 | இருப்பு கீ/கொ வாடகைக் கொள்முதல் | 8,000 |
| 2008 டிச.31 | இருப்பு கீ/இ | 16,000 | 2008டிச.31 | வியாபாரக் க/கு | 16,000 |
| | | 24,000 | | | 24,000 |
| | | | 2009 ஜன.1 | இருப்பு கீ/கொ | 16,000 |

### சரக்கு மற்றும் கடனாளிகள் முறை

வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு, வாடகைக் கொள்முதல் கடனாளிகள் க/கு, கடைச் சரக்கு க/கு, மற்றும் வாடகைக் கொள்முதல் சரிகட்டல் க/கு இவைகள் இந்த முறையில் பராமரிக்கப்படுகிறது.

### கணக்கியல் பதிவுகள் பின்வருமாறு

1. வாடகைக் கொள்முதலுக்குப் பொருட்களை விற்றதற்கு:
   வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு
   (வாடகைக் கொள்முதல் விலையுடன்) ப

கடைச்சரக்கு க/கு (அடக்க விலையுடன்)

வாடகைக் கொள்முதல் சரிகட்டல் க/கு

(வாடகைக் கொள்முதல் விலை மற்றும் அடக்க விலையில் இடையே உள்ள வேறுபாட்டுடன்)

2. இந்த ஆண்டின் மொத்தத் தவணைக் கொடுக்கப்பட வேண்டியதற்கு

வாடகைக் கொள்முதல் கடனாளிகள் க/கு ப

வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு

(வாடகைக் கொள்முதல் விலையில்)

3. வாடிக்கையாளரிடம் ரொக்கம் பெற்றதற்கு:

ரொக்க /வங்கிக் க/கு ப

வாடகைக் கொள்முதல் கடனாளிகள் க/கு

4. தவணைக் கட்டத்தவறியதால் பொருட்களை மீட்டியதற்கு

மீட்டியச் சரக்கு க/கு(கணக்கிடப்பட்ட மதிப்புடன்) ப

வாடகைக் கொள்முதல் சரிகட்டல் க/கு

(நட்டம் இருந்தால்) ப

வாடகைக் கொள்முதல் கடனாளிகள் க/கு

5. வாடிக்கையாளரிடம் இறுதியில் இருக்கும் பொருளில் சேர்ந்துள்ளச் சுமையை (Loading) நீக்குவதற்கு (வாடகைக் கொள்முதல்—இறுதி மதிப்பு):

வாடகைக் கொள்முதல் சரிகட்டல் க/கு ப

சரக்கு ஒதுக்கீடு க/கு

6. மாற்றுப் பதிவு:

சரக்கு ஒதுக்கீடு க/கு ப

வாடகைக் கொள்முதல் சரிகட்டல் க/கு

(இப்பதிவு ஆரம்பச் சரக்கிருப்பின் சுமையைச் சரிகட்டும்)

**எடுத்துக்காட்டு – 8:**

ராம் லிமிடெட் வாடகைக் கொள்முதலுக்கு விற்று 25% விற்பனை விலையில் மொத்த இலாபம் ஈட்டுகிறது. கீழே கூறப்பட்ட தகவலின்படி, வியாபார முடிவைக் காட்டுவதற்கு பேரேடுக் கணக்கைத் தயாரிக்கவும்.

| தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|
| 2007 ஜன.1 | வாடகைக் கொள்முதல் விலையில் வாடகைக்குச் சரக்கு | 16,000 |
| | கடையில் (அடக்க விலையில்) உள்ள சரக்கிருப்பு | 2,500 |
| | வாடகைக் கொள்முதல் கடனாளிகளிடமிருந்து தவணை நிலுவை | 4,000 |
| 2007 டிச.31 | வாடகைக் கொள்முதல் விலையில் வாடகைக்குச் சரக்கு | 20,000 |
| | கடையில் (அடக்க விலையில்) உள்ள சரக்கிருப்பு | 3,600 |
| | தவணை நிலுவை | 6,000 |
| | இந்த வருடம் தவணையில் ரொக்கம் பெற்றது | 2,400 |

**தீர்வு:**

## வாடகைக் கொள்முதல் சரக்குக் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 2007 ஜன.1 | இருப்பு கீ/கொ | | 16,000 | 2007 டிச.31 | வாடகைக் கொள்முதல் கடனாளிகள் க/கு | 26,000 |
| | வாடகைக் கொள்முதல் பொருட்களை விற்றது – கடைச்சரக்கு | 15,000 | | | இருப்பு கீ/இ | 10,000 |
| | வாடகைக் கொள்முதல் சரிகட்டல் % | 5,000 | 20,000 | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | **36,000** | | | **36,000** |
| 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ | | 10,000 | | | |

## வாடகைக் கொள்முதல் கடனாளிகள் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2007 ஜன.1 | இருப்பு கீ/கொ | 4,000 | 2007 டிச.31 | ரொக்க க/கு | 24,000 |
| | வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு மொத்த தவணை கொடுக்கப்படவேண்டியது (இருப்பு) | 26,000 | | இருப்பு கீ/இ | 6,000 |
| | | **30,000** | | | **30,000** |
| 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ | 6,000 | | | |

## கடைச் சரக்கு க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2007ஜன.1 | இருப்பு கீ/கொ | 2,500 | 2007டிச.31 | வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு | 15,000 |
| | கொள்முதல் க/கு (இருப்பு) | 16,100 | | இருப்பு கீ/இ | 3,600 |
| | | **18,600** | | | **18,600** |
| 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ | 3,600 | | | |

## சரக்கு ஒதுக்கீடு க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2007 ஜன.1 | வாடகைக் கொள்முதல் க/கு | 4,000 | 2007ஜன.1 | இருப்பு கீ/இ 16,000-ல் 25% | 4,000 |
| டிச.31 | இருப்பு கீ/இ | 2,500 | டிச.31 | வாடகைக் கொள்முதல் சரிகட்டல் க/கு 10,000-ல் 25% | 2,500 |
| | | **6,500** | | | **6,500** |
| | | | 2008 ஜன.1 | இருப்பு கீ/கொ | 2,500 |

## வாடகைக் கொள்முதல் சரிகட்டல் க/கு

| தேதி | விவரங்கள் | ரூ. | தேதி | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2007 டிச.31 | இறுதிச் சரக்கு ஒதுக்கீடு | 2,500 | 2007 டிச.31 | ஆரம்பச் சரக்கு ஒதுக்கீடு க/கு | 4,000 |
| | இ&ந க/கு — இலாபம் | 6,500 | | வாடகைக் கொள்முதல் சரக்கு க/கு | 5,000 |
| | | 9,000 | | | 9,000 |

### வட்டி அனாமத்து முறை

ஒரு நிறுவனம் எண்ணிக்கையில்லடங்கா நடவடிக்கைகளை, வாடகை கொள்முதல் விற்பனை மற்றும் தவணை நிலையான காலங்களில் செலுத்துவதற்கு இந்த முறை பின்பற்றப்படுகிறது. இந்த முறையில், வாடகை கொள்முதல் விலையுடன் வாடகை கொள்முதல் வாடிக்கையாளர்கள் பற்றாக்கப்படுகிறார்கள். மற்றும் ரொக்க விலையுடன் வாடகை கொள்முதல் விற்பனைக் கணக்கில் வரவாக்கப்படுகிறது. வாடகை விலை (வட்டி) மற்றும் வட்டி அனாமத்து கணக்கில் வரவாக்கப்படுகிறது. பதிவுகள் கீழ்வருமாறு :

வாடகைக் கொள்முதல் வாடிக்கையாளர்கள் க/கு ப
(வாடகைக் கொள்முதல் விலை)
வுாடகைக் கொள்முதல் விற்பனை (ரொக்கவிலை)
வட்டி அனாமத்து க/கு (வட்டி)

வாடகை விலையை, வட்டி அனாமத்து கணக்கில் வரவாக்கப்பட்டு, வியாபார கணக்கு/இ&ந க/கி —இல் தவணைக் காலங்களில் விகிதத்திற்கு அதிகமான நீளங்களில் மாற்றப்படுகிறது. பதிவுகள் கீழ்வருமாறு :

வட்டி அனாமத்து க/கு ப
(விகித வட்டி தொகையில்)
வியாபார / இ &ந க/கு

வட்டியை வியாபார/இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றுவதற்குப் பதிலாக அவற்றைப் பல்வேறு முறைகள் மூலமாக மாற்றலாம். முந்தைய அனுபவத்தின் அடிப்படையில் வந்த வட்டியை முழு காலங்களுக்கு சதவீத அடிப்படையில் பகிரப்படுவதன் மூலம் விற்பனை நிறுவனம் கணக்கிடலை குறைப்பதற்கு விரும்புகிறது.

**எடுத்துக்காட்டு —1**

இந்திய ரேடியோ ஹவுஸ் நிறுவனம் ரேடியோவை வாடகைக் கொள்முதல் மற்றும் ரொக்கத்திற்கு விற்றது. வாடகைக் கொள்முதல் விற்பனையில் விலையை விட ரொக்க விற்பனை 25%—க்கு குறைவாக இருந்தது. 31, டிசம்பர் 2007ஆம் ஆண்டின் இருப்புநிலைப் பின்வருமாறு :

இருப்பாய்வு

| விவரங்கள் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| வாடகைக் கொள்முதல் தவணை க/கு | 73000 | - |
| பொருளின் சரக்கு (01.01.97) | 9000 | - |
| ரொக்கம் | 13000 | - |
| முதல் | - | 50000 |
| கடனீந்தோர்கள் | - | 16000 |
| விற்பனை – வாடகைக் கொள்முதல் | - | 60000 |
| விற்பனை – ரொக்கம் | - | 30000 |
| கொள்முதல்கள் | 56000 | - |
| விற்பனை மற்றும் இதர செலவுகள் | 5000 | - |
| | **156000** | **156000** |

31, டிசம்பர் 2007ஆம் ஆண்டுக்கான பொருளின் சரக்கு ரூ.16,700-ஆக இருந்தது.

வாடகைக் கொள்முதல் தவணை க/கு விவரம் வருமாறு :

| விவரங்கள் | மொத்தம் ரூ. | 2005 ரூ. | 2006 ரூ. | 2007 ரூ. |
|---|---|---|---|---|
| இருப்பு 01.01.2007 | 50,000 | 30,000 | 20,000 | - |
| (+)விற்பனை 2007 | 60,000 | - | - | 60,000 |
| | 1,10,000 | 30,000 | 20,000 | 60,000 |
| (-)ரொக்கம் பெற்றது | 37,000 | 18,000 | 10,000 | 9,000 |
| | **73,000** | **12,000** | **10.000** | **51,000** |

2007, டிசம்பரில் தவணைக் கடந்த வாடிக்கையாளர்களிடமிருந்து ரேடியோவை நிறுவனம் மீட்டியது. 2006-இல் கொடுபடாத இருப்பின் விற்பனைத் தொகை ரூ.7,400 ரேடியோ மீட்டிய சமயத்தில் இருந்தது. அதனால், இறுதிச்சரக்கில் மீட்டப்பட்டது ரூ.6,700 சேர்ந்துள்ளது.

வாடகைக் கொள்முதல் விற்பனையில் மொத்த இலாபத்தின் வீதம், வட்டி மற்றும் மீட்டுவதற்காக சரிக்கட்டிய பிறகு, 2005ல் 30% மற்றும் 2006–இல் 32% இருந்தது.

ஜனவரி 1, 2007ஆம் ஆண்டு நிறுவனம் பொருளைக் கொடுத்த சமயத்தில் ஏற்பட்ட வாடகைக் கொள்முதல் இலாபத்தில் முழு வரவை எடுக்கும் வழக்கத்தை மாற்றியமைக்க முடிவு செய்து, தவிர இலாபக் கணக்கில் விகித முறையில் தவணையை வசூலித்தது.

2007–இல் இலாப நட்ட க/கு தயாரிக்கவும்.

**தீர்வு :**

| | | ரூ. |
|---|---|---|
| 1) விற்பனை 2007 | | |

| | | |
|---|---|---|
| வுடகைக் கொள்முதல் விற்பனை | | 60,000 |
| ரொக்க விற்பனை, வாடகைக் கொள்முதல் விற்பனைக்கு மாற்றப்பட்டது (விலை 30,000 x 100/75) | | 40,000 |
| | | 1,00,000 |
| (–) விற்பனையின் விலை ஆரம்பச் சரக்கு | 9,000 | |
| (+) கொள்முதல்கள் | 56,000 | |
| | 65,000 | |
| (–) இறுதிச் சரக்கிருப்பு (கடைசி வருடத்தில் பொருள் மீட்டப்பட்ட சரக்கு தவிர, விற்பனை 16700-6700) | 10,000 | 55,000 |
| மொத்தஇலாபம், அனைத்து விற்பனையும் வாடகை கொள்முதல் விற்பனையாக இருந்தால் | | 45,000 |

2007இல்இ வாடகை கொள்முதல் விற்பனையில் மொத்த இலாப சதவீதம்

$$= \frac{45000}{100000} \times 100$$

$$= 45\%$$

2. பணமாக்கப்படாத இலாபம்

2005-இல் கொடுக்கப்படவேண்டிய விற்பனை : 12,000-இல் 30% 3600

2006-இல் கொடுக்கப்படவேண்டிய விற்பனை : (10,000-7,400)-இல் 32% 832

2007-இல் கொடுக்கப்படவேண்டிய விற்பனை : 51,000-இல் 45% 22950

27382

வாடகை கொள்முதல் தவணை க/கு

ப வ

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 73,000 | மீட்டப்பட்ட சரக்கு<br>இருப்பு கீ/இ | 7,400<br>65,600 |

| | | | |
|---|---|---|---|
| | 73,000 | | 73,000 |
| இருப்பு கீ/கொ | 65,600 | | |

## மீட்டப்பட்ட சரக்கு க/கு

ப வ

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| வாடகை கொள்முதல் தவணைகள் | 7,400 | சரக்கு க/கு | 6,700 |
| | | இ & ந க/கு | 700 |
| | **7,400** | | **7,400** |

## 2007ஆம் ஆண்டிற்கான இலாப நட்ட க/கு

| விவரங்கள் | | ரூ. | விவரங்கள் | | ரூ. |
|---|---|---|---|---|---|
| விற்பனையின் விலை | | 55,000 | விற்பனை : | | |
| வுாடகைக் கொள்முதலின் பணமாக்கப்படாத இலாப ஒதுக்கீடு | | | வுாடகைக் கொள்முதல் விற்பனை | 60,000 | |
| 2007–இல் விற்பனை | | 22,950 | ரொக்க விற்பனை | 30,000 | 90,000 |
| மொத்த இலாபம் கீ/கொ | | 12,050 | | | |
| | | **90,000** | | | **90,000** |
| விற்பனை மற்றும் இதர செலவுகள் | | 5,000 | மொத்த இலாபம் கீ/இ | | 12,050 |
| மீட்கப்பட்ட சரக்கு – நட்டம் | | 700 | | | |
| நிகர இலாபம் கீ/கொ | | 6,350 | | | |
| | | **12,050** | | | **12,050** |
| பணமாக்கப்பட்ட இலாபத்தின் ஒதுக்கீடு : | | | நிகர இலாபம் | | 6,350 |
| 2005 | 3,600 | | | | |
| 2006 | 832 | 4432 | | | |
| இலாபம் — முதல் கணக்கில் மாற்றப்படுகிறது | | 1,918 | | | |
| | | **6,350** | | | **6,350** |

## 2007-ஆம் ஆண்டிற்கான இந்திய ரேடியோ ஹவுஸின் இருப்புநிலை

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | | ரூ. |
|---|---|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | | 16,000 | ரொக்கம் | | 13,000 |
| முதல் | 50,000 | | சரக்கு—சரக்கு கடை | 10,000 | |
| (+) இலாபம் | 1,918 | 51,918 | மீட்கப்பட்டது | 6,700 | 16,700 |
| | | | வாடகை கொள்முதல் | | |
| | | | தவணை | 65,600 | |
| | | | (–) பணமாக்கப்பட்ட | | |
| | | | இலாபம் | 27,382 | 38,218 |
| | | 67,918 | | | 67,918 |

## பயிற்சிகள்

**வாடகைக் கொள்முதல்:**

1. வாடகைக் கொள்முதல் முறையில், அனில் என்பவர் ரூ.5,000—திற்கு இயந்திரத்தைப் பெறுகிறார். அதை பின்வருமாறு செலுத்த வேண்டும்.

| | ரூ. |
|---|---|
| ஒப்பந்தத்தில் செலுத்தியது | 800 |
| முதல் வருட இறுதியில் | 1,200 |
| இரண்டாம் வருட இறுதியில் | 2,200 |
| மூன்றாம் வருட இறுதியில் | 800 |

ரூ.5,000இல் வட்டி உள்ளடங்கியுள்ளது, 10% ஆண்டு வட்டியில் ரொக்க மதிப்பின் மீது அவை மதிப்பீடு செய்யப்படுகிறது.

விற்பவரின் புத்தகத்தில் கணக்கைக் காண்பிக்கவும்.

விடை:

வட்டி ரூ.351, ரூ.266, ரூ.73, மொத்த அடக்க விலை ரூ.4,310.

2. 2008, ஜனவரி 1 அன்று இரண்டு வாகனங்களை மோட்டார் கம்பெனி கொள்முதல் செய்தது. அதன் ரொக்க விலை ரூ.56,000. கொள்முதல், வாடகை கொள்முதல் அடிப்படையில் இருந்தது.

ஒப்பந்தம் கையெழுத்தானபோது ரூ.15,000 செலுத்தப்பட்டது. மற்றும் அதற்குப் பின் ரூ.15,000 மூன்று வருடங்களுக்கு செலுத்த வேண்டும். வட்டி 5% வசூலிக்கப்படுகிறது.

குறைந்த செல் தவணை முறையில் ஆண்டு வீதமாக 20% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். மோட்டார் கம்பெனி புத்தகத்தில் பேரேடு கணக்கைத் தருக.

**விடை:**

வட்டி ரூ.2,050, இரண்டாம் ஆண்டு ரூ.1,403, மூன்றாம் ஆண்டு ரூ.547.

3. சுரங்கக் கம்பெனி பெரும் பார வண்டியை டிஃபெர்டு பேமெண்ட் (Deferred Payment) முறையில் வாடகைக்கு எடுத்தது. வாடகைக் கொள்முதல் விலை ரூ.16,000 ரூ.4,000 ஒப்பந்தத்தில் செலுத்த வேண்டும். மற்றும் மீதத்தை மூன்று தவணைகளாக, ரூ.4,000த்தை ஒவ்வொரு 6 மாதத்திற்கு செலுத்தப்பட வேண்டும். ரொக்க விலை ரூ.14,860.

குறைந்த செல் மதிப்பு முறையில் ஆண்டு ஒன்றுக்கு 5% நீக்கப்பட வேண்டும்.

சுரங்க கம்பெனி புத்தகத்தில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். குறிப்பேடு பதிவுகள் தேவையில்லை.

விடை:

வட்டி ரூ.570, ரூ.380, ரூ.190.

4. சவுண்டு கம்பெனி, சரக்கு மற்றும் கடனாளிகள் முறை மீது வாடகை கொள்முதல் வியாபாரச் சம்பந்தமான நடவடிக்கைகளைப் பதிவு செய்கிறது. ரஷித் என்பவருக்கு பதிவு செய்யும் இயந்திரத்தை விற்றனர். அதற்கு ரஷித் என்பவர் ரூ.1,200யை தலா ரூ.100 வீதம் 12 மாத தவணையில் செலுத்த வேண்டப்பட்டது. ரஷித் நான்கு தவணையைக் குறிப்பிட்ட நேரத்தில் செலுத்தினார். ஆனால் அதற்குப் பிறகு அவர் தவணைகளைக் கட்ட தவறிவிட்டார். சவுண்டு கம்பெனி ஏழாவது தவணைக்கு பிறகு (அதையும் கொடுக்க வேண்டியிருந்து எட்டாவது த்வணைக் கட்டத் தவறும் முன்) பதிவு செய்யும் இயந்திரத்தை மீட்டனர். கம்பெனி, மீட்டிய பதிவு செய்யும் இயந்திரத்தை ரூ.850—க்கு மதிப்பீடு செய்தது.

கம்பெனி புத்தகத்தில், ரஷிதிடமிருந்து பதிவு செய்யும் இயந்திரத்தை மீட்டியதைக் குறிப்பேட்டில் பதிவு செய்யவும்.

விடை:

பொருள் மீட்டலில் இலாபம் ரூ.50.

5. 2000, ஜனவரி 1 அன்று Y என்பவர் 3 இயந்திரத்தை வாடகை கொள்முதலில் Z என்பவரிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு 10% வட்டியில் பெற்றார். Y உடனடியாக ரூ.60,000 செலுத்தினார் மற்றும் ஆண்டுக்கு 3 தவணைகள் ஒவ்வொன்றும் ரூ.1,00,000 செலுத்த ஒப்புக்கொண்டார். முதல் தவணை 1999ஆம் ஆண்டு இறுதியில் கொடுக்க வேண்டி இருந்தது.

Y சரியாக முதல் தவணையைச் செலுத்தினார். ஆனால் அதன் பிறகு செலுத்த தவறிவிட்டார். Y தவணைக் கட்ட தவறியதால் உடனடியாக Z இயந்திரத்தை மீட்டிக் கொண்டார்.

31, டிசம்பர் அன்று Y—க்கு ஆண்டு ஒன்றுக்கு 20% நேர்வழி முறையில் விதிக்கப்பட்டது. Z என்பவர் அனைத்து இயந்திரத்தையும் மீட்டினால், சம்பந்தப்பட்ட கணக்கை இரண்டு நபர்களின் புத்தகத்தில் காண்பிக்கவும்.

**விடை:**

இயந்திரத்தின் ரொக்க விலை ரூ.3,08,680, தவணைத் தவறியதால் வாங்கியவரின் இலாபம் ரூ.5,710, விற்றவர் பொருள் மீட்டல் க/கு—இல் தொகையைப் பற்றாக்கினார் ரூ.1,90,910.

**வாடகைக் கொள்முதல் வியாபாரக் கணக்கு**

6. பின்வருபவை வியாபாரியின் புத்தகத்தில் இருக்கும் தகவல்கள், அவர் சிறு மதிப்பின் பொருளை வாடகைக் கொள்முதல் முறையில் விலையின் மீது 50% இலாபத்தில் விற்றார்.

2000, டிசம்பர் 31ஆம் ஆண்டிற்கான வாடகைக் கொள்முதல் வியாபாரக் கணக்கை தயாரிக்கவும்.

| | | ரூ. |
|---|---|---|
| ஜன.1 | வாடிக்கையாளரிடம் இருக்கும் சரக்கு | 27,000 |
| | கடையிலிருக்கும் சரக்கு | 54,000 |
| | தவணைகள் கொடுக்க வேண்டியது | 15,000 |
| டிச.31 | கடையிலிருக்கும் சரக்கு | 61,500 |
| | தவணைகள் கொடுக்க வேண்டியது | 27,000 |
| | பொருள் மீட்டப்பட்டதை (தவணை கொடுக்க வேண்டியது ரூ.8,000) ரூ.1500—க்கு மதிப்பீடு | |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டது. அது இறுதிச் சரக்கில் ரூ.1500 சேர்ந்துள்ளது. | 1,80,000 |
| | இந்த வருடத்தின் பொருள் கொள்முதல் செய்தது | 1,80,000 |

**விடை:**

வாடிக்கையாளரிடம் சரக்கு ரூ.88,000, நிகர இலாபம் ரூ.60,167.

7. இந்திய ரேடியோ ஹவுஸ் ரேடியோக்களை வாடகை கொள்முதலுக்கும், ரொக்கத்திற்கும் விற்பனை செய்தது. வாடகைக் கொள்முதல் விற்பனைக்கு, விலையை விட ரொக்க விற்பனை 25% விலையில் குறைவாக இருந்தது. 2009 டிசம்பர் 31ஆம் ஆண்டிற்கான சுருக்கப்பட்ட இருப்பாய்வு பின்வருமாறு :

| | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| வாடகைக் கொள்முதல் தவணை க/கு | 73,000 | - |
| பொருளின் சரக்கு (01.01.2009) | 9,000 | - |
| ரொக்கம் | 13,000 | - |
| முதல் | - | 50,000 |
| கடனீந்தோர்கள் | - | 16,000 |
| விற்பனை – வாடகைக் கொள்முதல் | - | 60,000 |
| விற்பனை – ரொக்கம் | - | 30,000 |
| கொள்முதல்கள் | 56,000 | - |
| விற்பனை மற்றும் இதர செலவுகள் | 5,000 | - |
| | **1,56,000** | **1,56,000** |

2009, டிசம்பர் 31ஆம் ஆண்டிற்கான பொருளின் சரக்கு ரூ.16,700.

வாடகைக் கொள்முதல் தவணைக் கணக்கின் விபரம் பின்வருமாறு :

| | மொத்தம் ரூ. | 2007 ரூ. | 2008 ரூ. | 2009 ரூ. |
|---|---|---|---|---|
| இருப்பு 01.01.2009 அன்று | 50,000 | 30,000 | 20,000 | - |
| (+)விற்பனை 2009—இல் | 60,000 | - | - | 60,000 |
| | **1,10,000** | **30,000** | **20,000** | **60,000** |
| (—)ரொக்கம் பெற்றது | 37,000 | 18,000 | 10,000 | 9,000 |
| | **73,000** | **12,000** | **10,000** | **51,000** |

டிசம்பர் 2009இல் தவணைக் கடந்த வாடிக்கையாளரிடம் ரேடியோவை நிறுவனம் மீட்டியது. மீட்டிய நேரத்தில் விற்பனை தொகையான ரூ.7,400 செலுத்தப்படாத இருப்பாக 2008ஆம் ஆண்டு எழும்பி உள்ளது. ரேடியோ மீட்டப்பட்டதில் ரூ.6,700/— இறுதிச் சரக்கில் சேர்ந்துள்ளது.

வாடகைக் கொள்முதல் விற்பனையின் மீது மொத்த இலாபத்தின் வீதத்தில் வட்டியும் சேர்ந்துள்ளது. மற்றும் மீட்டியதை சரிகட்டியபின், 2007இல் 30% மற்றும் 2008இல் 32% இருந்தது.

2009, ஜனவரி 1 அன்றிலிருந்து பொருட்களைப் பட்டுவாடா செய்யும் நேரத்தில் ஏற்படும் வாடகைக் கொள்முதல் இலாபத்தை பூரணமான வரவு வழக்கத்தை நிறுவனம் மாற்ற முடிவு செய்து, இலாப கணக்கில் மட்டுமே விகித அடியின் மீது தவணை வசூலிக்கப்பட வேண்டும். முந்தைய இரண்டு வருடத்திற்கான தவணைக் கொடுக்கப்பட வேண்டிய சரிக்கட்டலைச் செய்யப்பட வேண்டும்.

2009ஆம் ஆண்டிற்கான இலாப & நட்ட கணக்கைத் தயாரிக்கவும்.

**விடை:**

நிகர இலாபம் ரூ.2,880, மொத்த இருப்பு நிலை ரூ.68,800, 2009ஆம் ஆண்டில் மொத்த இலாபத்தின் வீதம் 45%

பணமாக்கப்படாத இலாபத்தின் ஒதுக்கீடு, 2009 ரூ.19,620, 2008 ரூ.3,200, 2007 ரூ.3,600, மொத்தம் ரூ.26,420.

229153

DR. T.P.M. LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY